Closed

C.D.

E.P.H. (1948) Dept.

Ms. Series.

G.O. No. 1188. Edn.

Dated : 6.5.48.

Text books - Tamil text book (for detailed study) for the VIII Std. public Examinations - printing of -

(38)

(2)

E.P.H.(G3) Deptt.

MEMO.No. 96559-83-47-1 Edn. dated 17.12.47.

43 18/12

Sub: Text books - Tamil Text book (for detailed study) for the VIII Standard Public Examination, 1948 - PRINTING.

The attention of the D.P.I. is invited to the Tamil Text Book (for detailed study) for the VIII Standard Public Examination, 1948. The book is printed just like a report of Government Books printed like this are not suitable for children. The Director is requested to report whether he had issued any instructions about the printing of the book, e.g., get-up of the book, paper to be used, nature of type, etc.

2. The S.G.P. is requested to state the reasons for printing the Tamil Text book (for detailed study) for the VIII Standard Public Examination, 1948, on such bad paper, and using such small type, making it difficult for children to read. He is also requested to report whether the book cannot be printed in a more attractive form, using bleached paper and bold type and leaving more space between the lines. There should be sufficient space between parts and between the pieces comprising each part. He is also requested to state whether arrangements may be made to get the book printed in private presses, if the Government Press cann[ot print] it in the form desired.

17/12/47

To

The D.P.I. (para 1 only)

The S.G.P. (para 2 only)

From
A. Lepper Esq.,
Superintendent,
Government Press, Madras.

To
The Secretary to Government
Education & P.H. Department
Fort St. George, Madras

ASST. SECRETARY TO GOVERNMENT
26 JAN 1948
EDUCATION AND PUBLIC HEALTH DEPT.

No. MR/DS. Dated:- 23-1-1948.

Sir,

Sub:- VIII Standard Text Book - Printing -
Ref:- Memorandum No.96559-G.3-47-1 Edn. dated 17-12-1947.

I have the honour to state that as at the time of printing
was not available and I was being pressed for copies, unbleached pap
as a measure of economy the spacing between lines has been suspended
economy came into force. I am enclosing herewith a proof of a page c
out and printed on white paper which should make the types more read
strain to the eyes of children. The form of the book is in comformit
other text books such as books prescribed by S.S.L.C., T.S.L.C., E.S.L
selections from different books are compiled to form a text.

I regret that type other than that used are not available in
if Government desire that the book should be printed in a private Pre
objection to do so but the price per book will be higher.

There have been several complaints regarding the types of the I
languages available in the Press. I am going through the question of cha
I will be putting up to Government shortly a report on this matter and t
expenditure that will be involved for Government's sanction.

Superintend

L.S. 23/1.

Copy to the Secretary, Text Book Committee, Nungambakkam with refe
to his letter R.C.No.823/C/4 dated 9-12-47 and 13-1-48.

Sd/- A. Lep
Superintende

C.F. 32.

EDUCATION Department

From (Name) SRI D.S.REDDI,M.A.(Oxon)

Designation DIRECTOR OF PUBLIC INSTRUCTION,

Station MADRAS.

Received ____ Registered ____

To

The SECRETARY TO GOVERNMENT, EDUCATION AND P.H. DEPARTMENT, FORT ST.GEORGE, MADRAS.

Enclosures:

No. RC. 29/J/48 dated 16th February 1948.

Sir,

SUB:- Text Books = Tamil Text Book (for Detailed Study) for the VIII Standard Public Examination = 1946 = Printing:

REF:- Government Memorandum No.96559/G.3/47-1 Education dated 17th Decr.1947.

I have the honour to report that Government in their Order No. MS. 2442, Education and Public Health, dated 24th December 1940, sanctioned the departmental publication of the text books in the Principal Languages for the VIII Standard Public Examination and copies of the books were printed at the Government Press, Madras.

2. In connection with the text books published for the first examination held in 1942, the printing of the Tamil Text Books was badly done as the type used for printing was very small, broken or worn out. The Superintendent, Government Press, was, therefore, requested by the Secretary to the Commissioner for Government Examinations to use better types, good white paper for printing the text books and to leave sufficient space between the lines, printing only 35 lines on each page of the book. The same instructions were repeated every time in connection with the printing of text books. As regards the get up of the text books, it is the same from 1942, similar to the text books in languages printed for the last over two decades in connection with the S.S.L.C. Examinations.

3. Attention, is in this connection invited to the letter to Government No.MR/DS dated 23rd January 1948 from the Superintendent, Government Press, Madras and the sample proof of a page of matter sent by him. While the quality of paper used may be accepted, I may remark that the type in the sample is small. It should be larger in size. The number of lines per page may be restricted to 30 so that more space between the lines may be provided.

4. Unless the types are changed as reported by the Superintendent, the question of printing the books in private presses may be taken for consideration.

for DIRECTOR OF PUBLIC INSTRUCTION.

KAN.17/2

(5)

Education & Public Health (B) Dep

MEMORANDUM No. 96559 B3-47-3 Edn. d/5-3-1948.

Text-books - Tamil Text Book (for detailed study) for the VIII Standard Public Exam. 1946 - Printing of.

From the S.G.P. MR/DS, dated 23.1.1948. p.3 ef
From the D.P.I. RC.29/J/48, dated 16.2.48. p.9 eb

The S.G.P. is informed that the type used for the printing of the Tamil Text Book (for detailed study) for the VIII Standard Public Examination should be larger in size than that used in the sample proof of a page of matter sent with his letter cited above; the number of lines per page should also be restricted to 30 so that more space between the lines may be provided. He is requested to state what the price per book will if after carrying out the above suggestions, the books are printed -

(1) in the Government Press, and

15/6/3

p.9 eb
pp 5-8 eb
p.9 eb
p.4 mb

-2-

(2) in private press.

is also re[illegible]ested to furnish information separately as to [illegible]t the pri[illegible] per book will be if the books are printed [illegible]e Govt. [illegible]ress with only 30 lines per page with the [illegible]lable s[illegible]ll types and with large types as proposed [illegible]re.

To the S.G.P.

From
A. Lepper Esq.,
Superintendent,
Government Press, Madras.

To
The Secretary to Government,
Education & Public Health Department,
Fort St. George, Madras.

x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x-x

No.Comp/Mis. Dated 7th April, 1948.

Sir,

ASST. SECRETARY TO GOVERNMENT
9 - APR 1948
EDUCATION AND PUBLIC HEALTH DEPT.

Sub: Text books - Tamil Text Book (for detailed study) for the VIII Standard Public Examination - Printing of.

With reference to Government Memorandum No. 96559-G-3-47-3 Edn., dated 5th March, 1948 I have the honour to forward herewith a specimen proof setup in 10 point type restricting 30 lines to a page in Demy 8vo size with more space between the lines. I hope that this will be approved by Government and early orders passed to proceed with the work.

26264

2. As regards the sale price of this publication I have to state that an uniform price is generally fixed based on the total number of copies printed in all the five languages viz., Tamil, Telugu, Urdu, Kannada and Malayalam. So, the question of fixing the price taking into consideration the Tamil edition only does not arise.

Superintendent.

RGM.

Edn. & P.H.(G3) Dept.

Special

(7)

MEMORANDUM No. 96559-G3·47-5 Edn dt 5-5-1948.

Text-Books - Tamil Text-Book (for detailed study) for the VIII Standard Public Examin[ation] - Printing of.

---

p 3 cf From the S.G.P.No.MR/DS, dated 23-1-1948.
p. 9 cf From the D.P.I. RC.29/J/48, dated 16-2-1948.
p. 13 cf From the S.G.P. No.Comp/Mis. dated 7-4-1948.

The ~~D.P.I.~~ D.P.I. is informed that the print used [in] the specimen proofs sent by ~~the S.G.P.~~ the S.G.P. with his lett[er] cited above ~~are~~ is not quite good and it will b[e] a stra[in] for the children to go through such types. [F]urther t[he] present size of the book which is the one normally adopte[d] for Govt. reports should be changed to the usual book size and the paper used for printing the book should [be] better in quality. If the Govt. Press is not abl[e] to print the books ~~as per~~ according to the above specifications, the ~~Director can make~~ arrangements should be made for printing the books in private presses. ~~He should take~~ necessary action

p. 5 cf.

p. 6 cf.

...on urgently in the matter so that the books are (Copies made available) ...inted and ~~published~~ in time before the next school ...ear begins. If the books are printed in private presses, the sale price of the books should be so fixed that no loss is involved to Govt. by the transaction.

To
The D.P.I. (with specimen proofs)
" S.G.P.

6-5-48

5-5-48

pp 5-7 and 15-18 ogl.

be
F

ASST. SECRETARY TO GOVERNMENT
4 - MAY 1948
FINANCE DEPARTMENT

OFFICE OF THE ...
25 JUL 1947
MADRAS

GOVERNMENT OF MADRAS

THE TAMIL TEXT-BOOK

(FOR DETAILED STUDY)

FOR

THE EIGHTH STANDARD PUBLIC EXAMINATION 1948

SECRETARY, EDN. AND P. H. DEPT.
6 - DEC ...
GOVERNMENT OF MADRAS

PRINTED BY THE SUPERINTENDENT
GOVERNMENT PRESS
MADRAS
1947

PRICE, 10 *annas*

[illegible]

பொருளடக்கம்

I

செய்யுட் பகுதி.

பக்கம்.

I. வாழ்த்துப் பகுதி.

கட்வுள் வாழ்த்து—நாமக்கல் கவிஞர் 1

II. அறவுரைப் பகுதி.

1. திருக்குறள்—திருவள்ளுவர் 1
2. நாலடியார்—சமண முனிவர்கள் 2
3. பழமொழி—முன்றுறையரையனுர் 2
4. நான்மணிக்கடிகை—விளம்பி நாகனுர் 2

III. தொடர்நிலைச் செய்யுட் பகுதி.

1. அரிச்சந்திர புராணம்—வாய்மையின் வெற்றி—வீர கவிராயர் 3

IV. பல்சுவைப் பகுதி.

1. புறநானூறு—ஈன்று புறந்தருதல்—பொன் முடியார் 4
2. சீட்டுக்கவி—அந்தகக்கவி வீரராகவ முதலியார் 4
3. சீதக்காதியின் கொடைத்திறன்—படிக்காசுப் புலவர் 5
4. கண்ணன்—என் தோழன்—பாரதியார் 5
5. ஒரு பறவையின் சிந்தனை—சி. தேசிகவிநாயகம் பிள்ளை 5

II

உரைநடைப் பகுதி.

1. இராமகிருஷ்ணர்—வித்வான் அன்பு கணபதி 7
2. திருக்கேதார யாத்திரை—தி. சு. அவினுசிலிங்கம் 9
3. ஓவியமும் சிற்பமும்—வித்வான் மா. இராசமாணிக்கம் 13
4. மாணவருக்கு அறிவுரை—காந்தி அடிகள் 16
5. வள்ளல் பேகன்—ஒரு நாடகம்—சிவ. குப்புசாமி பிள்ளை 21
6. மீண்டும் குழந்தையாக்கு—சு. குருசாமி பி.எ., எல்.டி. 24
7. கடலும் கடலையும்—மகிழ்நன் 29
8. பங்கா இழுத்த பாவலர்—டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் 32
9. காலத்தின் அருமை—டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார், எம்.எ., பி.எச். டி. 34
10. பாரதியாரின் கடிதம்—சி. சுப்பிரமணிய பாரதியார் 37
11. தமிழுணர்ச்சி—யோகி. சுந்தானந்த பாரதியார் 38
12 போப்பையர்—ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ., பி.எல். 40
13 குறிபபுரை 44

மனப்பாடம் செய்யவேண்டிய பகுதிகள்.

	செய்யுள்.	வரி
1. திருக்குறள்	..	10
2. அரிச்சந்திர புராணம்	6, 7, 10, 11, 12	20
3. ஈன்று புறந்தருதல்	..	6
4. கண்ணன—என் தோழன்		16
	மொத்தம் ..	52

அடியிற் கண்ட கவிதைகள், கட்டுரைகளை வெளியிட அன்புடன் அனுமதி தந்த அவற்றின் உரிமையாளர்களுக்கு மனமார்ந்த நன்றி உரித்து.

1. கடவுள் வாழ்த்துப் பாடல்—தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை.
2. கண்ணன்—என் தோழன—பாரதி பிரசுராலயம், திருவல்லிக்கேணி, சென்னை.
3. ஒரு பறவையின் சிந்தனை—புதுமைப் பதிப்பகம், காரைக்குடி.
4. திருக்கேதார யாத்திரை—திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார்.
5. ஓவியமும் சிறபமும்—தி. மாடல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை.
6. மாணவருக்கு அறிவுரை—புதுமைப் பதிப்பகம், காரைக்குடி (மாணவருக்கு என்ற நூலிலிருந்து).
7. வள்ளல் பேகன்—திரு. சிவ. குப்புசாமி பிள்ளை.
8. மீண்டும் குழந்தையாக்கு—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.
9. கடலும் கடலையும்—தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
10. பங்கா இழுத்த பாவலர்—திரு. சா. கலியாணசுந்தரம் அய்யர், சென்னை.
11. காலத்தின் அருமை—டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார், எம்.ஏ., பி.எச்.டி.
12. பாரதியார் கடிதம்—திரு. பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை.
13. தமிழுணர்ச்சி—அன்பு நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சிறுப்பள்ளி (சிலம்புச்செல்வம் என்ற நூலிலிருந்து).
14. போப்பையர்—திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, பதிப்பாளர், திருநெல்வேலி. திரு. சா. பி. சேதுப்பிள்ளை.
15. இராமகிருஷ்ணர்—வித்வான் திரு. அன்பு கணபதி; தி. நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை.

1. செய்யுள்.

I. வாழ்த்துப் பகுதி.

கடவுள் வாழ்த்து.

1. அல்லா வென்பார் சிலபேர்கள்
அரன் அரி யென்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லா மிப்படிப் பல பேசும்
ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே!

2. அந்தப் பொருளை நாம் நினைத்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

—நாமக்கல் கவிஞர்.

II. அறவுரைப் பகுதி.

1. திருக்குறள்.

புதல்வர் கடமை.

1. மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்.

தந்தை கடமை.

2. தந்தை மகற் காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

பணிவுடைமையும் இன்சொல் கூறுதலும்.

3. பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவற்(கு)
அணி; அல்ல மற்றுப் பிற.

அடக்கத்தின் சிறப்பு.

4. எல்லார்க்கு நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

உயர்ந்த எண்ணம்.

5. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

—திருவள்ளுவர்.

2. நாலடியார்.

துன்ப மடையாதவர்.

1. அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

நட்பு ஆராய்தல்.

2. யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்; யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

—சமண முனிவர்.

3. பழமொழி.

குலவித்தை கல்லாமல் வருதல்.

1. உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

அறிவின் மாண்பு.

2. அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனும்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின்.

—முன்றுறையரையனார்.

4. நான்மணிக்கடிகை.

1. மகனுரைக்கும் தந்தை நலத்தை ஒருவன்
முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை—அகனீர்ப்
புலத்தியல்பு புக்கா னுரைக்கும்; நிலத்தியல்பு
வானம் உரைத்து விடும்.

2. இன்சொலான் ஆகும் கிழமை; இனிப்பிலா
வன்சொலான் ஆகும் வசைமனம்—மென்சொலின்
நாவினான் ஆகும் அருள்மனம் அம்மனத்தான்
வீவிலா வீடாய் விடும்.

—விளம்பி நாகனார்.

III. தொடர் நிலைச் செய்யுட் பகுதி

1. அரிச்சந்திர புராணம்.

வாய்மையின் வெற்றி.

1. 'துட்டி யாமிவள் குழவியைத் துணித்தனள் என்னாத்
திட்டி யாற்கண்டோம்', எனச்சில ரிவளையைப் பிடித்துக்
கட்டி வந்தனர்; 'கட்டொடுங் கொண்டுபோய்க் களத்தில்
வெட்டு வித்திடு'ன் றீந்தனன் காசியர்வேந்தன்.

2. மின்னைக் கைக்கொடு கட்டினை யிறுகுற விசித்து
மன்னைக் கைதொழு தேத்தித்தன் சேரியில் வந்து
பின்னைத் தன்வயின் விலைபட்ட அயோத்தியர் பெருமானைத்
தன்னைக் கூவியே யவன்கையிற் றையலைக் கொடுத்தான்.

3. 'என்ன பாதகஞ் செய்தனம்!' எனவிறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னு மாமணித் தோரண வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திறுத்தான்.

4. உற்ற நாளையில் வசிட்டன் அவ் வும்பர்கோன் தனக்குக்
'கொற்ற வா! நினக் கியான்புகல் கோதிலா விடத்தே
அற்றை நாள்முதற் கௌசிக னமைக்குமூ றனைத்தும்
இற்றை நாள்விடுங் காண்போம்; நீ எழுக!' என்றிசைத்தான்.

5. தாமும் வார்சடை மாமுனி யவ்வுரை சாற்றச்
சூழு மாதருந் தும்புரு நாரதர் தாமும்
வாழும் வச்சிர பாணியும் வசிட்டனு மியாரும்
ஏழு பாலருங் காணவந் தந்தரத் திருந்தார்.

6. அந்த வேலையிற் கௌசிகன் விரைந்துவந்(து), 'அரசே!
இந்த நோதக வெய்தலென்? எனக்குநீ முன்னம்
தந்த நாடு, 'யான் தந்திலேன்,' எனுமொழி சாற்றி
உந்த நாடுமிவ் வுயிர்களும் பெறுவெ'ன வுரைத்தான்.

7. 'பதியி ழந்தனம்; பாலனை யிழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; இனிஎமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்,' என்றார்;
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

8. மறைந்து போகலும் வாசவன் மாமுனி வனைக்கூய்,
'அறைந்த காரண மறிந்துபோ!' எனஅரு ளழைத்தான்;
நிறைந்த நாணமும் குறைந்தபார் வையுமுற நினைவு
குறைந்தி ருந்தனன் முகிலிடத் தவருடன் கூடி.

9. வாசத் தார்புனை வாசவ னுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர் பாசங்கை பற்றிப்
பேசத் தான்பெறான் பிணஞ்சுடு கோலினாற் றள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர் நெடுநில முற்றான்.

10. 'வழக்கி னென்றுநீ வழிபடுந் தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கியீண் டிரு,' எனக் கிளிமொழி மடந்தை
பழக்க மானவக் கணவனைப் பரவி,' என் றாவி
இழுக்கற் கஞ்சிநீ யறம்வழு வேல்,' என இயம்பும்.

11. 'உலகு யிர்க்கெலாம் பசுபதி யொருமுத லாயின்
அலகில் சீருடை யவன்மொழி மறையெனின், அதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மையீ டிலதேல்,
விலகு றுமலவ் வாய்மையே விரதமாக் கொளின்யான்.

12. 'நெறியி னன்னவென் றனைவிடா நிறையிவட் குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுக! இல் லெனின் இவள் இறுதி
பெறுக' என்றுவாள் வீசினன்; பேதைதன் கழுத்தில்
மறுவ ணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள்.

—வீர கவிராயர்.

IV. பல்சுவைப் பகுதி.

1. புறநானூறு.

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே.
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—பொன்முடியார்.

2. சீட்டுக்கவி.

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்(து)
எழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கும்ஓலை:
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க:
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பற்றிக்கொ லாதகோணம்,
பறவாத கொக்கு, அனல் பண்ணாத கோடை, வெம்
படையில் தொடாதகுந்தம்,
சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்,
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே!

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

3. சீதக்காதியின் கொடைத்திறன்.

1 ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்குங்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

2 ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன எட்டிமரங்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் மால்சீதக் காதி யொருவனுமே.

—படிக்காசுப் புலவர்.

4. கண்ணன் என் தோழன்.

1 கேட்ட பொழுதிற் பொருள் கொடுப்பான்; சொல்லுங்
கேலி பொறுத்திடு வான்; —எனை
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடு வான்; —என்றன்
நாட்டத்திற் கொண்ட குறிப்பினை யிஃதென்று
நான் சொல்லுமுன் னுணர்வான்; —அன்பர்
கூட்டத்திலே யிந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுளரோ?

2 உள்ளத்திலே கருவங் கொண்ட போதினில்
ஓங்கி யடித்திடு வான்; —நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னா லங்கு
காறி யுமிழ்ந்திடு வான்; —சிறு
பள்ளத்திலே நெடு நாளழுகுங் கெட்ட
பாசியை யெற்றிவிடும்—பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடு வான்.

—பாரதியார்.

5. ஒரு பறவையின் சிந்தனை.

முட்டைக் கரு.

1 ஆதியில் ஒருசிறு வீட்டை அண்டியான்
ஏதுமங் கொருகுறை இன்றி வாழ்ந்தனன்
ஓதுமிவ் வுலகுருச் சிறுத்து ருண்டவோர்
சோதிவெண் நீல்நிறத் தோடென் றெண்ணினேன்.

கூட்டில் குஞ்சு.

2 வீடிது வீழ்ந்திட வேறு மோரிடம்
கூடியே சிலதினம் குடியி ருந்தனன்
ஈடறு வையகம் உலகம் என்அனை
நாடிய காப்பகம் என்று நம்பினேன்.

இறகு முளைக்கும் சிறு பறவை.

3 கண்ணுறு பொருளவை காண ஓர்தினம்
எண்ணினென் கூட்டரு கிறங்கி நின்றனன்
திண்ணிய உலகிலே தழைமிற் செய்ததாம்
புண்ணிய மில்விழி பொருந்தினே னென்றேன்.

பறக்கும் பெரும் பறவை.

4 முடிவினில் மரந்தழை முகடு தாண்டிவிண்
படுமெழில் நீலநிறப் பரப்பைக் கண்டனன்
தொடுமுல குண்மையில் எங்ஙன் தோன்றுமோ
அடிமுடி அறிகிலன் அறிவர் யாவரே.

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

II. உரைநடைப் பகுதி.

1. இராமகிருஷ்ணர்

[வித்துவான் அன்பு கணபதி]

புதுமையை விரும்புவதிலும், வெளி மயக்கில் வீழ்ந்து விட்டிலைப் போல அழிவதிலும் இந்தியருக்கு இணையாக உலகில் வேறு எவரையும் கூற முடியாது. ஒரு பொருளின் நன்மை தீமையை ஆய்ந்து பாராது புதுமை என்ற அளவில் அப்படியே அதனை எடுத்தாளுவது இந்தியரின் இயற்கைக் குணமா யிருக்கிறது. ஆங்கிலேயர் நம் நாட்டிற்கு வந்த பிறகு, அவர்களிடம் கண்ட பழக்க வழக்கங்களையும், நடை உடை பாவனைகளையும் நம்மவர் மேற்கொள்ளத் தொடங்கினர். இந்தியர் தம்முடைய பழங்கலை, நாகரிகம் இவைகளைக் கைவிட்டனர். இந்நிலையில் இந்தியரின் பண்டைப் பெருமைகளை உணர்த்தி, அவர்களை நல்வழியில் திருத்த இராமகிருஷ்ணர் தோன்றினார்.

வங்கத்தில் **காமர்புகூர்** என்னும் ஒரு சிற்றூர் உண்டு. அவ்வூரில் குதிராம் என்ற ஓர் அந்தணர் தம் இல்லக்கிழத்தியாகிய **சந்திரமணி** என்பாருடன் வாழ்ந்து வந்தார். இவ்விருவருக்கும் திருமகனாராக நம் இராமகிருஷ்ணர் 1836-ம் ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ஆம் நாள் பிறந்தார். தக்க வயதில் அவர் தந்தையார் அவரைப் பள்ளிக்கு அனுப்பினர். நம் நாட்டு மக்கள் அனைவரும் மேல் நாட்டுக் கல்வியையே பெரிதும் விரும்பிக் கற்கின்றனர். இக்கல்வியைக் கற்ற பலரும் நமது பண்டை நாகரிகத்தை வெறுத்து ஒதுக்குகின்றனர்; நமது பழ நூல்களைக் கண்டு எள்ளி நகையாடுகின்றனர்; நமது மதத்தையே பொய்யென மெய் கூசாது பேசுகின்றனர்.

இராமகிருஷ்ணர் இளமையில் பள்ளியில் கல்வி பயின்றாரேனும், அப்பள்ளிப் படிப்பில் அவர் உள்ளம் செல்லவில்லை. மெய்யறிவு, அதாவது, ஞானம் பெற்று இறைவனை அறிய வேண்டும் என்னும் பேரவா அவர் உள்ளத்திற் புகுந்தது. ஆதலின், இளமையிலிருந்தே இறைவனுடைய சரித்திரத்தையும் அவனடியார்களுடைய சரித்திரங்களையும் கேட்பதில் இராமகிருஷ்ணர் விருப்பங் கொண்டார். எனவே, இறைவனைப்பற்றிப் புகழ்ந்து பாடுவதிலும், ஆடுவதிலும், அவர் சரிதங்களைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதிலும் இராமகிருஷ்ணர் இன்பங்கண்டார். இதனையறிந்த பெற்றோர் இராமகிருஷ்ணரைப் பள்ளிக்கனுப்பாது நிறுத்திவிட்டனர்.

இராமகிருஷ்ணரின் பதினேழாம் வயதில் அவர் தந்தையாராகிய குதிராம் இறந்தார். பின்னர் இராமகிருஷ்ணர் தம் தமையனார் இருந்த கல்கத்தா நகருக்குச் சென்றார். அங்கு அவர் கூறியதற்கிணங்க, **தக்கணேசுவரம்** என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு புதிய காளி கோயிலின் அருச்சகர் வேலையை ஏற்றுக்கொண்டு, சில காலம் அவண் வதிந்து வந்தார்; நாட்கள் பல செல்ல, அக்காளியின் பக்தியிலீடுபட்டு, அவளை நேரிற்காண விழைந்தார்; சில சமயம் காளிக்குப் பூசை செய்துகொண்டே மெய்ம்மறந்து நின்றுவிடுவார். இவ்வாறிருந்தும், காளியை நேரிற்காணும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. இக்காலத்தில்

இராம கிருஷ்ணருக்கு மணம் ஆகியிருந்தது. அவர் மனைவியாரின் பெயர்
சாரதாமணி என்பது. ஆயினும், அவர் தம் மனைவியாரைப் பராசக்தியாகக் கருதி
விட்டார். பின்னர் இராம கிருஷ்ணர் மூவாசைகளையும் துறந்து, ஒரு காட்டிற்
சென்று, கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்தார்.

இக்காலத்தில் ஒரு முனிவர் இராம கிருஷ்ணரிடம் வந்து, இராம கிருஷ்ண
ருக்கு மெய்யறிவு கொளுத்தி, யோக முறைகளையும் எடுத்துக் கூறிச் சென்றார்.
பின்னும் ஒரு துறவியாரால் வேதாந்தத்தின் உட்பொருளை இராம கிருஷ்ணர்
அறிந்தார். இத்துடன் இராம கிருஷ்ணர் அமைந்தாரில்லை; இஸ்லாம், கிறிஸ்
தவம் முதலிய பிற மதங்களின் நூல்களைப் படித்து அம்மதங்களின் கொள்கை
களை நன்கறிந்தார்; பிற மதக் கொள்கைகளை இந்து மதக் கொள்கைகளுடன் ஒப்
பிட்டுப் பார்த்தார்; இறுதியில் எல்லா மதங்களும் ஒரே கொள்கையைத்தான்
உலகுக்கு வழங்குகின்றன என்பதைக் கண்டறிந்தார்.

இராம கிருஷ்ணர் உலக மக்களின் நன்மையைக் கருதித் தாம் கண்ட முடிவு
களை மக்கட்கு எடுத்தோதத் தொடங்கினர். நாட்டின் பல பாகங்களுக்கும்
சென்று தாம் கண்ட முடிவுகளைச் சொற்பொழிவுகளின் மூலம் மக்களுக்குக்
கூறலானர்: மிக உயர்ந்த கருத்துக்களையும் பாமரரும் உணரும் வண்ணம்
எளிய நடையில் தெளிவாக எடுத்துக் கூறினர். உண்மையை உணர்ந்த மக்
களுள் பலர் அவரைப் பின்பற்றலாயினர். நரேந்திரர் என்னும் பெயரையுடைய
இளைஞர் ஒருவர் இராம கிருஷ்ணரிடம் அடிக்கடி வந்து அவரது நல்லுபதேசங்
களைக் கேட்டு வந்தார். நாளடைவில் நரேந்திரர் இராமகிருஷ்ணரின் மாணவராகி
விட்டார். இவரே இராமகிருஷ்ணருக்குப் பிறகு விவேகானந்தர் என்னும் பெய
ருடன் இராமகிருஷ்ணரின் கொள்கைகளைப் பரப்பி வந்தார். இவ்விவேகானந்த
ராலேயே நமது பண்டைப் பெருமையை அமெரிக்கா முதலிய மேனாட்டிலுள்ள
பெருமக்கள் உணர்ந்து, நம்மைப் போற்றத் தொடங்கினர்கள்.

“இறைவனுக்கு எதிரில் உலக மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வு இல்லாத
வர்கள். உலகில் பல மதங்கள் பல பெயருடன், பல கொள்கைகள் கொண்டன
வாயிருப்பினும், அவைகளால் கூறப்படும் பொருள் ஒன்றே. மக்களுடைய மனம்
ஒரே தன்மையானதன்று. சமூகம், சுற்றுச் சார்பு நிலை ஆகிய இவற்றால் அவை
வேறுபடுகின்றன. இதனாலேயே நாட்டிற்கு நாடு பழக்க வழக்கங்களும், மதங்
களும் வேறுபடுகின்றன. ஆனாலும், நாம் கூறியவாறு எல்லாவற்றிற்கும் கருத்
தில் ஒற்றுமையுண்டு. எனவே, பிற நாட்டினரையோ, மதத்தினரையோ தூற்று
வதோ, வெறுப்பதோ கூடாது. ஒவ்வொரு மனிதனும் கடவுளை அடையப் பாடு
படவேண்டும். நூல்களைக் கற்பதால் மட்டும் இது கிட்டாது. பரிபக்குவ நிலையை
அவன் எய்தவேண்டும்,” என்பனவே இராம கிருஷ்ணரின் முடிந்த கொள்கை
களாகும்.

இத்தகைய பெரியார் ஐம்பது ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்து, 1886-
ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் நாள் இவ்வுலகை நீத்தார். அவர் பெயரால் இன்று
இந்திய நாட்டில் பல பள்ளிக்கூடங்களும், வைத்தியசாலைகளும் விளங்குகின்றன.
பலர் அவருடைய கொள்கைகளை உலகில் பரப்பி வருகின்றனர்.

2. திருக்கேதார யாத்திரை.

[தி. சு. அவினாசிலிங்கம்.]

அன்று வெயில் இல்லை. மேகங்கள் கவிந்து கொண்டிருந்தன. எனவே, குளி ரின் கொடுமை அதிகரித்தது. கையின் விரல்கள் மரத்துப் போயின. குடையையும் தடியையும் பிடிப்பதே கஷ்டமாய்ப் போய்விட்டது. எனினும், இன்னும் கொஞ்சதூரம் தானே என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு முன் செல்லுகிறோம். ராம்பாராவிலிருந்து மூன்றரை மைல் ஒரே ஏற்றம். அதற்கு மேல் ஒன்றரை மைல் சமம் என்று சொல்லலாம். குளிரில் திணறிக்கொண்டும், பெருமூச்சு விட்டுக்கொண்டும் மெல்ல அந்த மேட்டில் ஏறினோம். அங்கிருந்து கேதார்நாத் கோயிலும், நிமிர்ந்து நிற்கும் கேதார்நாத் சிகரமும் எங்கள் கண்களுக்குத் தென்பட்டன. கேதார்நாதனுடைய முதல் தரிசனம் மனதில் அளவிலா ஆனந்தத்தையும் சாந்தத்தையும் அளித்தது. இன்னும் ஒன்றரை மைல் நடக்க வேண்டும். எனவே, தொடர்ந்து நடந்தோம்.

நடக்க நடக்க வானம் இருண்டு வந்தது. மழைத் துளிகளும் விழ ஆரம்பித்தன. ஓடோடியும் வந்து கேதார்நாத் சேர்ந்து எங்கள் பண்டாவின் இல்லத்தில் நுழைந்தோம். அங்கு நெருப்புப் போடப்பட்டிருந்தது. நெருப்பில் கை கால்களைக் காய்ச்சிக்கொண்டதும், உடம்பில் உஷ்ணம் தோன்றிற்று. எங்களிடமிருந்த கம்பளிச் சட்டைகளையெல்லாம் அணிந்துகொண்டோம். கம்பளிப்போர்வைகளையும் சுருட்டி மேலே போர்த்துக் கொண்டோம். இதற்குள் சுமார் அரை மணி நேரமாகியிருக்கும். மழைத்தூறலின் சப்தம் அடங்கி நிசப்தமாயிருந்தது. ஜன்னல் வழியாக மெதுவாய் எட்டிப் பார்த்தோம். அங்கு நாங்கள் பார்த்த காட்சி ஆச்சரியமாயிருந்தது. மழை பெய்வது நின்று உறைபனி பெய்துகொண்டிருந்தது.

உறைபனி விழுவதை முன்னால் பார்த்திராத எங்களுக்கு, அது மனதில் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கிற்று. மழை பெய்வதால் தண்ணீர் விழும் சப்தம் உண்டாகிறது. கல் மழை பெய்தால் சொல்லவேண்டியதில்லை. ஆனால் உறைபனி பெய்யும்போது நிசப்தமாயிருக்கிறது. வெள்ளைப் பூக்கள் வானத்திலிருந்து வந்து குவிகிற மாதிரியிருக்கிறது. கையில் கொஞ்சம் பிடித்துப் பார்த்தோம். வெண்ணெய் மாதிரி மிருதுவாயிருந்தது; பார்க்கப் பார்க்க ஆனந்தமாயிருந்தது. கேதார்நாதனுக்குத் தேவர்கள் தூய வெள்ளைப்பூமாரி பொழிவது போலத் தோன்றிற்று. இது தான் வானவர் பூஜையோ என்றும் மனது ஐயுற்றது. புள்ளினங்களின் சப்தமும் கேட்கப்படவில்லை. மற்றெந்த ஒலியும் கிடையாது. எங்கும் ஒரே நிசப்தம் குடிகொண்டிருந்தது. அந்த நிசப்தத்தில் நம் மனதும் நம்மையும் அறியாமல் அந்தர்முகம் நோக்கிற்று. ஒரு விதமான அமானுஷ்யமான சாந்தியும் இன்பமும் அந்த நிசப்தத்தில் நிலவியிருந்தன.

கேதார்நாத்.

கேதார்நாத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதை என் மனதைக் கவரவில்லை. ஆனால், அதன் சரித்திரம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. சுமார் ஆயிரத்து நூறு வருஷங்களுக்கு முன் என் மனம் சென்றது. அப்பொழுது இம்மலைகள் எல்லாம் பெரிய வனங்களாலும், பல கொடிய மிருகங்களாலும் நிறைந்திருக்கவேண்டும். வனங்கள் காரணமாகவே குளிரும் இன்னும் கடுமையாக இருந்திருக்கும். அந்தச் சமயத்தில், பதினாறு வயதான இளைஞர் ஒருவர் இந்தியாவின் தென்கோடியிலுள்ள தம் வீட்டிலிருந்து, புறப்படுகிறார். அக்காலத்தில் வாகன வசதிகள் இல்லை; ராஜியப் பாதுகாப்பில்லை. எனினும், அவர் பல ராஜ்யங்களைக் கடக்கிறார். பல்வேறு பாஷைகள் பேசும் பிரதேசங்களைக் கடந்து செல்லுகிறார். இந்தியாவின் கலைஞான ஒற்றுமையை நிலைநாட்டுகிறார். இந்தியாவின் வடகோடியான—அதற்கு மேல் போக முடியாது—கேதார் நாத்தில் வந்து ஒரு கோயிலைப் பிரதிஷ்டை செய்கிறார். அதற்கருகில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்து, இன்னும் நாட்டின் மூன்று திக்குகளிலும் மூன்று ஆசிரமங்களையும் நிறுவுகிறார். இவ்வளவும் எத்தனை வருஷங்களில்? ஆதிசங்கரர் காலமாகும்போது அவருக்கு வயது முப்பத்திரண்டுதான்! அதை நினைக்க நினைக்க ஆச்சரியமாயிருககிறது. அவர் எவ்வளவு சக்தி வாய்ந்த புருஷராயிருந்திருக்கவேண்டும்!

நாங்கள் சென்றபோது குளிர்காலம் ஆரம்பித்துவிட்டது. எனவே, பலர் கீழே இறங்கிவிட்டார்கள். அச்சமயம், கோயில் சிப்பந்திகளைத் தவிர, சுமார் பத்துப் பேர்தான் கேதார்நாத் முழுவதிலும் இருந்திருப்பார்கள். எங்களைத் தவிர யாத்திரிகர்களும் இல்லையென்று சொல்லலாம். கோயிலுக்குச் சென்று ஆனந்தமாய்த் தரிசனம் செய்தோம். மூர்த்தி பாறை வடிவமாய்ச் சுயம்பு லிங்கமாக அமைந்திருக்கிறது. கேதார்நாதன் சன்னிதியில் சாதிபேதம் கிடையாது. எவரும் போய்த் தம் கையினாலேயே தொட்டு, அருச்சித்து ஆலிங்கனம் செய்து, வாழ்த்திப் பாடிப் பேரின்பம் அனுபவிக்கலாம். ஆண்டவன் வழிபாடும், நம் ஊரிலிருக்கும் வழி பாட்டு முறைகளையே முற்றிலும் ஒத்திருப்பது மனதிற்குச் சந்தோஷத்தை யுண்டு பண்ணுகிறது. அர்ச்சனை, ஆராதனை, பிரார்த்தனை அனைத்தும் அங்ஙனமே. எங்கும் ஒரே அமைதி. ஆற்றின் இரைச்சலும் ஒருவாறு அடங்கி சிவசிவ என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டிருப்பது போலிருந்தது. இந்த நிசப்தத்தில் அந்தக்கரணங்களின் சேஷ்டைகள் தாமே அடங்குகின்றன. மனது உள் முகமாகத் திரும்புகிறது. மக்கள் நினைவுகள் சுபாவமாகவே ஆண்டவனை நாடி, தியானம் ஜெபம் செய்து இறைஞ்சுகின்றன.

மாலைப் பூஜைக்குப் பின் தியானம் செய்ய உட்கார்ந்தோம். காலையில் விழுந்த உறைபனி சுற்றிலுமெங்கு மிருந்தது. அந்த நள்ளிருட்டிலும் அதன் வெண்மை தோன்றியது. எங்கும் சாந்த மயம். மனதில் ஒரு விதமான எழுச்சியிருந்தது.

தியானம் முடித்துத் திரும்பியபோது வடக்குத் திக்கை நோக்கினேன். அன்று அமாவாசைக்கு ஒன்றிரண்டு தினங்கள் முந்திய தினமாகையால் எங்கும் இருள் சூழ்ந்திருக்கவேண்டும். ஆனால், வடக்கே சோதிபோல் ஒரு தோற்றம் தோன்றிப் பேராச்சரிய மளித்தது. எங்கும் நிலவியிருந்த அமைதியில் அத்தோற்றம் கம்பீரமாயிருந்தது. கேதார்நாத் ஆலயத்திற்குப் பின் புறத்தில், கேதார்நாத் சிகரம் கம்பீரமாய் நிமிர்ந்து சுமார் 24,000 அடி உயரம் நிற்கிறது (அதாவது கோயிலுக்கு மேல் சுமார் 12,000 அடி உயரம்). உறைபனியால் மூடியிருப்பதனால், வெள்ளியால் உருக்கி வார்த்தது போல், அவ்விருட்டிலும் இளம் பிறை வெளிச்சத்தில் தோன்றும் சோதிபோல் இருந்தது. அதன் சிகரத்தில் மேகங்கள் எப்பொழுதும் சஞ்சரித்துக் கொண்டிருந்தமை நரைமுடி சுருட்டை சுருட்டையாக இருந்தது மாதிரியிருந்தது. அந்த அமைதியில் யாரோ ஒருவர் ஆழ்ந்த சமாதியில் ஆழ்ந்திருக்கும் கம்பீரமான தோற்றம்! அதை ஆனந்தமாய்ப் பார்த்துக்கொண்டிருக்க இருக்க, சிவபெருமானின் எண்ணம் வந்தது.

கேதார்நாத் பிரம்மச்சாரி.

இளம் வயது—சுமார் 23, 24 இருக்கும். மாநிறம். சாதாரண உயரம். சாந்தமான முகம். சிரிக்கும்போது கொல்லென்று குழந்தை மாதிரி சிரிப்பு. அவர் பெயர் நாராயணதத்தர். அவர்தான் பிரசித்தி பெற்ற கேதார்நாத் பிரம்மச்சாரி. சாதுக்கள் உலகிலே சமீபத்தில் கேதார்நாத் சென்றவர்களில் அவரைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். நாங்கள் யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னமேயே சிலர் அவரைப்பற்றிச் சொன்னார்கள். வழியில் பலர் அவரைப்பற்றி மிக்க பெருமையுடனும், அன்புடனும் பேசுவதைப் பார்த்தோம். கோதார்நாத்திலிருந்து வருபவர்களை, பிரம்மச்சாரி எப்படியிருக்கிறார் என்று விசாரிப்பது அந்தப் பக்கத்தில் வழக்கமாயிருந்தது. ஹிமாலயத்திலே சாதனையில் உயர்ந்த சாதுக்கள் பலரைக் காணலாமென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தகையோருள் இவர் ஒருவர் என்று பலர் கூறவே, இவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எங்கள் மனதிலுமிருந்தது. எனவே, நாங்கள் கேதார்நாத் சென்ற மறுதினமே இவரைப் பார்க்கச் சென்றோம். அவருடைய இளம் வயதும், சாந்தமும் தூய்மையும் ததும்பிய முகமும் எங்கள் மனதைக் கவர்ந்தன.

அவருக்கு அங்கு, "பாராமாசி" என்று பெயர்—அதாவது பன்னிரண்டு மாதங்களும் (கேதார்நாத்தில்) வசிப்பவர் என்பது பொருள். கேதார்நாத் கோயில் வருஷத்தில் ஆறு மாதங்கள்தான் திறந்திருக்கும். மற்ற ஆறு மாதங்கள் உறைபனி பெய்து அனைத்தையும் மூடி விடும். அது சமயம் கோயில் மூடப்பட்டு, அங்கிருக்கும் மக்கள் அனைவரும் கீழ்ப் பிரதேசங்களுக்கு வந்துவிடுவார்கள். உறைபனி 10, 20 அடி கூடப் பெய்து அங்கிருக்கும் கட்டிடங்கள், குடிசைகள், மரங்கள், செடிகள்—அனைத்தையும் மூடிவிடும். அதுசமயம் யாவும் உறைபனிமயமாயிருக்கும். சுற்றிலும் பத்துப் பதினைந்து மைல்களுக்கு மக்கள் வசிக்கமுடியாது. எவரும் இருப்பதும் இல்லை. ஆனால் இப்பிரம்மச்சாரி மாத்திரம் பன்னிரண்டு மாதங்களும் அங்கு வசிக்கிறார். எனவே, அவருக்குப் "பாராமாசி" என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

எப்படி அவர் அங்கு வசிக்கிறார் என்பது யாவருக்கும் வியப்பு. குளிர் காலத்தில் அவர் அங்கேயே தங்க முதலில் நினைத்தபோது "இவருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது, இறக்க விரும்புகிறார் போலும். சாவது நிச்சயம்!" என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். வேனிற்காலம் வந்தது. கோயில் திறக்க வந்தவர்கள் அவருடைய உயிர் போன உடலைப்

பார்க்க நினைத்தார்கள். ஆனால் ஆச்சரியத்தினும் ஆச்சரியம்! அவர் இறக்கவில்லை. அவரை உயிருடனிருக்கக் கண்டார்கள். அது மாத்திர மன்று; குளிர் அதிகமானபோது நெருப்புப் போட்டுக்கொள்ளுவதற்கு விறகும், சாப்பிடுவதற்குக் கோதுமை மாவும், நெய்யும், சர்க்கரையும், சில நண்பர்கள் வைத்துப் போயிருந்தார்கள். விட்டுப்போன சாமான்கள் யாவும் அப்படியே யிருந்தன. இந்த ஆறு மாத காலமும் எப்படி அக்கடுமையான குளிரைத் தாங்கினார், எப்படி உணவருந்தாமல் பிழைத்திருந்தார் என்பது இன்னும் பலருக்கு விளங்காத பேராச்சரியமாக இருக்கிறது.

பிரம்மச்சாரியின் தூய்மையும், தியாகமும் எளிய தன்மையும், புனித வாழ்க்கையும் அவரைச் சந்திக்கும் எல்லோர் மனதையும் கவர்ந்தன. அவர் பெயர் யாத்திரை உலகமெங்கும் பரவிற்று. கேதார்நாதனைத் தரிசிக்க வருபவர்கள் அவரையும் தரிசிக்க விரும்பினார்கள். பல செல்வந்தர்கள் அவருக்குப் பல சௌகரியங்கள் செய்துகொடுக்க முன் வந்தார்கள். ஆனால், அவர், அவையனைத்தையும் வேண்டாமெனத் தள்ளிவிட்டார். "ஆண்டவன் அருளிருக்கும்போது மற்றவை எதற்கு?" என்கிறார்.

எங்களுடன் வந்த ஞானானந்த ஸ்வாமிகளுக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் மூலம் எங்களுக்கும் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. கேதார்நாத்திற்கு வடக்கிலிருக்கும் பனிக் குன்றுகளின் மேலும் கீழ்ப் புறத்தில் ஒரு குன்றின் மேலிருக்கும் கேதார்நாத் பைரவன் கோயிலுக்கும் எங்களை அவர் அழைத்துச் சென்றார். அக்கடுங்குளிரைத் தாங்கப் பல கம்பளிச் சட்டைகளும், பூட்சும், கம்பளி மேஜோடுகளும் நாங்கள் அணிந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், அவர் உடம்பின் மேல் ஒரு தனிப்போர்வையைத் தவிர வேறொன்றில்லை; காலிலும் ஒன்றுமில்லை. தலைக்கும் ஒரு பாதுகாப்புமில்லை. அக்கடுங் குளிரிலும் எந்தவிதமான பாதுகாப்புமின்றி எப்படி அவர் இருக்கிறார் என்பது எங்களுக்கு வியப்பாக இருந்தது.

பேசும்போது சில சமயங்களில் அவர் சிரித்த சிரிப்பின் சப்தம் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆ! அதில் என்ன குழந்தை போன்ற கவலையற்ற தன்மை! என்ன ஆனந்தமாக இருக்கிறார்! ஈசுவரன் ஆனந்த மயனல்லனோ? அவனை உபாசிப்பவர்களும் ஆனந்தமயமாயிருப்பார்கள் என்பதற்கு இதுவே சான்று என்று தோன்றுகிறது. கேதார்நாத்திற்கு யாத்திரை வருபவர்கள் பலர், காவி போட்ட சாதுக்களும், கிரஹஸ்தர்களும், அவரை வந்து காணுகிறார்கள். அவரைப் போற்றி வணங்குகிறார்கள். ஆனால் அவர் இவற்றால் பாதிக்கப்படாமல் குழந்தை மாதிரி யிருந்துவருகிறார்.

டிசம்பர் மாதத்தில் நான் இதை எழுதிக்கொண்டிருக்கிறேன். இப்பொழுது கேதார்நாத் முழுதும் உறைபனியால் மூடப்பட்டு, மரங்கள், செடிகள், காடுகள், மலைகள், கோயில், கட்டிடங்கள் அனைத்தும் உறைபனி மயமாயிருக்கும். மனித வாசனையே அதற்குப் பக்கத்தில் இராது. மிருகங்களும் அக்கொடிய குளிரில் அங்குவர அஞ்சும். இந்த இளம் பிரம்மச்சாரி மாத்திரம் அங்கே தனியாயிருந்து தவஞ் செய்து கொண்டிருக்கிறார். இல்லை, இல்லை: தனியே அன்று. கேதார்நாதன் அவருக்குத் துணையாக இருக்கிறான்!

விடைபெறுதல்.

கேதார்நாத்தில் நாங்கள் இருந்த தினங்கள் மிக்க இன்பமாய்க் கழிந்தன. மனித வாழ்க்கையின் லட்சியம் அங்குத் தென்பட்டது போலிருந்தது. சாதாரணமாக நம் வாழ் வனைத்தும் உடலைச் சார்ந்தது. இவ் வாழ்வாவது மாயம், இது மண்ணுவது திண்ணம், ஆதலால் "தாழாது அறம் செய்மின்!" என்று ஒரு சக்தி அங்கு நமக்கு உணர்த்தியது. "இப்புலன்களுக்கு மேற்பட்ட வாழ்க்கை யொன்றுண்டு. அஃது இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் அளிக்க முடியாத தொரு பேரின்பத்தை அளிக்க வல்லது. அதை நாடுமின்!" என்று அவ்விடத்தைய வாயு மண்டலமே நமக்கு அசரீரியாயிருந்து உபதேசித்தது. இப்பேரின்பம் பெறுவதில் போட்டியில்லை; சண்டையில்லை. நாடுவோர் அனைவருக்கும் அஃது உண்டு. நாடாதார்க்கும் அது காத்துக் கொண்டிருக்கிறது, நாடும்போது கிடைக்க. பனி உருகி ஆறாகச் சதா ஓடி ஒலித்துக்கொண்டிருக்கும் கங்கை, "பேரின்ப வெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய் ஓடுகிறது . . . . . . சேரவாரும் ஜகத்தீரே!" என்று அனைவரையும் கூவியழைப்பது போலிருந்தது.

கடைசியில் கேதார்நாத்திலிருந்து விடைபெறும் நாள் வந்தது. காலையில் ஆலயம் சென்று கேதார்நாதன் அடிபணிந்து தொழுதோம். வழிபாடு முடிந்து எங்கள் ஜாகைக்குத் திரும்பி, உணவருந்திக் கொஞ்சம் இளைப்பாறிப் புறப்பட்டோம். ஒன்றரை மைல் சமமெனச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? அங்கேதான் கேதார்நாத்தின் கடைசிக் காட்சி தென்படுகிறது. அங்கேதான் நாம் கேதார்நாதனிடம் விடைபெற்றுக் கொள்ளவேண்டும். மனதில் ஒரு விதமான கனிவும், உணர்ச்சியும் நிறைந்திருந்தன. சில க்ஷணங்கள் கண் மூடிப் பிரார்த்தனை செய்தோம். "ஹே தேவ தேவ, எங்கள் மனதில் போதுமான பக்தியில்லை. உன்னை உறை விடமாகக் கொள்ளத்தக்க உயர்ந்த தூய்மையில்லை. எனினும், சகலத்திற்கும் உயிர்க்குயிராய் இலங்கும் நீ எங்கள் உள்ளத்தையும் கோயிலாகக் கொள்வாயாக!" என்ற எண்ணம் தானாகவே மனதில் தோன்றிற்று. கண்களில் நீர் துளித்தது. கடைசியாக ஒரு முறைக் கேதார்நாதனை நோக்கித் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பிக் கீழே இறங்க ஆரம்பித்தோம்.

3. ஓவியமும் சிற்பமும்.

[வித்வான் மா. இராசமாணிக்கம், எம்.ஓ.எல்., எல்.டி.]

ஓவியம் என்பது சித்திரம் தீட்டுதல். சிற்பம் என்பது கல், செம்பு, வெண்கலம் முதலிய உலோகங்களைக்கொண்டு உருவங்களை அமைத்தல். இவ்விரண்டு கலைகளும் நாகரிக நாட்டுக் கலைகள் ஆகும். இவை இரண்டும் இல்லாத நாடுகள் பிற்போக்கு நாடுகள் எனப்படும். இந்தியா இவ்விரு கலைகளையும் பண்டுதொட்டே வளர்த்து வந்தது.

சிந்து, பஞ்சாப் மண்டிலங்களில் புதைந்து கிடந்த மொஹெஞ்சொ-தரோ, ஹரப்பா என்னும் பழைய நகரங்கள் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை. அங்குக் கிடைத்த கற்சிலைகள் வியக்கத்தக்க வேலைப்பாடு கூடியனவாக இருக்கின்றன. வெண்கலத்தால் இயன்ற (வார்ப்படம்) நடனமாதின் சிலையைக் கண்டு வியவாத அறிஞர் இல்லை. கால் தூக்கி ஆடும் நடராசர் சிலை என்று நம்பத்தக்க சிலை ஒன்றும் கிடைத்துள்ளது. மட்பாண்டங்கள், தாழிகள், பிற பொருள்கள்

இவற்றின் மீது தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் பேரழகுடன் பண்பட்ட வேலைப்பாடும் கூடியனவாக இருக்கின்றன. அவ்வோவியங்கள் எத்தகைய பழுதும் இன்றி அன்று போலவே இன்றும் இருத்தலே வியப்பினும் வியப்பு! இவற்றைக் கண்ணுற்ற ஆராய்ச்சியாளர், 'ஓவியக் கலையும் சிற்பக்கலையும் பண்டுதொட்டே இந்தியர்க்கு உரியனவாக இருந்து வருபவை' என்று முடிவு கூறுகின்றனர்.

இக்கலைகள் உண்டாகக் காரணம் என்ன? மனிதன், தனக்கு உண்டாகும் அறிவுப் பெருக்கம் ஒரு வகையில் அளவுக்கு மேற்படுமாயின், அதனைத் தன் உள்ளத்து உணர்வினின்றும் வெளிப்படுத்துகிறான். அவன் நாவலன் ஆயின் காவியத்தின் வாயிலாக வெளிப்படுத்துகிறான். படக்காரன் ஆயின் ஓவியத்தின் வாயிலாக வெளிப்படுத்துகிறான். உருச்சமைப்போன் ஆயின், உருவங்கள் மூலமாக வெளியாக்குகிறான். இங்ஙனம் உணர்ச்சி வெளிப்படுதலால் உருப்பெறும் ஒன்றே கைத்திறன் (Art) என்பது. இத்திறன் பணத்தின் பொருட்டு உண்டாவதன்று; உள்ளத்து உணர்ச்சி மேலீட்டால் உண்டாவதே ஆகும். இத்திறமை நல்வழியிற் பயன்படுமாயின், இதனை அழகிய ஓவியங்கள், சிற்பங்கள், கவிகள், கட்டடங்கள் முதலியவற்றில் கண்டு களிக்கலாம்; மாறுபடுமாயின் விகார வடிவங்களிற் கண்டுவெறுக்கலாம்.

இவ்வாறு உள் உணர்வின் தெளிந்த நிலையில் பெருக்கெடுத்து வெளிப்போந்த கைத்திறனாற்றான் பாபிலோன் நகரம் பேரழகுபெற்றுத் திகழ்ந்தது; உலகப் புகழ்பெற்ற பண்டை ரோமாபுரி வனப்புற்று வாழ்ந்தது; நமது நாட்டிலும் சாஞ்சி, அமராவதி, எல்லோரா, மஹாபலிபுரம் முதலிய இடங்களில் உள்ள அழகொழுகும் அரிய காட்சிகள் தோன்றலாயின. இக் கைத்திறனாற்றான் கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் தாஜ் மஹால் தோன்றியது; ஐம்புலன்களைத் தம் வழிப்படுத்தும் அஜந்தாக் குகைச் சிற்பங்கள் தோன்றலாயின. மொகலாய நகரங்களாக விளங்கிய டெல்லியும் ஆக்ராவும் இன்றளவும் எழில் மிக்க ஓவியங்களையும் சிற்பங்களையும் கொண்டிருத்தலைக் காண, அவற்றைச் செய்தவரது அகத்தூய்மை நன்கு விளக்கமாகும். அப் பெருமக்கள் மறைந்தனர் ஆயினும், அவர் தம் கைத்திறனை - கலை உணர்வை, அவர்தம் செயல்கள் வாயிலாக உணர்ந்து உவக்கின்றோம். மொகலாயப் பேரரசர் அரசியல் ஆண்மையாளர் மட்டும் அல்லர்; என்றும் அழியாத கலைகளை உலகிற்கு உணர்த்திய பெருமக்களும் ஆவர்.

சித்தன்ன வாசல்.

இவ்விரு கலைகளிலும் தென் இந்தியா இளைத்ததன்று. கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல் தமிழகம் புகுந்த சமண - பௌத்த முனிவர்கள் தமிழ் நாட்டுக் குகைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அக்குகைகளில் பல அரிய சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர்; சித்திரங்களைத் தீட்டியுள்ளனர். அவர் தம் மதங்களைத் தழுவிய பிற்காலத்தரசர் பலரும் குகைக் கோவில்களை அமைத்தனர்; வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோவில்களை அமைத்தனர். இங்ஙனம் தமிழகத்தில் முதலில் பல குகைக் கோவில்களை அமைத்த பேரரசன் மஹேந்திர வர்மன் என்னும் பல்லவ அரசன் ஆவான். இவன் முதலில் சமணனாக இருந்து, பின் அப்பரால் சைவனாக மாறியவன். இவன் காலம் கி.பி. 600 - 630 ஆகும். இவன் அமைத்த குகைக் கோவில்களில் ஓவியமும் சிற்பமும் ஒருங்கே கண்டு களிக்கலாம். அவற்றுள் சித்தன்னவாசல் என்னும் ஊரில் உள்ள குகைக் கோவில் சிறந்ததாகும்.

சித்தன்னவாசல் திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே இருபது கல் தொலைவில் இருக்கும் சிற்றூர் ஆகும்; நார்த்தமலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள மலை மிகச் சிறியது. அதன் மீது ஏறிச் செல்லின், அழகின் இருப்பிடமாகவுள்ள குகைக் கோவிலைக் கண்டு களிக்கலாம். அதன் முன்புறம் சுவர் மறைப்பு உண்டு. அத்துடன் இரும்பு வேலியும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கொரு காவலாளியும் காட்சி அளிக்கிறான்.

முன் மண்டபத்தில் இரண்டு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன; ஒன்று சமண தீர்த்தங்கரரான பார்சவநாதர் உருவம்; மற்றது சமண சமயத் தலைவர் உருவம். தீர்த்தங்கரர் மறுபடியும் பிறவாதவர் என்பது சமணர் கொள்கை. ஆதலின், அதனை உணர்த்த அவர் தலைமீது மூன்று குடைகள் குறிக்கப்பட்டிருக்கும். சமயத் தலைவர்கள் பிறப்புடையவர் என்பதைக் குறிக்க ஒரு குடையே குறிக்கப்பட்டிருக்கும். பார்சவநாதர் முடிமீது நாகம் ஒன்று படம் விரித்து நிழல் தருவது போலச் செதுக்கப்பட்டுளது. மூல ஸ்தானத்தில் மூன்று சிலைகள் காண்கின்றன. அவற்றுள் இரண்டு முக்குடைகளை உடையவை.

சித்தன்ன வாசல் ஓவியக் கலையில் பெயர் பெற்ற இடமாகும். பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டமையால், குகைக் கோவில் சுவர்களில் இருந்த ஓவியங்கள் அழிந்துபட்டன. ஆனால், தூண்கள், மேற்கூரை, மூலைகள் இவற்றின் மீதுள்ள காறைச் சுவர்க் கோலங்கள் (Frescoes) அழியாமல் இருக்கின்றன. இவை பண்டைத் தெளிவுடன் இராவிடினும், பண்டைப் பெருமையை அறிய விரும்பும் அறிவுடையார் கண்கட்கு அரிய விருந்தாகவே காட்சி அளிக்கின்றன. கூரையில் உள்ள சித்திரங்களே வனப்பு மிக்கவை; உணர்ச்சியை ஊட்டுபவை; கண்ணையும் கருத்தையும் கவர்பவை. வெளி மண்டபக் கூரை முதல் மூலஸ்தானம்வரை பரவியுள்ள இவ்வேலைப்பாடு சமணர் துறக்கத்தை விளக்குவதாகும். வேலைப்பாட்டின் நடுவில் அழகிய மண்டபம் ஒன்று காணப்படுகிறது. அதில் நன்னெறியில் இருந்து காலமான சமணர் (பவ்யர்), தீர்த்தங்கரர் அறமொழிகளைக் கேட்பதாகச் சித்திரங்கள் காணப்படுகின்றன. படத்தில் மூன்று பவ்யர் காணப்படுகின்றனர். அவருள் ஒருவர் செந்நிறமானவர் (செந்நிறம் தூய்மையைக் குறிக்கும் என்பது சமணர் கொள்கை). அவரது ஒரு கையில் மலர்க்கூடை இருக்கிறது. மற்றொரு கை ஒரு தாமரை மலரைப் பறிக்க முனைகிறது. ஆரஞ்சு நிறமுடைய ஒரு பவ்யர் ஒரு தாமரை மலரைப் பறித்துத் தம் இடத்தோள்மீது வைத்துக்கொண்டு நிற்கிறார். மூன்றாம் பவ்யரும் ஆரஞ்சு நிறத்தினர். இவரது இடத்தோளில் ஒரு கொத்துத் தாமரை மலர்கள் காணப்படுகின்றன; வலக்கையில் ஒரே மலர் இருக்கின்றது. இம்மூவர் சித்திரங்களும் தாமரை மலர்களும் வியக்கத் தக்கவாறு பல உறுப்புகளுடன் தீட்டப் பெற்றுள்ளன. இச்சித்திரங்கள் இயற்கை மலர்களைப் பெரிதும் ஒத்திருத்தலே வியப்புக்குரியது.

இக் குகைக் கோவில் தூண்கள் இரண்டில் காணப்படும் நடனச் சிலைகள் இரண்டும் பேரழகு வாய்ந்தவை. நடனக்கலையில் கைதேர்ந்த வேலைக்காரரே இவற்றைத் தீட்டியிருத்தல் வேண்டும். இவை உயிர் ஓவியங்களாகக் காட்சி அளிக்கின்றன; நடனக் கலையின் நுட்பமான பகுதிகளை உணர்த்தி நிற்கின்றன. தென்புறத் தூண் ஒன்றில் இச்சிற்ப - ஓவியக் கலைகளை இக் குகைக் கோவிலில்

உணர்த்த முனைந்த மஹேந்திர வர்மனது முடியுடைய தலை தீட்டப்பட்டுள்ளது. அதன் அருகில் அவன் மனைவியின் உருவமும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக் கூறின், ஓவிய - சிற்பக் கலைகளில் உணர்ச்சி கொண்ட மக்கட்குச் சித்தன்னவாசல் சீரிய காட்சிகளை நல்கும் என்பதில், ஐயமில்லை.

அழகு ஒழுகும் இந்த உலகம் இறைவனுடைய சிற்ப - ஓவியத் திறனைக் காட்டுவது. அவனது சிற்பத் திறனை மக்கட் படைப்பிலும் மலை முதலிய கனப் பொருள்களிலும் கண்டு களிக்கலாம். அவனது ஓவிய ஆற்றலை இயற்கைக் காட்சிகள் மூலம் கண்டுகண்டு இன்பம் எய்தலாம். இவ்விரண்டும் கலந்துள்ள இடமே அழகொழுகும் ஆனந்த இடமாகும். அதுவே அமைதிக்கு அமைந்த இடமாகும். அதுவே அழகு அடைக்கலம் புகுந்துள்ள இடமாகும். அழகு என்பது யாது ? கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பொலிவே அழகு என்பது. இவ் வழகுள்ள இடங்களே ஓவியங்களும் சிற்பங்களும் களிநடம் புரியும் மேடைகள் ஆகும். இத்தகைய இன்ப இடங்களில் சித்தன்னவாசல் ஒன்றாகும்.

இத்தகைய இன்பக் கலைகளை விளக்கி, இவற்றின் வாயிலாக நமது தொன்மை நாகரிகத்தை உலகிற்கு உணர்த்தி, நம் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க காட்சிக்கு இனிய நல்லிடங்களைச் சென்று காணுதல் நமது கடமை ஆகும். இவற்றைப் போற்றி வளர்த்தல் நமது தலையாய கடமையாகும்.

4 மாணவருக்கு அறிவுரை.

[காந்தி அடிகள்.]

பிள்ளைகளே உங்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் எப்போதுமே உங்கள் கைவசம் உள்ளன. இரண்டு நிபந்தனைகளை மட்டும் நீங்கள் அனுசரித்து நடப்பீர்களேயானால், பள்ளிக்கூடத்தில் நீங்கள் எதைப் படிக்கிறீர்கள் எதைப் படிக்கவில்லை என்பதில் நான் அக்கரை காட்டமாட்டேன். எந்தச் சந்தர்ப்பமாய் இருந்தபோதிலும் என்ன என்ன கெடுதல்கள் நேரிட்டாலும் பயப்படாமல் நீங்கள் உண்மையே பேசவேண்டும். இது ஒரு நிபந்தனை. உண்மையான பையன், தைரியமுள்ள பையன், எப்போதுமே புழுவிற்குக் கூடத் தீங்குசெய்ய எண்ணமாட்டான். தான் படிக்கிற பள்ளிக்கூடத்தில் மெலிந்திருக்கிற பையன்களையெல்லாம் அவன் பாது காப்பான். பள்ளிக்கூடத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவனுடைய உதவியை நாடி இருப்பவர்களுக்கு உதவிசெய்வான். இதயம், உடல், செயல் ஆகிய மூன்றிலும் பரிசுத்தமாய் இராத பையனை எந்தப் பள்ளிக்கூடத்திலிருந்தும் துரத்தியடிக்க வேண்டியது அவசியம். வீரமுள்ள பையனுடைய மனம் எப் பொழுதுமே பரிசுத்தமுடையதாயிருக்கும் ; பார்வை நேரானதாயிருக்கும் ; அவனுடைய கைகள் கெட்ட காரியங்களைச் செய்யமாட்டா. வாழ்க்கைக்கு அடிப் படையாய் இருந்துவரும் நியதிகளைக் கற்பதற்குப் பள்ளிக்கூடம் போகவேண்டும் என்பதில்லை. இந்த மூன்று குணங்களையும் கொண்டு ஒழுகி வருவீர்களே யானால், ஒரு பிரபலமான அடிப்படையின் மீது நீங்கள் கட்டிடம் கட்டப் போகிறீர்கள் எனலாம்.

உண்மையான அஹிம்சையும் தூய்மையும் உங்கள் வாழ்க்கையைப் பாது காக்கும் கேடயங்களாக விளங்கட்டும் ! உங்களுடைய மேன்மையான உயர்ந்த எண்ணங்களும் ஆசைகளும் நிறைவேறக் கடவுள் உதவி செய்வாராக !

(18)

பிள்ளைகளே, உங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் யாவரும் தூய வாழ்க்கை நடத்தவேண்டும். எண்ணம், பேச்சு, செயல் ஆகிய மூன்றிலுமே நீங்கள் பரிசுத்தமுடையவர்களாய் விளங்கவேண்டும். அப்படி நடத்தாவிட்டால், எவ்வளவு தான் படித்திருந்தபோதிலும் சரி, சிறந்த படிப்பாளிகளாக நீங்கள் விளங்கிய போதிலும் சரி, அதனால் பயனே இல்லை ; உங்கள் வாழ்க்கையே கெட்டுப்போய் விட்டதாகவே நான் சொல்வேன்.

பரிசுத்தம் என்ற சொல் முதன்முதலாக இதயசுத்தம் என்பதையே குறிக்கிற தென்னலாம். இதயத்தில் கிடப்பதே செயலாகவும், நடத்தையாகவும் வெளியே தோன்றுகின்றன். வாயைச் சுத்தமாக வைத்துக்கொள்ள விரும்புகிற பையன் ஒருக்காலும் கெட்ட சொற்களைச் சொல்ல மாட்டான். இது முற்றிலும் உண்மை. அதைப்போல அவனுடைய மனம், அறிவு ஆகிய இரண்டையும் கெடுக்கக் கூடிய பொருள்களையோ அல்லது நண்பர்களுக்குத் தீங்கு பயப்பதாயுள்ள பொருள்களையோ வாயில் திணித்துக்கொள்ளமாட்டான். இது நிச்சயம்.

பீடி, சிகரெட்டுக் குடிப்பவர்கள் யாராவது இருப்பார்களேயானல், அந்தக் கெட்ட பழக்கத்தை இனிமேல் விட்டுவிடுங்கள். பீடி, சிகரெட்டுக் குடிப்பது மூச்சைக் கெடுத்து விடும். இது வெறுக்கத்தக்க தொரு பழக்கம். பீடி சிக ரெட்டுக் குடிப்பவர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போது பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்று கவனிப்பதில்லை. பக்கத்தில் இருக்கிறவர்கள் குடித்துப் பழக்கமில்லாதவர்களாயிருப்பினும், அதைப்பற்றி அவர்கள் கவனிப்பதே இல்லை. அவர்கள் வாயிலிருந்து வரும் புகையின் நாற்றம் பக்கத்தில் உள்ளவர் களுக்கு வெறுப்புத் தருவதாய இருந்தபோதிலும் கவனியாது குடித்துக் கொண்டே இருப்பார்கள்.

எட்டி இருந்து இதைப் பற்றிச் சிந்தனை செய்யும்போது சிகரெட் குடிப்பது அற்பமான சாதாரண விஷயமாயிருக்கலாம். சிகரெட்டுப் புகை வாயில் நுழைந்து வெளிவரும்போது நச்சுத்தன்மையுள்ளதாக மாறிவிடுகிறது. இது மட்டுமல்ல. பீடி சிகரெட்டுக் குடிப்பவர்கள் கண்ட இடங்களிலெல்லாம் துப்பியும் விடுகிறார் கள்.

புகைகுடிப்பது ஒருவனுடைய அறிவை மங்கச் செய்கிறது. இது கெட்ட பழக்கம். நல்ல டாக்டரிடத்தில் இதைப் பற்றிக் கேட்பீர்களாயின், இது வயிற்றி னுள் வரும் பிளவை நோய்க்கு அடிப்படையான காரணமென்றும் அநேக சமயங்களில் தீராத கொடிய நோயை உண்டுபண்ணி விடுகிறதென்றும் சொல்வார்.

பீடி, சிகரெட்டுக் குடிப்பது உணவு வகையைச் சேர்ந்ததன்று. அப்படி யிருக்கும்போது அதைக் குடிக்க வேண்டிய அவசிய மென்ன ? பிறர் தூண்டி விட்டதைக் கேட்டுக் குடிக்க ஆரம்பிப்பதனால் முதன் முதலில் கொஞ்சம் மகிழ்ச்சியாய் இருக்கும். இதைத் தவிர இதனால் வேறொரு நலனும் இல்லை.

நல்ல பிள்ளைகளாக இருக்க விரும்பினால், பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்க விரும்பினால், பிள்ளைகளே நீங்கள் பீடி, சிகரெட்டுக் குடிக்கிற பழக்கத்தை நிறுத்தி விடுங்கள். இதனால் மீதப்படும் பணத்தைத் தயவுசெய்து எனக்கு அனுப்பிவையுங்கள். இந்தியாவில் கோடிக் கணக்காக மக்கள் பட்டினி யால் வருந்துகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் மீதப் படுத்துகிற பணம் பயன் படும்.

நான் சொன்ன செய்தியோடு இன்னொரு பெரிய செய்தியும் தோற் கொண்டிருப்பதை மாணவர்களாகிய நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டு இந்தியாவிலிருக்கும் ஒவ்வொரு சமூகத்தையும் தீண்டாமை என்கிற பிசாசு படை எடுக்கிறது. ஹிந்துக்களுக்குள்ளே காணப்படும் தீண்டாமையை ஒழிப்ப தோடு, முஸ்லிம், கிறிஸ்துவர், பார்ஸி முதலானோரிடம் காணப்படும் தீண்டா மையையும் நீக்கிவிடவேண்டும். இதுவே நான் சொல்ல வந்த செய்தியாகும். கோடிக்கணக்கான உயர்ஜாதி ஹிந்துக்களிடையே ஒரு மனமாற்றம் ஏற்பட்டு, அதனால் அவர்களுடைய இதயம் பரிசுத்த மடையுமானால்—பரிசுத்தம் அடைவது நிச்சயம்—இந்தியாவில் எல்லோரும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களாக வாழ் வோம். நம்மிடையே காணப்படும் அவநம்பிக்கையும் சந்தேகமும் ஒழிந்து விடும் என்று நான் உறுதியாக எண்ணுகிறேன். தீண்டாமை நுட்பமான பல ரூபங்களில் நம்மைப் பிரித்து வைத்து இருக்கிறது. அதனால் வாழ்க்கை இன்பமற்றதாயும் கஷ்டமுடையதாயும் இருந்துவருகிறது.

அதனாலே தான் இந்தியர்கள் யாவருமே—அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பினும் சரி—உதவி செய்யவேண்டும்; ஆதரவுகாட்ட வேண்டும் என்று சொல்லி வருகிறேன். உலகத்தாரையே உதவி செய்யவேண்டு மென்று நான் கேட்கத் தயங்கிய தில்லை. நான் அவர்களின் பண உதவியை நாடவில்லை; ஆனால் அவர்களின் அன்பு, அனுதாபம், பிரார்த்தனை ஆகிய வற்றை நாடுகிறேன். இந்தப் பிரச்சினையிலுள்ள சிக்கல்களை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கும்படி கோருகிறேன். பணத்தைக் காட்டிலும் மனப்பூர்வமான அனுதாபமே மிகவும் மேன்மையானது. பிறமதத்தினரிடத்தில் ஹரிஜனங்களு க்கு உதவி செய்யுங்கள் என்று பணத்திற்காக நான் கையை நீட்டுவதில்லை. அவர்கள் ஹரிஜனங்களுக்குக் கடன்பட்டவர்களன்று. உயர் ஜாதி ஹிந்துக்களே ஹரிஜனங்களுக்குக் கடனபட்டவர்கள். எனவே அவர்கள் தான் கடனைத் திருப் பிக் கொடுக்கவேண்டும்.

முடிவாக, இந்த இயக்கத்தில் அவநம்பிக்கை இல்லாதிருக்குமாயின், இந்த இயக்கம் மனதைப் புனிதப் படுத்தும் இயக்கம் என்றும் மத உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இயக்கமென்றும் ஹிந்துக்கள் அல்லாதவர்கள் கருதி னால் அவர்களின் இதய பூர்வமான ஆதரவையும் கொடுக்கட்டும். இது என் இதயத்திலிருந்தே பொங்கி வரும் செய்தியாகும்.

இதைச் செய்வதுடன் ஹரிஜனங்களை உடன் பிறந்த சகோதரர்களைப் போல நடத்தவேண்டுமென்று மாணவர்களுக்குச் சொல்கிறேன். அவர்களுடன் அன்போடு பேசவேண்டும். மற்றவர்களுடைய எச்சிலைப் புசிப்பது நல்ல பழக்கமில்லை என்பதை எடுத்துக் காட்டவேண்டும். வாழ்க்கையைச் செம்மையாக நடத்தும்படி சொல்லிக் கொடுக்கவேண்டும். விடுமுறை நாட்களை நல்ல முறையில் மாணவர் கள் போக்க விரும்பினால் அனேக காரியங்களைச் செய்யலாம். அவற்றில் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கிறேன்—

(1) நல்லதொரு திட்டம் போட்டு, விடுமுறை நாள் கழியும் வரையில், இரவும் பகலும் சிறிது நேரம் பாடம் சொல்லிக்கொடுக்கலாம்.

(2) ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்யலாம். ஹரிஜனங்கள் கலந்து கொள்ள விரும்பினால் அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

(3) ஹரிஜனக் குழந்தைகளை, உல்லாசமாக அழைத்துக் கொண்டு போய்க் கிராமங்களை அடுத்துள்ள காட்சிகளைக் காட்டலாம். இயற்கையை எப்படி ஆராயலாம் என்பதைச் சொல்லிக் கொடுத்து, சூழ்நிலையிலிருக்கிற விநோதங்களையும் காண்பிக்கலாம். இதனால் அவர்களுக்குத் தரைநூல், வரலாறு ஆகியவற்றில் பயிற்சி ஏற்படும்.

(4) இராமாயணத்திலிருந்தும் மகாபாரதத்திலிருந்தும் சிறு சிறு கதைகளையும் படித்துக் காட்டலாம்.

(5) பஜனை செய்யக் கற்றுக்கொடுக்கலாம்.

(6) ஹரிஜனப் பிள்ளைகளின் உடம்பில் காணப்படும் அழுக்குகளைப் போக்கி, குளிப்பாட்டலாம்—வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் சுகாதார சம்பந்தமான பாடங்களைச் சொல்லிக்கொடுக்கலாம்.

(7) குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்குள்ளவர்களின் ஜனசங்கியையைக் கணக்கு எடுக்கலாம். அங்கு ஹரிஜனங்களின் நிலை எப்படி இருக்கிறது என்பதை ஆராயலாம்.

(8) நோய் வாய்ப்பட்டுக்கிடக்கும் ஹரிஜனங்களுக்கு உதவி செய்யலாம்.

ஹரிஜனங்களிடை என்னென்ன செய்யலாம் என்பதற்கு இவை உதாரணங்களாகும். அவசர அவசரமாகக் குறித்து அனுப்பியவையாகும் இவை. சிந்தனா சக்தியுள்ள மாணவன் இன்னும் அநேக விஷயங்களையும் இவற்றோடு சேர்த்துக் கொள்வான் என்பதில் ஐயமில்லை.

இதுவரை ஹரிஜனங்களுக்கு என்னென்ன செய்யலாம் என்பதைச் சொல்லி வந்தேன். உயர்ந்த ஜாதி ஹிந்துக்களுக்கும் சேவை செய்ய வேண்டுவது இதைப் போலவே அவசியமாகும். தீண்டாமை விலக்கு சம்பந்தமான செய்தியை மாணவர்கள் உயர்ந்த ஜாதி ஹிந்துக்களிடைப் பரப்பலாம்—சரியான நம்பிக்கையூட்டும் பிரசுரங்களைக் கொண்டு எளிதாக அறியாமையைப் போக்கிவிடலாம். யார் யார் தீண்டாமை விலக்குக்கு ஆதரவாய் இருக்கிறார்கள், யார் யார் எதிர்க்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கலாம். அதோடு எந்த எந்தப் பள்ளிக்கூடம், கிணறு, குளம், கோயில் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கிறது என்பதையும் எது எது மூடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்து வைத்துக் கொள்ளலாம்.

இந்த முறையைப் பின்பற்றி உறுதியுடன் அவர்கள் வேலை செய்து வந்தால் அதனால் ஏற்படும் பலாபலன்கள் ஆச்சரியப் படக்கூடியதாக இருக்கும். தாங்கள் விடுமுறை காலத்தில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை ஒரு புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டு, விடுமுறை முடிந்ததும் அதைப்பற்றிய சிறிய அறிக்கை ஒன்று தயார் செய்து, மாகாண ஹரிஜன சேவா சங்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

நாம் மனித வர்க்கத்திற்குச் சேவை செய்யப் பிறந்திருக்கிறோம். நன்கு விழிப்பாயிராவிட்டால் தக்க முறையில் இச்சேவையை நம்மால் புரியமுடியாது. மனிதனுடைய மனதில் இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடந்து வருகிறது. வழிபாடு என்ற சிறந்த பாதுகாப்பை நம்பாதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமையாகிவிடுவான். வழிபாடு செய்பவன் மனச்சாந்தி பெற்று உலகத்தோடு ஒத்து அன்பு பூண்டு வாழுவான். வழிபாடு செய்யும் இதயமில்லாமலே, லௌகிக விஷயங்களில் ஈடுபடுகிறவன், தன்னையும் துன்பத்திலாழ்த்தி, உலகத்தையும் துன்பத்திலாழ்த்துவான். ஆதலால் இறந்த பிறகு வழிபாட்டினால் நன்மை ஏற்படும் என்பது ஒரு புறமிருக்க, இந்த உலகத்தில் வசிக்கும்போதே மனிதனுக்கு அது அளவற்ற உதவி செய்வதாயிருக்கிறது. நாள்தோறும் நாம் செய்கிற செயல்களில் ஒழுங்கையும் அமைதியையும் ஓய்வையும் நிலைபெறச் செய்வதற்கு, வழிபாடுதான் சிறந்த சாதனமாகும்.

ஆகையால் தினசரி வாழ்க்கையிலே முதல் வேலையாக இறை வழிபாடு செய்யுங்கள். மாலைவரையில் வழிபாட்டுணர்ச்சி உங்களைவிட்டுப் போகாதபடி, இதய பாவத்தொடு அதில் ஈடுபடுங்கள். எவ்விதத் தீய எண்ணங்களும் பயங்கரமான கனவுகளும் இல்லாமல் அமைதியோடு உறங்குவதற்கனுகூலமாக தினசரி மாலையிலே வழிபாடு செய்து வேலையை முடியுங்கள். வழிபாடு என்ன உருவத்தில் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி அதிகக் கவலைவேண்டாம். அது எப்படியாயினும் இருக்கட்டும்; பரம்பொருளோடு நம்மை ஒன்றுபடுத்தக் கூடிய முறையில் அது இருந்தால் போதும். முறை எப்படியிருந்தபோதிலும், வாயிலிருந்து சொற்கள் வெளிவரும் போது, மனம் அலையாமலிருக்கிறதா வென்பதை மட்டும் கவனத்தோடு பார்த்துக்கொள்ளுங்கள்.

தானாகவே ஏற்படுத்திக்கொள்ளுகிற கட்டுப்பாடு நிர்ப்பந்தமானதாகாது. ஆன்ம அடக்கமில்லாமல் மனதில் தோன்றுவதை எல்லாம் செய்கிறது, அதாவது இன்பங்களை நுகர்ந்து சுகமாக வாழ்கிறது என்று வைத்துக்கொள்பவன் ஆசைகளுக்குக் கொத்தடிமையாகிறான். சில விதிகளையும் கட்டுப்பாடுகளையும் அமைத்துக்கொண்டு அவற்றிற்கு உட்பட்டு ஒழுகுபவனோ என்றால், தன்னையே விடுதலை செய்து கொள்ளுகிறான். இப்பிரபஞ்சத்திலுள்ளவை யாவும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகிய பொருள்களும், சில விதிகளுக்கு அடங்கியே நடக்கின்றன. இந்த விதிகளினால் ஏற்படுகிற கட்டுப்பாடு இல்லாவிட்டால் உலகம் ஒரு கணநேரம் கூட நடைபெறாது. மனிதவர்க்கத்திற்குச் சேவை செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நீங்கள், ஏதாவது ஓர் ஒழுங்கை ஏற்படுத்திக்கொள்ளாவிட்டால் சிதறுண்டு போவீர்கள். ஆன்ம நெறியில் கட்டுப்பாட்டுடன் இருப்பதற்கு வழிபாடு மிக்க அவசியமானது. நாமாக ஏற்படுத்திக்கொள்ளும் தடையும் ஒழுங்குமே நம்மை மிருகத்தினின்றும் வேறுக்குகின்றன. நாம் நான்கு கால்களால் நடக்கும் மிருகங்களாயிராமல், நிமிர்ந்து நடக்கும் மனிதர்களாயிருப்பின், இந்த உண்மைகளை அறிந்து, நாமாகவே நமக்குத் தடையையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக்கொண்டு ஒழுகுவோமாக.

5. வள்ளல் பேகன்.

[சிவ. குப்புசாமி பிள்ளை.]

குறிப்பு.—வள்ளல் பேகன் வாடைக்காற்றால் வருந்தி ஆடிய மயிலைக் கண்டு, அதனிடம் இரக்கங் கொண்டு தனது ஒப்பற்ற போர்வையை அதன்மீது போர்த்தி விட்டுச் செல்கிறான். இச் செயலை அவன் மனைவியாகிய கண்ணகி பழிக்கவே பேகன் கோபங் கொண்டு அவளைத் தாய்வீடு சென்று விடுமாறு பணிக்கிறான். கண்ணகி தாய்வீடு செல்லாமல் தனியே ஒரு மலையிலிருந்துகொண்டு தன் கணவனையே எண்ணித் தவங்கிடக்கிறாள். அவளது கடுமையான நோன்பினைக் கண்ட புலவர்களான கபிலரும், அரிசில்கிழாரும் பேகனுக்கும் கண்ணகிக்கும் இடையே நின்று சமாதானம் செய்கின்றனர். அப்புலவர்கள் கண்ணகியை அணுகிப் பேசுவதோடு இங்கு நாடகம் தொடங்குகிறது.

இயல் ௪—காட்சி 1.

இடம்—பொதினி மலைச்சாரல். காலம்—முற்பகல்.

உறுப்பினர்—கண்ணகி, கபிலர், அரிசில்கிழார், தேவி (தோழி).

கபிலர் :—வாழி ! நங்காய் ! வாழி ! அரிசில் பெரும ! இவண் அமருங்கள். (அரசியை நோக்கி) அன்னாய் ! யான் ஊரில் இல்லாத காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் அறியப் பெரிதும் வருந்துகின்றேன். ஊர் வந்ததும் செய்தியுணர்ந்து, நேரே இங்கு வந்துள்ளேன். யான் கூறும் மொழிகட்குச் செவிசாய்த்தருளவேண்டும். கழிந்தது கருதி வருந்துவது அறிவீனமாகும். ஆனால் நமக்கு நேர்ந்த இன்ப துன்பங்களை நெடிது சிந்தித்து, அவ்வின்ப துன்பங்களால் நாம் எப்பொருளை அறிவுறுத்தப் பெற்றிருக்கின்றோமோ அதன் வழி நின்று நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டுமேயன்றிக் கவலையுற்று வருந்துவதால் என்ன ஆகும் ? கற்பின் நடுநாயகமாய் விளங்கும் நினக்கும் தக்காரினத்தனாய் எச்செயலையும் ஊன்றிநோக்கி வினைப்படுத்தும் நின்கணவனுக்கும், நேர்ந்த இப்பிரிவை எம்மனோர் ஆற்றுதற்கில்லோம். ஆதலால் நீ எங்களுடைய வேண்டுகோட் கிணங்கி, இன்னே எங்களுடன் வந்து நின்கணவனுடன் கூடி வாழ்வாயாக ! நீ, நின் கணவன் நின்னை ஏற்கும் முறையில் முரண்படுவான் என ஐயுறவேண்டாம். எங்கள் முன்னிலையில் நின்னை அவன் கண்டபொழுதே, மிகு மகிழ்ச்சியுடன் வரவேற்பான். மேலும், நின்னைக் காணாது நின் குடிமக்களும், மழையின்றி வாடி நிற்கும் பயிரைப்போன்று வாடி இருக்கிறார்கள் என்பதையும் அறியவேண்டும்.

அரிசில்கிழார் :—கற்பின் நங்கையாம் கண்ணகி ! நின் வருகையைக் குறித்து யான் மிகுதியும் கூற விரும்பவில்லை. நினக்குத் தெரியாதன ஒன்றுமில்லை. எத்தகைய துன்பம் வரினும், துயரம் வருத்தினும், கவலையால் மனம் வாடினும், இல்வாழ்க்கையை நடாத்தும் காதல் மனையாளும், காதலனும் அற்ற குளத்தின் ஆம்பலும் கொட்டியுமன்ன, ஒட்டி நிற்றலை விட்டுத் தட்டி நடக்கலாகாது என்பது நீ அறியாததல்ல. ஆதலால் அன்னாய் ! நீ இப்பொழுதே நின் கணவன்பாற் சேருவாய்.

கண்ணகி :—பெரியீர் ! தாங்கள் கூறும் மொழிக்கு மறு மாற்றங்கூறும் வலிமை எளியாளிடம் இல்லை. என் தலைவர் என்னை வெறுத்ததோடமையாது அன்று என்னைக் கைப்பற்றிய காலத்து ஆன்றோர் முன்னிலையில் இன்றுபோல் என்றும் இடையறா அன்புடன் இருப்பேன் என்று கூறிய உறுதிமொழியையும் மறக்க நேர்ந்ததே என்றுதான் என் உள்ளம் எரியில் இழுதென

உருகுகின்றது. எனினும், பேரறிவும் பெருந்தகைமையும் எம்போன்றாரின் நலத்தையுமே நாடும் தங்களுடைய திருமொழியின் வழியே நின்று, என் குறையைப் போக்குவேன்.

கபிலர் :—(தேவியை நோக்கி) தேவி ! விரைவில் நகர் செல்லத் திட்டஞ் செய்வாய். நாங்கள் சென்று மங்கை நல்லாள் செல்லுதற்குற்ற மணி நெடுந்தேர் கொணர்வோம்.

(செல்லல்)

தேவி :—பெரும ! அவ்வாறே விரைவில் ஆவன வெல்லாம் திட்டம் செய்கின்றேன்.

இயல் ௪—காட்சி 2.

இடம் :—அரசவை. காலம் :—பிற்பகல்.

உறுப்பினர் :—பேகன், காவலன், கண்ணகி, அரிசில்கிழார், கபிலர், பரணர்.

(பேகன் தனித்திருத்தல்).

காவலன் :—ஆவியர் குடியின் ஆண்டகையே ! நின் திருவடித்தாமரை என் முடிக்கு அணியாகுக. நம் கோயிற் கடைவாயிலின்கண் புலவர் பெருமான் அரிசில்கிழார், கபிலரும், பரணரும் சூழ நின்று, உள்ளே வரத் தங்களுடைய ஆணையை எதிர்நோக்கியுள்ளார்.

பேகன் :—ஆ ! அப்படியா ! நம்புலவர் பெருமக்களா ! இன்னே தடை கூறாது பணிந்து, உள்ளே அழைத்து வருவாய் ! விரைந்து செல்க.

காவலன் :—தலைவ ! அவ்வாறே அடியேன் அழைத்து வருகின்றேன்.
(காவலன் விரைந்து சென்று புலவர் பெருமக்களை அழைத்துவரல்.)

பேகன் :—வருக ! புலவீர் ! வருக ! வருக !! இவண் அமர்க ! (புலவர்கள் அமர்தல்.) நீவிர் மூவரும் ஒன்றுகூடி முச்சுடரை யொப்ப, ஈண்டு எழுந்தருளியமைக்கு யான் யாது புரியவல்லேன். தங்களின் வரவு நல்வரவாகுக !

அரிசில்கிழார் :—அன்பின் வழியே அவனியை அடிமை கொண்டு, கொல்லும் போரில் வெல்லும் வலிமை மிக்க பேக ! நீ நல்வாழ்வு பெறுக ! எவர் இரப்பினும், அவர்க்கு வேண்டும் அரிய அணிகலனும், பிறவும் கொடுக்கும் பெற்றிமையன் நீயல்லவா ? ஆதலால் நீ மனமுவந்தளிக்கும் பொருளைப் பெற்றுச் செல்ல இவண் யாம் வந்தேம் அல்லேம் ! சிறிய யாழினில் செவ்வழிப் பண்ணுடன் நின் பெருமையை யாம் விரும்பிப் பாட நீ மனங்கொள்வாய் என்றால் இன்று யாம் விரும்பியதை நீ மனமுவந்து தருதல் வேண்டும்.

பேகன் :—பெரும ! தாங்கள் ஏன் என்பால் அத்தகைய ஐயங்கொள்ள வேண்டும் ? யானே தங்களது அடிமையல்லவா ?

அரிசில்கிழார் :—தலைவ ! அவ்வாறாயின், யான் சொல்லுவதற்கு நீ செவி சாய்த்தருள வேண்டும். நின்னரும் மனைவியாய, கற்பின் கொழுந்தாம் கண்ணகிதேவி, நீ அருளாமையால், கண்டவர் இரங்க, மெலிவுற்றுப் பொலி

வற்று வருந்துகின்றாள் என்பதை, குளிரால் நடுங்கி வாடும் எனக் கருதி, ஒரு மயிலுக்கு நாக நீலக் கலிங்கத்தை நல்கிய நின் மனம் உணராதிருத்தல் அழகாகுமோ ? பெரும ! நீ இன்னே நின் மனைவியின் கூந்தலில் குளிர்ந்த மலர்களைச் செருகி அன்புடன் அழைத்துவர நினது குதிரைகளை நின் தேரிற் பூட்டுவாய்.

கபிலர் :—சினத்தோடு புரியும் போர்த்தொழிலும் ; மறுமைப் பயன் கருதாது அளிக்கும் கொடைத் திறனும், காற்றெனக் கடிது செல்லும் தேரிற் பூட்டிய குதிரைகளும், முருகவேளை வழுத்தும் நெஞ்சமும் கொண்ட பேக ! நின் புகழ் நெடிது ஓங்குக ! புலவனாகிய யானோ ஓர் அந்தணன் ஆவேன். அந்தணராவோர் எவ்வுயிர்க்கும் தண்ணளி சுரக்கும் தன்மையராதலால் அவரது சொல்வழி நிற்றல் அறமுடைத்தாகும். ஆதலின் என்சிறு மொழியை நின் கருத்தில் கொண்டருள வேண்டும். நீயோ இம்மலை நாட்டின் தலைவன் ; இங்குள்ள வேட்டுவ மக்கள் மழை வேண்டுமெனக் கருதினால், தங்கள் வழிபடுந் தெய்வமாம் முருகவேளை வழிபடுகின்றனர் ; அவனதருளினால் மழை பொழிகின்றது ; அவர்களும் நீர்வளம் பெற்றமையால் தேனும் தினைமாவும் மிகுதியாகப் பெற்று மகிழ்கின்றனர் ; ஆதலால் நின்குடி மக்கள் வானம் சுரக்க முருகவேளை வழிபடுவதை யொப்ப, அக்குடி மக்களினும் சிறந்த நின் இல்லக் கிழத்தியும் நின்னருளையே நாடி வாங் கிடக்கின்றாள். நெருநல், யாம் எம் சுற்றத்துடன் அவள் இருப்பிடம் சென்ற போழ்து, நின்னையும், நின்மலை வளத்தையும் பாடினோம். அக்காலை துன்பம் மிகுதியினால், அடக்க முடியாத நிலையில் அவளுடைய கண்கள் ஓர் அருவி என நீரைச் சொரிந்தன. அக் கண்ணீர் அவளது மார்பகம் எல்லாம் வழிய மேகக் கூட்டங்கள் கறுத்துக் கலைப்பதை யொப்ப, அவள் நின் அருளையே நினைந்து நெஞ்சடைக்கத் துயரமுற்று வாடிக் கதறி நின்றாள் என்பதை நினக்கு உணர்த்தும் கடப்பாடு உடையேம்.

பரணர் :—வள்ளால் ! யாம் கூறுவதைத் தடைகூறாது ஏற்றுக்கொள்வாய் ! நீ, பூங்கொம்பனைய நின் மனைவிக்கு, அருளொழுகு உள்ளத்தனாய்த் தண்ணளி செய்யாதிருப்பது மிகவும் கொடியதாகும். மணமிக்க நீல நிறமுடைய நெய்தல் மலரை யொத்த அவள் கண்கள் கலங்கியுள்ளன ; அருவியே என நீரைச் சொரிகின்றன. அந்நீர் அவளது மார்பை நனைத்து வழிந்தோடுவதால் அவள் அதனைத் தனது காந்தள் மலரனைய கரங்களால் துடைத்துக்கொண்டு நின் திசை நோக்கித் தொழுது நின்று நனி மிக வருந்துகின்றாள். அவளுடன் சில தோழியரும் இருக்கின்றனர். அவர்கள் எவ்வளவோ முயன்று தேற்றியும் அவள் தேறாதிருக்கின்றாள் ; நாங்கள் அவளைப் பார்த்து எங்களது நட்பையே விரும்பும் தலைவன் பேகனுடன் நீ உறவு கொள்வாயா என்று கூறினேம். அதற்கு அவளது தோழிகள் ஒரு முகமாக நின்று, "யாம் கண்ணகிக்கும் பேகனுக்கும் உறவினரல்லேம் ; பேகன் எம்போன்ற நங்கை ஒருத்தியை விழைந்து பழிச் சொல்லுக்கு ஆளாகி இப் பூங்கொம்பனையாளையும் நீக்கினான். இக்கண்ணகியோ அவனது குற்றத்தைப் போக்குவதற்காகப் பசியால் வருந்தி உடலை வாட்டி, நோன்பு நோற்றுத் தன் கணவனது தாள்களையே அல்லும் பகலும் மனத்தால் சிந்தனை செய்து அருட்போர் தொடுத்து வருகின்றாள். இனியேனும் பேகனது அருட்டிறம் இவள்பாற் படாதொழியின் விரைவில் இவளது ஆவி வேறு நல்லுலகை நாடும் ; இவளது இரப்பி[illegible] பரியும் அவனியே சா[illegible]

என்பது திண்ணம்," எனக் கூறியதைக் கேட்ட நான், நெஞ்சம் மிக நைந்தேன். நீ பழியினின்று நீங்கியவனுய் வாழ வேண்டின், அவளை அன்புடன் ஏற்றுப் பண்டுபோல் என்றும் நல்லறமாம் இல்லறத்தை நடத்துவாயாக !

பேகன் :—புலவர் பெரு மக்களே ! நீவிர் கூறும் மொழிக்கு மாற்று மொழி கூறும் ஆற்றல் எளியேனிடம் இல்லை. புலனழுக்கற்ற பொய்யில் புலவராம் உங்களுடைய பிணக்கம், எம் போன்ருர்க்கு மீளா இடுக்கணைத் தந்தருளு மென்பது ஒருதலை. மூத்தோர் சொல் வார்த்தை அமுதம் ; மேலாயவர் வாய்ச சொற்கள் கேட்டல் இனிது, என்பன வெல்லாம் நம் ஆன்ருேரின் அறவுரை களன்ருே ? ஆதலால், பெரியீர் ! தங்கள் விருப்பின்படியே யான் நடப்பதற்குப் பெரிதும் உடன்படுகின்றேன்.

அரிசில்கிழார் :—மாபெரும் பேக ! நன்று ! இதோ நின் மனைவியை இவண் அழைத்து வருவேன் காண்பாய் ; இன்னே அவளை மனமகிழ்வுடன் ஏற்பாய். (வெளிச் சென்று உள் நுழைதல்) அம்மா கண்ணகி ! இவண் வருக ! (கண்ணகி பேகன் பக்கல் சென்று தலைவணங்கி நிற்றல்) தலைவ ! இதோ இருக்கின்ருள் நின் காதலி. ஏற்று மகிழ்வாய். (கண்ணகியை நோக்கி) நங்காய் ! நின் கணவன் இனி என்றும் நின்னைப் பிரியான் என்பதைத் திண்மையாக உணர்வாய். நினக்கு நின் கணவனே உற்ற தெய்வ மாதலால் அவன் சொல்லும் சொற்களுக்கு மறுமாற்றம் உரையாது, அவன் அன்பின்வழி நின்று புகழ் பெறுவாய். அவன் ஏதாவது பிழை புரிந்திடினும், இனிய சொற்களாலும், அமைந்த செயலினுலும் அவனது உள்ளத்தை நின்வயப் படுத்துவதே நின் அணிகலன்களாகக் கொள்வாய். (பேகனை நோக்கி) பேரன்புடைய பேக ! நீயும் அவளது உண்மையை அறிந்து, மகளிர்க்குக் கொண்டானிற் சிறந்த தெய்வமும், சுற்றமும் வேறில்லை யாதலால் அவளுடன் ஒன்றுபட்ட மனத்தினனுய் என்றும் இருந்து காகத்தின் இருகண்ணிற் கலந்து நின்ற ஒரு மணியை ஒத்து உங்கள் இருவரது அகத்தும் ஓர் உயிராய்த் தழைத்து வளரும் ஒப்பற்ற அன்புப் பயிரை வளம்பெற வளர்த்து, நீடிய ஆயுளும், நிறைந்த செல்வமும், தக்க அறிவும், தனிமுதற் பெருமானின் அருளும் பெற்று இல்லறம் நடாத்தி இன்பம் துய்த்துப் பல்லாண்டு புகழுடன் வாழ்வாயாக ! பெரும ! இதோ யான் தரும் இம் மாலையை, நினது மனைவியும், எங்கள் கற்பரசியுமாய கண்ணகிக்குச் சூட்டி அவளது நிறைந்த அன்புடன் நினது சிறந்த அன்பைப் பொருத்தி இனிது மகிழ்ந்து தண்டமிழ்த் தாயின் தாளினைப் பரவுவாய். (மாலையை அளித்தல் ; பேகன் அம்மாலையைப் பெற்றுக் கண்ணகிக்குச் சூட்டிக் களிப்புறுதல் ; யாவரும் தமிழ்த்தாயின் தண்ணருளைப் பராவுதல்.)

[திரை.]

6. மீண்டும் குழந்தையாக்கு !

[சு. குருசாமி, பி.ஏ., எல்.டி.]

கோயம்புத்தூரிலிருந்து இரவு 7-10 மணிக்கு மேட்டுப்பாளையத்திற்குப் புறப் படும் ரெயில் வண்டிமீது எனக்கு எப்பொழுதுமே வெகு பிரியம். விசேஷ வேலை ஒன்றும் இல்லாவிட்டாலும், அந்த ரெயிலில் பிரயாணம் செய்யும்

ஆனந்தத்திற்காகவே நான் பெரியநாயக்கன்பாளையம் வரை அடிக்கடி போய் விட்டு வருவது வழக்கம். வெள்ளிக்கிழமை பள்ளிக்கூட வாரத்தின் கடைசி நாள். பெரியநாயக்கன்பாளையத்திற்குச் செல்லலாம் என்று ஓர் ஆசை எழுந்தது. ரெயில் கோயம்புத்தூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும், ஜன்னலண்டை ஒரு பெஞ்சியில் சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டேன். ரெயில் புறப்பட்டது.

நீலகிரி மலைத்தொடரிலிருந்து, இனிமையான காற்று மனோகரமாய் வீசிக் கொண்டிருந்தது. அந்த மந்தமாருதத்தின் முழு இன்பத்தையும் அனுபவித்துக்கொண்டே, பின்னால் சாய்ந்தேன். கண்கள் மூடின ; ஆம், புறக்கண்கள் மூடின ; அகக் கண்கள் திறந்தன. வண்டி வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது. வேகமாய் ஓடும் ரெயிலில் பிரயாணம் செய்யும் பொழுதெல்லாம், என் மனத்தில் உயரிய எண்ணங்களும் சிறந்த சிந்தனைகளும் தோன்றுவது வழக்கம்.

எதிர்பாரா விதமாய்த் திடீரென்று என் சிந்தனை கலைந்தது. கண் விழித்தேன். ஒரு பிச்சைக்கார வாலிபன் பாடிக்கொண்டிருந்தான். பதினேழு, பதினெட்டு வயசு இருக்கலாம். உடம்பில் ஒன்றும் இல்லை. இடுப்பில் மட்டும் ஓர் அழுக்குத் துணி உடுத்திருந்தான். அதுவும் அநேக இடங்களில் கிழிந்திருந்தது.

அவன் பாடிய பாட்டில் சொற்சுவை, பொருட்சுவை அதிகம் இருந்ததாகச் சொல்ல முடியாது. சந்தத்தையே பெரிதாகக் கருதி, பொருளைச் சிறிதும் கவனியாது, பதங்களைச் சேர்த்து இயற்றப்பட்டிருக்கும் அப்பாட்டு மிகக் கீழ்த் தரமானது. ஆயினும் அன்று அவன் பாடியபோது, அது என்னை மிகவும் வசீகரித்தது. அவன் குரலில் ஒரு சக்தியும் இனிமையும் இருந்தன. மந்த மாருதத்தில் இனிய ஒலி அலைகளை எழுப்பிக்கொண்டு, அது எங்கள் காதில் மோதியது. "பாரதத் தாய் வீரசக்தியாலே உதித்தோம்" என்று அவன் பாடியபொழுது என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. பின்பு அவன் தாளம் போட ஆரம்பித்தான். வயிற்றுக்குத் தாளம் போடும் வாலிபன் வயிற்றிலேயே தாளம் போட்டது மிகப் பரிதாபகரமாக இருந்தது. அடித்து அடித்து அவன் வயிறெல்லாம் காய்த்திருந்தது !

"இந்தியர்க்குச் சொந்தமாயிருந்த பொன்னாடு" என்று அவன் உருக்கமாய்ப் பாடிய சமயம் இந்தியாவின் அடிமைக் கதை முழுவதும் என் கண் முன்னால் தோன்றுவது போல் இருந்தது. "ஏழை மக்கள் வாடுகின்ற சீல நன்னாடு" என்று அவன் பாடியபோது என் கண்களில் கண்ணீர் ததும்பியது ... வாலிபனது எழ்மைத் தோற்றமே அந்த அடிக்கு உயிர்ச்சித்திரமாய் விளங்கியது. பாட்டு முடிந்தது. ஏன் அதற்குள் முடித்து விட்டான் என்று வருந்தினேன்.

"கதரைப் பற்றி ஆயிரம் பிரசங்கங்கள் கேட்டாலும், இந்த ஒரு பாட்டுக்குச் சமானமாகாது, ஸார்" என்ருர் ஒருவர்.

அந்த அபிப்பிராயத்தைப் பூர்ணமாய் அங்கீகரிக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனகயால் மௌனமாய் இருந்தேன்.

கையில் இரண்டு மூன்று காலணக்களைக் குலுக்கிக் கொண்டு, வாலிபன் ஒவ்வொருவரிடமும் சென்று, காசு கேட்டு வந்தான். அங்ஙனம் இருக்கையில், திடீரென்று டிக்கட் பரிசோதகர் ஒருவர் வண்டிக்குள் நுழைந்தார். வெண்ணெய் திரண்டு வரும்போது, தாழி உடைந்தது போல ஆயிற்று. வாலிபன் திடுக்கிட்டு நின்றான்.

"எஸ்.ஐ.ஆர். கம்பெனிக்கு இவர்களெல்லாம் ஸ்வீகார புத்திரர்கள், ஸார் !" என்று சொல்லிக் கொண்டே கையை நீட்டினார்.

"ஜன சமூகத்தின சட்ட பூர்வமான புத்திரர்கள் என்று ஏன் சொல்லக் கூடாது ?" என்றேன் நான்.

நான் ஏதோ ஹாஸ்யமாகச் சொல்லிவிட்டேன் என்று அவர் "கட கட" என்று சிரிக்க ஆரம்பித்தார். நான் சொல்லியது அவருக்கு விளங்கவில்லை என்று அறிந்துகொண்டேன். பேசாமல் டிக்கட்டை எடுத்துக் காண்பித்தேன். பிரயாணிகளின் டிக்கட்டுகளை எல்லாம் பரிசோதித்த பிறகு, பையனுடைய கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, ஒரு பெஞ்சியில் போய் உட்கார்ந்தார்.

"எங்கேடா ஏறினாய் ?"

"கோயமுத்தூரில், எசமான்!"

"டிக்கட் ஏனடா எடுக்கவில்லே?"

பாவம் ! பையன் இதற்கு என்ன பதில் சொல்வான் ? மௌனம் சாதித்தான்.

"உங்கப்பன் வீட்டு ரெயிலாடா, டிக்கட் இல்லாமல் போவதற்கு ?" என்று சொல்லிக் கனைத்தில் "பளீர்" என்று ஓர் அறையும் கொடுத்தார்.

"சாமி ! சாமி ! அடிக்காதிங்க சாமி !" என்று கெஞ்சினான் வாலிபன்.

"காசு எவ்வளவடா வைத்திருக்கிறாய் ?".

"ஒண்ணே காலணா, சாமி !"

"கொடு இங்கே !"

பையன் சற்றுத் தயங்கினான். மீண்டும் ஓர் அறை கன்னத்தில் விழுந்தது.

"சாப்பாட்டுக்கு ஒண்ணுமில்லே, சாமி !"

"கொடுடா இங்கே !" என்று அதட்டினார் டிக்கட் பரிசோதகர். காலணாக்கள் ஐந்தும் அவர் கையில் வந்து சேர்ந்தன.

"இவ்வளவுதானா ?"

"ஆமாங்க சாமி."

"உள்ளதைச் சொல்."

"சத்தியமாய்ச் சொல்கிறேன், எசமான்."

"திருட்டுப் பயலே ! உங்கள் சங்கதி யெல்லாம் எனக்குத் தெரியுமடா ! எங்கே வேஷ்டியை உதறு, பார்ப்போம்."

பையன் வேஷ்டியை உதறிக் கொண்டே, "ஒன்னுமில்லை எசமான்" என்றான்.

"பொய் சொல்லி, ராஸ்கல் ! பின்னாலிருக்கும் முடிச்சு என்னடா ?"

"பொடி மட்டை எசமான்."

"உனக்குப் பொடி மட்டை வேறு கேடா ? எங்கே அவிழ் பார்க்கலாம்."

"வேறே ஒண்ணுமின்லே, சாமி."

"எடுடா, பார்க்கலாம்."

பையன் குடலில் நெருப்பு விழுந்தது போல இருந்தது.

"இன்னும் அவிழ்க்காமல் இருக்கிறாயா ?" என்று ஓர் அறை அறைந்தார் டிக்கட் பரிசோதகர்.

"சாமி ! சாமி !" என்று சொல்லிக்கொண்டு அவன் அம்முடிச்சை அவிழ்த்து, ஒரு பொடி மட்டையை வெளியில் எடுத்துக் காட்டினான்.

"நீ கெட்ட கேட்டுக்கு உனக்குப் பொடி வேறு". பையன் கன்னத்தில் மீண்டும் ஓர் அடி விழுந்தது. அடி விழுந்த அதிர்ச்சியில் பொடி மட்டை கீழே விழவே, "கலீர்" என்று சத்தம் கேட்டது. டிக்கட் பரிசோதகர் திடுக்கிட்டுக் குனிந்து அதை எடுத்தார். அதற்குள் இரண்டணா சில்லறையாக ஒன்றரை ரூபாய் இருந்தது !

அதைக் கண்டதும், "திருட்டுப் பயலே !" என்று பையனை ஒரு மிதி மிதித்தார்.

"பொய் சொல்லும் பயல்களைக் கண்டால் எனக்குக் கொஞ்சமேனும் பிடிப்பதில்லே, ஸார் !" என்றார் என்னைப் பார்த்து.

"வாஸ்தவம். திருட்டுப்பயல்களைக்கண்டாலும் எனக்குப் பிடிப்பதில்லை" என்றேன் நான்.

இதற்குள் பெரியநாயக்கன்பாளையம் வந்து விட்டது. பிச்சைக்காரனுடைய கேஸ் இன்னும் முடியவில்லை. ஆகையினால் நான் தூங்குபவன்போல் பாசாங்கு செய்தேன்.

மெல்லிய மலைக்காற்று, ரெயிலின் "கட கட" சத்தம், நடு நடுவே டிக்கட் பரிசோதகரின் உறுமல், வாலிபனின் பரிதாபக் குரல், இடை யிடையே ஏக்கம், பெரு மூச்சு, ஒரு குழந்தையின் அழுகை, தாயின் அதட்டல், ஒரு கிழவனின் இருமல்—இவை ஒன்றையும் கவனியாது, மனிதனை விதி இழுத்துக்கொண்டு போவது போல, ரெயில் எங்களை இழுத்துச் சென்றது.

"மேட்டுப்பாளையம ! மேட்டுப்பாளையம் !" என்று ஒரு போர்ட்டர் கத்தினான்.

நான் திடுக்கிட்டு எழுந்தேன். டிக்கட் பரிசோதகரையும் பிச்சைக்காரனையும் காணவில்லை. விரைவாக இறங்கிப் பிளாட் பாரத்தில் எங்கும் தேடிப் பார்த்தேன். காணவில்லை. கடைசியில் ஸ்டேஷனின் ஓர் ஓரத்தில் இரண்டு உருவங்கள் இருளில் நிற்பதைக் கண்டு அவற்றை அணுகினேன்.

"தீபாவளிக்குப் புதுத்துணி வாங்குவதற்காகக் கால் கால் அணாவாகச் சேர்த்து வைத்த காசு !" என்று அழுதான் வாலிபன்.

பாம்பின் வாயில் அகப்பட்டவனை எங்கேயாவது மீளுவது உண்டா ? கடைசியில் ஒன்றும் பிரயோஜனமில்லை என்று கண்டதும், "இன்னைக்கி முழுதும் ஒண்ணும் சாப்பிடவில்லே, எசமான். இட்டிலி வாங்குவதற்கு அரையணாவாவது கொடுங்க, சாமி" என்று கெஞ்சினான். டிக்கட் பரிசோதகர் காதில் ஒன்றும் விழவில்லை. பேசாமல் போய்விட்டார். வாலிபன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு சென்றான். என் கையிலிருந்த சொற்பக் காசை அவன் கையில் கொடுத்து விட்டு நான் ஊருக்குள் போனேன்.

* * * * *

மேட்டுப்பாளையம் எனக்குப் புதிது. படுப்பதற்கு இடம் அகப்படாமல் தெருத் தெருவாய் அலைந்தேன். கடைசியில் ஒரு வீட்டுத் திண்ணை சிறிது சௌகரியமாய் இருப்பது கண்டு, அங்கே சென்று உட்கார்ந்து, சிறிது நேரம் அன்று ரெயிலில் நடந்த சம்பவத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தேன். உள்ளே யாரோ ஒருவர் பேசும் சப்தம் கேட்டது.

" கனகம், உனக்கு ஒரு பட்டுப் பாவாடைக்குத் துணி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன், பார்த்தாயா ?"

" எங்கே அப்பா !" என்று சொல்லிக் கொண்டு ஒரு குழந்தை சந்[illegible] மாய் ஓடி வந்தது.

குழந்தை துணியைப் பார்த்ததும் குதூகலத்துடன், " இதோடு எனக்கு அஞ்சு பட்டுப்பாவாடை யாகுது, எனப்பா ?" என்று கூத்தாடியது. பின்பு திடீரென்று எதோ ஒரு விஷயம் ஞாபகம் வந்ததுபோல், சொல்ல ஆரம்பித்தது. " இன்னைக்கி ஒரு விசேஷம், அப்பா, எனக்கு ஜிலேபி வாங்குவதற்கு அம்மா ஒரு அணாக்கொடுத்தாள். உடனே நான் கடை வீதிக்கு ஓடினேன். அங்கே ஒரு பிச்சைக்காரன், பாவம் ! அழுதுகொண்டிருந்தான். ' எண்டா அழறே ? ' என்று கேட்டேன். அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா அப்பா ? இன்னிக்கி அவன் ரெயிலில் வந்து கொண்டிருந்தானாம். அவன்கிட்ட டிக்கட் இல்லையாம். அதுக்காக அவன் தீபாவளிக்கு வேஷ்டி வாங்க வெச்சிருந்த ஒண்ணரை ரூபாயைப் பிடுங்கிக் கொண்டார்களாம். ' ஏண்டா உங்கப்பா டிக்கட் வாங்காம விட்டா ? ' என்று நான் கேட்டேன். ' எனக்கு அப்பா அம்மா யாருமில்லை ? ' என்று அவன் சொன்னான். அப்பா ! பின்னே அவன் எப்படி அப்பா டிக்கட் வாங்குவான் ? எனக்கும் அம்மாவுக்கும் நீதானே டிக்கட் வாங்கித் தரே ? இல்லா விட்டா நான் டிக்கட் வாங்காமத்தானே போவேன் ? அப்போ, ரெயில்காரன் நான் போட்டிருக்கிற வளையல், சங்கிலி இதெல்லாம் பறிச்சிக்கக்குவானா, என்ன ? அதென்ன நியாயம் ? நீயும் அந்த ரெயிலில் தானே வேலை பார்க்கிறே ? ரெயில்காரங்கிட்ட இதெல்லாம் நீ சொன்னா என்னப்பா ?"

குழந்தையின் தந்தை சிறிது நேரம் மௌனமாக இருந்தார். " அப்புறம் நீ என்ன பண்ணினே ? ஜிலேபி வாங்கிண்டு வந்திட்டாயா ?" என்று கேட்டார்.

" அதென்னப்பா அப்படிக் கேக்கிறே ? அவன் அழுத அழுகையைப் பாத்தா நீயானா அங்கேயே அவனுக்கு இரண்டு வேஷ்டி எடுத்துக் கொடுத்திட்டு வந்திருப்பே. நீ நிறையக் காசு வச்சிருக்கே. நான் என்னப்பா பண்றது ? அம்மா கொடுத்த ஓரணாத்தான் இருந்தது. அதை அவன் கையிலே கொடுத்து, ' இந்தா, இப்ப ஓரணா வச்சுக்கோ, நாளை எங்க அப்பாட்டயாவது அம்மாட்டயாவது ஒரு ரூபாய் வாங்கிண்டு வந்து ஒனக்குத் தரேன் ' இன்னு சொல்லிட்டு வந்தேன். நாளைக்கு ஒரு ரூபாய் தரயா, அப்பா ?"

இந்தச் சமயம் இன்னொரு குரல் கேட்டது. பேசியது குழந்தையின் தாய் போலும். " எண்டி, கனகம் ! ஜிலேபியை அங்கேயே சாப்பிட்டு விட்டேன்னு இன்னு சொன்னியே. எங்கிட்டப் பொய்தானே சொன்னே ?"

தாய் சொன்னதைச் சிறிதும் கவனியாமல், " நாளைக்குத் தரயா, அப்பா ?" என்று மீண்டும் கேட்டது குழந்தை.

" என் கண்ணே ! நாளை ஒனக்கு இரண்டு ரூபாய் தருகிறேன், அம்மா அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடு " என்று தழுதழுத்த குரலில் தந்தை சொன்னார்.

நான் ஆச்சரிய முற்றேன். அந்தக் குழந்தையையும், அதன் தந்தையையும் பார்க்க ஆவலுற்று, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். குழந்தையின முகம் மல்லிகைப் பூப்போல மலர்ந்திருந்தது. அதன் தந்தையின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அவருடைய முதுகு தான் என் பக்கம் இருந்தது. களி பொங்கிய கனகத்தின் முகத்தில், திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. மிக்க ஆச்சரியத்துடன், " எனப்பா நீ அழறே ?" என்று கேட்டது.

" ஏ ஈசா ! என்னை மீண்டும் குழந்தையாக்கமாட்டாயா ?" என்று விம்மல்களுக்கும் விக்கல்களுக்கும் இடையே தந்தை பிரலாபித்தார்.

7. கடலும் கடலையும்.

[மகிழ்நன்.]

ஆண்டிகளிற பஞ்சத்து ஆண்டியுமுண்டு, பரம்பரை ஆண்டியுமுண்டு; பொயயாண்டியுமுண்டு, மெய்யாண்டியுமுண்டு, ஆனால் நானோ நையாண்டி. வயிற்றுப் பிழைப்புக்காக வேஷம் போட்டுக் கையேந்திப் பல்லைக் காட்டுவது என்னுடைய வழக்கமன்று. கைப் பொருளில்லாததினால் இரந்துண்டு பிழைக்கிறவர்களை ஆண்டிகளென்று அழைக்கிறார்கள். மெய்ப் பொருளைத் தேடி அங்குமிங்கும் அலைகின்றவனாகிய யானும் ஆர் ஆண்டிதான். இதன் பொருட்டு நானும் ஆண்டியாகத் திரிந்து வருகிறேன். இந்த உண்மையை அறியாத பலர் என்னை ஒரு பிச்சைக்காரனாகவே நினைத்துக் கொள்ளுகிறார்கள். அதனால் எனக்கு ஒரு நஷ்டமுமில்லை.

ஒரு நாள் சென்னைக் கடற் கரையில், நாலைந்து பேர் ஒன்றாக உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர், " நாளைக்குப பூனாவிற்குப் போகிறேன் " என்றார். உடனே மற்றொருவர், " பூனாவைப் பற்றிப் பல தடவைகளில் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அஃது எங்கிருக்கிறதென்று எனக்குத் தெரியாது " என்று சொன்னார். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அவர்களை அணுகி, " பூனா எங்கே இருக்கிறதென்பதை முதல் வகுப்பில் படிக்கிற சிறு பிள்ளைகளும் அறிவார்கள் ; உமக்கு இது தெரியாமல் போனதென்ன ?" என்றேன். அவர்களெல்லோரும் சிறிது கோபத்துடன் என்னை உற்று நோக்கினார்கள். சிறிது நேரம் கழித்து அவர்களிலொருவன், " இவர் ரொம்பப் படிச்சவர் போலிருக்கிறது " ; என்று இகழ்ச்சியுடன் சொன்னான். அப்போது நான், " நான் படிச்சவர் என்பதும் நீங்கள் குட்டிச் சுவர் என்பதும் இப்போது வெளியாகப் போகின்றன " என்றேன். அவர்கள் மிகவும் சினமடைந்து, " இவன கர்வத்தை என்னவென்று சொல்லுவது ?" என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர். அவர்களுடைய பேச்சை நான் கொஞ்சமும் கவனியாமல், " இந்துஸ்தானியில் சுவர் என்றால் பன்றி என்று அர்த்தம். குட்டிச் சுவர் என்றால் பன்றிக் குட்டி என்று பொருள் " என்று கூறினேன். அவர்கள் என்னைப் பார்த்து, " கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சித் தின்னுகிறவனானால் அவனோடு பேசலாம்.

சம்பாரிக்கத் தின்ன சாமர்த்தியம் இல்லாதவனோடு என்னத்தைச் சொல்லுவது ?" என்று தங்களைத் தாங்களே சமாதானப் படுத்திக் கொண்டார்கள். உடனே நான், "நான் சம்பா அரிசிதான் சாப்பிடுகிறேன். நீங்கள் என்ன அரிசி சாப்பிடு கிறீர்கள் ?" என்று கேட்டேன். "இது என்னடா தொல்லையாய்ப் போச்சுது ! அப்பா நீ ஒழிஞ்சுபோ, உனக்கு ஒரு சலாம்" என்று அவர்களிலொருவன் என்னை வேண்டிக்கொண்டான். இந்த வேளையில் நான் சிறிது உள்ளே நகைத் துக் கொண்டு "அப்பா, சலாம்; இன்னும் கொஞ்சம் பேசலாம்" என்று சிரித்தேன். அவர்களும் என்னோடு சேர்ந்து சிரித்து விட்டார்கள். இதற்கு மேல் நான் அவர்களைப் பார்த்து, "நண்பர்களே உங்களில் ஒருவருக்கும் பூனை எங்கிருக்கிறதென்று தெரியவில்லை. அதைச் சொல்லிவிட்டுப் போகிறேன். உங் களில் யாருக்காவது பானு, பாவன்னு, பீனு, சொல்லத் தெரியுமா" என்று வினவினேன். அப்போது ஒருவர், "அது கூடவா தெரியாது, பானு, பாவன்னு, பீனு, பீயன்னு, பூனு, பூவன்னு" என்று மேலே சொல்லப் போகும்போது, "போதும் போதும் நிறுத்தும்" என்று தடுத்தேன். அவர் அப்படியே நிறுத்தி விட்டார்.

"பீயன்னுவுக்குப் பக்கத்தில் பூனு இருக்கிறது உங்களுக்குத் தெரியாமல் போனதென்ன !" என்று நான் கேட்டபோது, அவர்களெல்லாம் விழுந்து விழுந் து சிரித்து என்னைத் தங்களருகில் உட்கார்ந்து பேசும்படிக் கேட்டுக்கொண்டார் கள். இதற்கிடையே ஒருவன், "சுடச் சுடக் காராமணி, ஐயையோ சுடுதே, அப்பப்பா சுடுதே, காராமணி, கடலை பட்டாணி" என்று கூவிக் கொண்டு வந்தான். நான் என் முன் இருந்தவர்களைப் பார்த்து, "எனக்குக் கொஞ்சம் கடலை வாங்கிக் கொடுப்பீர்களானுல், சிறிது நேரம் உங்களோடே பேசுவேன்" என்றேன். "போயும் போயும் கடலைதானு உமக்கு வேண்டும் ?" என்றுர்கள்.

"கடலை என்ன அற்பமானதா ? அகஸ்திய ரிஷி முதலியவர்களெல்லாம் கடலை சாப்பிட்டிருக்கிறுர்கள். அஃது உங்களுக்குத் தெரியுமா ?" என்று பதில் கேள்வி கேட்டேன்.

"அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாக நாங்கள் கேட்டதுமில்லை; படித்தது மில்லை ?" என்று அவர்கள் விளம்பினுர்கள்.

"அப்படியானுல் நான் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று நான் பேசத் தொடங்கினேன். "எலிமீது ஏறிய யானைக்கும், மயில்மேல் குந்திய காளைக்கும் தந்தையாகி" என்று நான் சொல்லிக்கொண்டு போகையில், "எலியின்மேல் யானை எப்படி ஏறும்?" என்று ஒருவர் கேட்டார்.

"எலியில் பெருஞ்சாதி பெருச்சாளி; அந்தப் பெருச்சாளி மீது ஏறிய யானை, விநாயகர் ; மயிலின்மேல் குந்திய காளை, முருகன்" என்று விடையளித் தேன்.

"ஓஹோ ! அப்படியா ! சரிதான், அப்புறம் சொல்லுங்கள்" என்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

நான் மறுபடியும் தொடங்கினேன் :—

"எலிமீது ஏறிய யானைக்கும், மயில் மேல் அமர்ந்த காளைக்கும் தந்தை யாகி, எருமைக் கடாவின்மேல் ஏறி மார்க்கண்டன் உயிரைக் கவர்ந்த யமனை, எருதின்மேல் சவாரி செய்து போய்த் தாக்கிய பரமசிவன், பருவதராஜன் பெற் றெடுத்த புத்திரியாகிய பார்வதியைக் கலியாணம் செய்துகொண்ட காலத்திலே தேவரும் மற்ற யாவரும், கைலையங்கிரியிலே அவருடைய மணக் கோலத்தைத்

சிக்க வந்ததினுல், பாரந் தாங்கமாட்டாமல், வட திசை தாழ்ந்து தென் திசை உயர்ந்துபோக, எல்லாரும் அதைக் கண்டு திகைத்துப் போனுர்கள்" என்று ஆனந்த பைரவி ராகத்தில் சொல்லிக் கொண்டு வந்தபோது, காராமணி கடலை விற்றவன் தன் தலையிலிருந்த கூடையை இறக்கிக் கீழே வைத்து அதிக ஆவ லுடன் நான் கூறியதைக் கேட்டுக் கொண்டு நின்றான்.

அவனை நான் பார்த்து, "அப்பா, கடலை விற்கும் கடலையாண்டி, அகஸ்தியர் கடலை சாப்பிட்ட கதையைச் சொல்லப்போகிறேன். நீயும் உட்கார்ந்து கேள்" என்று சொல்லி மறுபடியும் ஆரம்பித்தேன். "வண்டி ஓடை கவிழ்ந்தது போல் உலகம் ஒருபுறம் சாய்ந்து கிடந்ததைக் கண்டு எல்லோரும் தவிக்கும் போது, நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணின் உஷ்ணம் அதிகரிக்காத படி தலையிலுள்ள சடையிலே கங்கை நீரைக் கட்டிவைத்திருக்கும் சாம்ப சிவன் அருகிலுள்ள குள்ள முனியாகிய அகஸ்தியனைப் பார்த்து, 'நீ போய் உலகத் தை முன் போலச் சம நிலைப் படுத்து' என்று ஆக்ஞாபித்தார். அவ்வாறே இந்த அகஸ்திய முனி தென்திசைக்குச் சென்று உலகத்தைச் செப்பனிட்டார். இவ்வாறு மகத்துவம் மிகுந்த அகஸ்தியரிடத்தில் ஒரு நாள் ஆயிரம் கண்ணை யுடைய தேவேந்திரன் வந்து தேவர்களெல்லாரையும் விருத்திராசுரன் என்ற ஓர் அரக்கன் வருத்துவதாயும், அவ்வரக்கன் சமுத்திரத்தில் ஒளிந்து கொண் டிருப்பதாயும் முறையிட்டான். உடனே குறு முனியாகிய அகஸ்தியர் சமுத்தி ரத்தைச் சாப்பிட்டு அந்த அசுரனை வெளியில் படுத்தினுர். கேட்டீர்களா, ஓ ஜனங்களே !" என்று நான் பேசி முடித்தேன்.

இதைக் கேட்டவர்கள் சிறிது நேரம் யோசனை செய்து, "அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாகச் சொன்னீர்களே, அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் வேறு என்னமோ பேசிவிட்டீர்களே !" என்றுர்கள்.

"அதைப் பற்றித்தான் இப்போது நான் பேசி முடித்தேன" என்று சொன் னேன்.

"இல்லையே" என்றுர்கள்.

"ஆம்" என்றேன்.

"இல்லவே இல்லை" என்றனர்.

"சமுத்திரம் என்றுல் என்ன ?" என்று கேட்டேன்.

"சமுத்திரம் என்றுல் கடல்" என்றுர்கள்.

"கடலை அகஸ்தியர் சாப்பிட்டார் என்று நான் சொன்னேனே. அவர் கடலை யுண்டதை நான் சொல்லவில்லையென்று எப்படி நீங்கள் சொல்லலாம் ?" என்று நான் கேட்டபோது அவர்கள் வாயைத் திறந்து மூக்கில் விரலை வைத்துக் கொண்டனர்.

இதற்குப் பின் நாங்கள் இரண்டணுவிற்குக் கடலை வாங்கி உண்டோம். என் முன் இருந்தவர்கள் கையில் கடலையை வாங்கி உண்ணும்போது அஜாக்கிரதை யாகப் பல கடலைகளைக் கீழே சிந்தினுர்கள். நான் அதிகக் கவலையுடன், ஒன்று விடாமல் பொறுக்கலானேன். உடனே அவர்கள் என்னைப் பார்த்து, "வேண்டு மானுல் இன்னும் கொஞ்சம் கடலை வாங்கிக் கொள்ளலாம்; மண்ணில் விழுந் ததை ஏன் பொறுக்குகிறீர்கள்?" என்றுர்கள்.

" [illegible] கடலை வெள்ளம்
[illegible] கடலே."

[illegible]

8. பங்கா இழுத்த பாவலர்.

[டாக்டர் உ. வே. சாமிநாதையர்.]

சிலருக்குச் சில வகையான ஆற்றல்கள் எளிதில் அமைந்துவிடுகின்றன. அத்தகைய ஆற்றல்கள் வேறு சிலருக்கு மிக முயன்றும் சிறிதும் அமைவதில்லை. செய்யுளியற்றும் ஆற்றலும் அவ்வகையானதே. சிலர் யாப்பிலக்கணம் முதலியவற்றை நன்றாக ஆராய்ந்து அறிந்திருந்தாலும், இனிய ஓசையுடைய செய்யுட்களைப் பிழையின்றி இயற்றுவதில் தடுமாறுகிறார்கள். பிறர் செய்யுட்களிலுள்ள பிழைகளை எடுத்துக் காட்டும் இயல்புடைய சிலர் பிழையற்ற சில பாடல்களையேனும் இயற்றும் ஆற்றலை அடைந்திலர். வேறு சிலரோ இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை ஆராயாவிடினும் மனத்தில் தோன்றிய கருத்துக்களை அழகு பெற அமைத்துச் செய்யுள் செய்து விடுகிறுர்கள்.

இந்நாட்டில் தம்முடைய மனக் கருத்தைச்செய்யுளில் அமைத்து விரைவில் வெளியிடும் ஆற்றல் வாய்ந்த பல புலவர்கள் இருந்து புகழ்பெற்று விளங்கியதுண்டு. காளமேகத்தைப் போன்ற ஆசு கவிகள் பலர் இவ்வகையில் தலைசிறந்து விளங்கியவர் ஆவர். அவர்களுடைய செயல்களும், பல வகையான செய்யுட்களைப் பாடிய வரலாறுகளும் யாவராலும் விருப்பத்துடன் கேட்டு இன்புறற்கு உரியன.

சற்றேறக் குறைய இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் வேம்பத்தூரில் இருந்தவரான சிலேடைப் புலி பிச்சுவையரென்னும் வித்துவான சௌந்தரியலகரி என்னும் நூலைத் தமிழில் இயற்றி யாவராலும் மிகவும் பாராட்டப் பெற்று விளங்கிய கவிராச பண்டிதருடைய பரம்பரையில் உதித்தவர் ; இராமநாதபுரம் ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள் விருப்பத்தின்படி ஒருமணி நேரத்தில் பன்னிரண்டு சிலேடைகளைப் பாடி அம்மன்னர் வழங்கிய ஐயாயிரம் ரூபாய் ஸம்மானத்தைப் பெற்றவர். அவருடைய குமாரர்களுள் மூத்தவர் மகாதேவ பாரதி என்பவர் ; அவரும் விரைவிலே செய்யுள் இயற்றுவார். இப்பொழுது மதுரையில் அவர் சௌக்கியமாக வாழ்ந்து வருகிறார். அவரைப் பற்றிய வரலாறு ஒன்று வருமாறு :—

காலஞ்சென்ற ஸ்ரீ பா. இராஜ இராஜேசுவர ஸேதுபதி மன்னரவர்கள் ஏறக்குறைய 22 வருஷங்களுக்கு முன்பு இராமநாதபுரத்தில் மிகவும் சிறப்பாக நவராத்திரி விழாவை நடத்தினார்கள். அவர்களுடைய குல தெய்வமாகிய ஸ்ரீ ராஜராஜேசுவரிக்கு நித்திய நைமித்தியங்கள் அலங்காரங்கள் முதலியன மிகவும் மேன்மையாக நடைபெற்றன. மன்னரவர்கள் விருப்பத்தின்படி இந்நாட்டின் பல பாகங்களிலிருந்து ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் தென்மொழிப் புலவர்களும் ஸங்கீத வித்துவான்களும் வந்திருந்தார்கள். நாள்தோறும் தமிழ் வித்துவான்கள் அம்பிகை விஷயமாகப் பல செய்யுட்களை இயற்றிக் கூறிச் செவிக்குணவை அளித்தார்கள். வட மொழி வித்துவான்கள் தேவி விஷயமாகவுள்ள வடமொழி ஸ்தோத்திரங்களையும் வேறு சுலோகங்களையும் எடுத்துச் சொல்லிப் பிரசங்கம் செய்தார்கள். வாய்ப் பாட்டிலும், வீணை, புல்லாங்குழல், பிடில், மிருதங்கம் முதலிய வாத்தியங்களிலும் வல்ல சங்கீத வித்துவான்கள் ஊக்கத்தோடு தங்கள் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தி யாவரையும் மகிழ்வித்து வந்தார்கள். எல்லாவற்றையும் கண்டும் கேட்டும் அனுபவித்த பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அந்த விழா நாட்களிலெல்லாம் வித்துவான்களுடைய பிரசங்கங்களையும் பாட்டுக்களையும் இனிய ஸங்கீதத்தையும் கேட்பதிலேயே மற்ற ஜனங்களுக்குப் பொழுது போயிற்று. மன்னரவர்களும் அவ்வித்துவான்களுக்கு ஏற்ற வசதிகளை அமைத்து ஆதரித்து வந்தனர்.

அப்போது ஒரு நாள் பாஸ்கர சேதுபதியவர்களின் மாப்பிள்ளையவாகளது மாளிகையில் பல வித்துவான்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அநுபவத்தை மகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினர். அப்பொழுது காலை 9 மணியிருக்கும். இயல்பான காற்று இல்லாமையால் அதிக வெப்பமாக இருந்தது. அம்மாளிகையில் பெரிய பங்காக்கள் இருந்ததைக் கண்ட நான், "பங்கா இழுப்பவன் இல்லையோ ?" என்று கேட்டேன். உடனே அக் கூட்டத்திலிருந்த மகாதேவ பாரதியார் திடீரென்றெழுந்து அங்கிருந்த பங்காவின் கயிறு கட்டியிருந்த நிலைக்கு அப்புறம் விரைந்து சென்றுர். நிலையின் மேலுள்ள துவாரத்தின் வழியாக வெளியில் விடப்பட்டிருந்த கயிறு முடியப்பட்டிருந்தது. சென்ற பாரதியார் எழும்பி அந்த முடிச்சை எட்டிப் பிடித்துக் கொண்டார். பங்காக் காற்றை அநுபவிக்க அறிந்த அவர் அதனை இழுக்கும் முறையை அறியாமல், எப்படியாவது பங்காவை இழுத்து விரைவில் வெப்பத்தைப் போக்கவேண்டுமென்பதை எண்ணி அவசரமாக அந்தக் கயிற்று முடிச்சைக் கையில் பிடித்து இழுத்தார். அது கீழே வந்தது ; பின்பு மேலே போயிற்று. அதைப் பிடித்துக்கொண்டிருந்த பாரதியார் அதை விட்டுவிட்டால் மறுபடியும் பிடித்து இழுக்க நேரமாகுமென்றெண்ணி அது மேலே போகும் பொழுது அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே தாமும் மேலே எழும்பிப் போனார். நிலை மிகவும் உயரமானது. அவரோ மெல்லிய தேகத்தையுடையவர். இப்படிக் கீழே வருகையில் இழுத்தும் மேலே போகையில் மேலே உடன் சென்றும் தம்மையே மறந்து பங்காவை இழுத்துக்கொண்டிருந்த அவரது நிலைமையை யாவரும் கண்டு வியப்புற்றனர். பின்பு பங்காக்காரன் வந்துவிட்டான். அவன் கயிற்றை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு வழக்கம்போல முடிச்சை அவிழ்த்துக் கயிற்றை நெடுக விட்டு இழுக்க ஆரம்பித்தான். மகாதேவ பாரதியார் அவனுடைய செயலைச் சிறிது நேரம் கூர்ந்து கவனித்து விட்டு எங்களை நோக்கிவந்தார் ; "உயர் குலத் தோன்றலும் கவிஞருமாகிய நீர் இவ்விதம் செய்யலாமா ? உமக்கு முன்பு பழக்கம் இல்லையே ?" என்று கேட்டேன். அவர் உற்சாகத்தோடும் உவகையோடும், "பங்கா இழுப்பதென் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே" என்று பாட்டாக விடையளித்தார். அந்த அடி ஒரு கட்டளைக் கலித்துறையின் ஈற்றடியாவதற்கு ஏற்றதாக இருத்தலை யறிந்து, "பாட்டை முடித்துச் சொல்லவேண்டும்" என்றேன். உடனே அவர் சற்றும் தயங்காமல்,

"கொங்கார் பொழில் புடை சூழ்முக வாபுரிக் கொற்றவனும்
மங்காத சீர்த்தி வளர்பாற் கரமுகின் மாப்பிளையின்
சிங்கார மாளிகை யிற்புல வோர்க்குச் சிரத்தையுடன்
பங்கா விழுப்பதென் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே."

என்ற கட்டளைக் கலித்துறையைச் சொல்லித் தமது பரம்பரைப் பெருமையை விளக்கினார். அங்கிருந்த யாவரும் அவருடைய ஆற்றலையும் வித்துவான்களிடத்தில் அவருக்கிருந்த அன்பையும் வியந்து பாராட்டினார்கள். அன்றுமாலை ஸ்ரீ இ. ராஜ ராஜேசுவர ஸேதுபதியவர்கள் வீற்றிருந்த சபையில் இந்த நிகழ்ச்சியை நான் தெரிவித்தபோது அவர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். மகாதேவ பாரதியார் பங்கா இழுக்கும்பொழுது கீழே வருவதும் கயிறு மேலே செல்லுகையில் தாமும் மேலே செல்லுவதுமாகிய அந்தக் காட்சி இன்றும் என் கண் முன் நிற்கின்றது.

9. காலத்தின் அருமை.

[டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ., பி.எச்.டி.]

காலமென்பது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும். இவ்வாறு மூன்று விதமாகப் பகுக்கப்படும் இது தனது அழியும் ஆற்றலை யுணர்த்துகின்றது. என்னை? இறந்தகாலம் என்ற மாத்திரத்தால், இருந்த கால மிறந்த காலமாதலும்; நிகழ்காலம், எதிர்காலம் என்ற மாத்திரத்தால் நிகழ்காலம் இறந்து வேறொருகாலம் வருதலும் உண்டு என்பது கொள்ளக் கிடக்கின்றது. அவ்வெதிர்காலந்தானும் நிகழ்காலமாகி, பின்னர் இறந்தகாலமு மாய்விடும். ஆகவே ஓடிக்கொண்டிருக்கும் காலத்திகிரி நமது காலத்தைக் கவர்ந்து போவது தேற்றம். வைகலுந்தோன்றுங் கதிரவனை யளவு கருவி யாகக்கொண்டு, போற்றவும் போகாத, பொருளொடும் போகாத கூற்றுவன் நமது வாழ்நாளை யளந்து உண்டுவருகிறான். நம் நாட்களோ நம்மைப் படைத்த இறைவனால் விதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு விதிக்கப்பட்ட நாட்கள் எல்லை கடவா. அந்நாட்கள் எவ்வளவு என்று அறிந்து கூற யாராலுமியலாது. தான் பின்னும் பல்லாண்டு வாழக்கூடும் என்று சொல்லிய சோதிடன் ஒருவன் உடனே அரசனால் இறந்துபட்டகதை யாவருமறிந்ததே. ஆதலின், சோதிடம் வல்லார் கூறுகின்றாரென மகிழ்ந்து பலகாலம் வாழலாமென்று நினைத்திருப் போர் பேதையரே.

“சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கும் உணர்வரிது”

என்ற பெரியாரின் மெய்ம்மொழியை யுன்னுக. “இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர் முதுநீருலகின் முழுவதுமில்லை” என்றார் இளங்கோவடிகளும்.

ஆயினும், சாதாரணமாக உலகில் மானிடர்க்கு வயது நூறென்பர். நூறு வயது வாழ்வோர் ஆயிரத்தொருவர்கூடக் காணோம். நூறு வயதுண்டு என்று வைத்துக்கொண்டாலும் அறியாமை, பிணி, உறக்கம், மூப்பு இவற்றா லொழியும் நேரம் போக, எஞ்சியுள்ள நேரம் மிகக் குறை வென்பதி லையமில்லை. நூற்றாண்டு பெற்றவர்க்கே இங்ஙனமாயின், ஏனையோரைக்குறித்து என்கூறுவது? முற்றியிருந்த கனியே யல்லாமல், தீவளியால் நற்காய், பிஞ்சு, இவைகளெல்லாம் உதிர்வதையொத்துக் காளையாயும், பாளையாயும், பாலனாயும் பார்நீப்பாரைப் பற்றி யென்கூறுவது? அவர்களுக்கு வினைசெய்யும் நேரம் எவ்வளவு சிறிதே உள்ளது? அவர்களுக்குள்ள காலம் எவ்வளவு அருமையானது? நாமும் இப்பிரிவில் உட்பட்டவர் அல்லரோ?

நாம் பெற்றுள்ள இப்பிறவி மிகச்சிறந்தது; எய்தற்கருமையானது. “இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, எது வருமோ” அறிகிலோம். இப்பிறவியெய்தக் காரணமாயிருந்தது முற்பிறப்பில் நாம் செய்த வினை. இப் பிறப்பின்கண்ணே உள்ள நமது நிலைமையையொட்டி முற்பிறப்பில் நாம் செய்த நல்வினை தீவினைகளை யறிந்துகொள்ளலாம். இப்பொழுது நாம் செய்து வரும் வினைகளால், இனிப் பிறந்தெய்தற்பாலதையும் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். “நல்லறஞ்செய்வோர் நல்லுலகடைதலும் அல்லறஞ்செய்வோர் அருநரகடைதலும்” திண்ணம். தினை விதைத்தவன் தினையறுப்பதும் வினை விதைத்தவன் வினையறுப்பதும் தெளிவு. “விரையொன்று போடச் சுரை யொன்று முளைக்காது.” ஆதலால், நல்லன செய்தால்தான் நல்லன பெறலாம். “செய்த நன்றல்லால் உறுபயனோ வில்லையுயிர்க்கு.”

ஆகவே, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோராய் நாம் காலத்தை வீணே கடத்திவிடாது சரியான முறையிற் செலுத்தவேண்டும். அங்ஙனஞ் செய்யாது சொக்கட்டான், சீட்டு முதலிய வீண் விளையாட்டுகள் ஆடிக்கொண்டும், ஊர் முரைப்பவர்பாற் கூடிக்கொண்டும், கொன்றுகொண்டும், கொன்றதைத் தின்று கொண்டும், கோள்களவு கற்றுக்கொண்டும், கைதவரோடிணங்கிக்கொண்டும் வாழும் மக்களைப் பதடிகள் என்று என் கூறக்கூடாது? உண்பதற்கும் உறங்கு வதற்குமே தாங்கள் இப்பூவுலகிற் பொருந்தியதாக நினைத்து உடம்பெல்லாம் வயிறாக வீங்கும்படி தின்னும் சோறுநிறை துருத்திகள் வேலையொன்றுஞ் செய்யாதவராய்க் கவலையற்றவர்போற் காணக்கிடப்பதைப் பார்த்து “அவர்நிலை அம்மா பெரிது” என்று கூறி மகிழவேண்டாம். உண்பதற்கும் உறங்குவதற் குமே நாம் படைக்கப்பட்டோம் அல்லோம்; வேலைசெய்து நல்லாற்றிற் பொரு ளீட்டி அற்றாரழிபசிதீர்த்து, அதனான் வருமின்பத்தை யனுபவித்து, முடிவில் இவ்வுலகினின்று விடுதலைபெறவே நாம் யாவரும் அவனால் அனுப்பப்பட்டுள் ளோம். கோயில்களைப் பரிபாலிக்கும் தருமகர்த்தர்கள் எப்படித், தேவஸ்தான போர்டாருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்களோ, அப்படியே நாமும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள காலம், இடம், பொருள் முதலான வற்றிற்குக் கடவுளுக்குக் கணக்குக் காட்டக் கடமைப்பட்டவராயுள்ளோம். ஆனால் இக்கணக்கில் பொய்க்கு இம்மியளவுகூட இடமில்லை. எல்லாம் வல்ல இறைவர் நமக்காக நமது கணக்கை எழுதுவித்து வருகிறார். எழுதிய கணக்கை மாற்றமுடியாது. நாம் அவர்முன் போங்காலத்துப் பொய் சொல்ல முயலின் தீமையே. ஒப்படைக்கப்பட்ட காலம், பொருள் ஆகியவற்றைச் சரிவரப் பேணி, தக்க வழியில் செலவிட்டு வருவோமானால் அச்சமின்றி அவரை அணுக லாம்.

ஆதலால், காலமென்பது கணக்காகச் செலவிடப்பட வேண்டுமென்பது பெறப் படும். ஒரு காரியத்தைச் செய்யத் தமக்கு நேரமில்லை என்று கூறுகின்றவர்கள் சோம்பேறிகளுக்கே ஒப்பாவர். உண்மையில், அவர் அக்காரியத்தைச் செய்ய நினைப்பின், எப்படியாவது செய்துவிட முடியும். காலமில்லை என்று கூறு வதற்குப் பதிலாக மனமில்லை என்று கூறுதலே பொருந்தும். காலமில்லை யென்று கழறுகிறவர்களிற் பலர் தங்காலத்தைப் பலவழிகளில் வீணாக்கி, அதனைத்தான் இல்லாமற் செய்கின்றனர். “நாய்க்கு வேலையுமில்லை, நிற்க நேரமுமில்லை” என்ற பழமொழியை அடிக்கடி புதுப்பித்துவர ஏதுவாக உள்ளனர் இவர்.

வேறு சிலர், “வேலையிருந்தால் மனத்துக்குக் கவலை; கவலையே ஆளைக் கொல்லுகிறது” என்று சொல்லி, பணியொன்று மியற்றாது, திண்ணைத் தூங்கிகளாகவும், சுவர்த்தாங்கிகளாகவும் கிடக்கின்றனர். இம் முழுச்சோம் பேறிகளெல்லாம் முள்ளுள்ள வேலிகளே. இவர்கள் தாம் பழியையும் பாபத்தையும் விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். “வேலையில்லாத்தலை வீணெண் ணக்கலை” யென்பது பொய்யா? சோம்பேறிகளுக்கே தீயவற்றை நினைத்து அவற்றைச் செய்யக்காலமும் மனமும் உண்டாகின்றன. இவர்கள் அல்லிக்கொடிகளைப் பார்த்தாவது நல்லறிவு கொள்ளார்களா? அல்லியும் தனக்கு ஓராண்டிற்கு வேண்டிய சத்தைச் சேகரித்து வைத்துக்கொள்ளுகிறதே!

வேறு ஒன்றும் வேண்டாம்; எறும்புகளின் சுறுசுறுப்பைப்பார்த்து இவர்களும் அவற்றின் சுறுசுறுப்பிற் கொஞ்சம் விலைக்காவது, கடனுக்காவது, தர்மமாக வாவது வாங்கிக் கொள்ளக்கூடாதா?

நிமிடங்களுக்குஞ் சிறகுகள் உண்டு. அவை பறந்து போனால் மீண்டும் வாரா. அரிதன்றோ சென்ற நாள் தரற்கு! காலத்தை அழிப்பவர்களைக் காலம் அழிக்கும் என்பது நிச்சயம். ஆதலால், முன்னெச்சரிக்கையாகவேயிருந்து காலத்தை ஒழுங்கான நல்ல முறையில் செலவிட வேண்டும். இவ்வுலகில் "தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர்" வெகு சிலரே. ஆயினும் தத்தமக்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டு பிறர்க்காகவும் முயலுவதற்குக் கடவுள் நேரந் தந்துள்ளார் என்று சொல்லுவது பிழையாகாது. அறியாமையாகிய இருளான் மூடப்பட்டுக் கிடப்பவர்க்குக் கல்வியாகிய ஒளியைக்காட்டுதலும் ஆற்றுமாக்கள் அரும்பசி களைதலும், பிணிவாய்ப்பட்டுழல்வோர்க்கிரங்கி வேண்டுவதைச் செய்தலும் நம்முடைய கடன். வீண் வம்புப் பேச்சுப்பேசாமல், உலக வழக்கத்திற்கொப்ப, சுற்றத்தாரோடும் நண்பர்களோடும் அளவளாவியிருத்தல் காலத்தைக் கொல்லுவதாகக் கருதற் பாலதன்று. எனினும், நல்லோர் பெரியோர் சான்றோர் இவருடன் கூடியளவளாவுதலே பெரும் பயன் தரற் பாலது. முற்காலத்திருந்த பெரியோர் புலவராயினோர் நமக்கு வைத்துப் போந்த செல்வங்கள் இருக்கின்றனவே; அவற்றையனுபவித்தால் எத்துணை இன்பம் உண்டாகும்! அந்நூல்களின் நயங்களை யாராயுங்கால் உண்டாகும் மகிழ்ச்சிக்கு எதனை ஒப்பாகக் கூறவியலும்? ஆதலால் நல்ல அறிவு நூல்களையும் கற்றல் வேண்டும். நல்லவற்றைக் கேட்டல் வேண்டும். மனத்தையுந் திடப்படுத்தும் சில தேகாப்பியாசங்களை அளவோடு கொள்ள வேண்டும். மனமும் தேகமும் உறுதியடைந்தாற் போதுமா? நமது உயிரையும் உறுதிப்படுத்தல் வேண்டும். உயிரையும் உறுதிப்படுத்தக் கடவுளே கதியாகும்.

முடிவாகக் கூறுமிடத்து, நமது காலத்தை உறக்கத்தில் அதிகமாகக் கழிக்கக் கூடாது. கடவுள் உறக்கமென்பதை யறியார். துஞ்சாக் கண்ணையுடைய மன்னர் பலர் நம் நாட்டில் வாழ்ந்துள்ளார்கள். அக்பர் "தூக்கம் மனிதனுக்கு அவசியமேயாயினும் அதிகமாகத் தூங்கினால் சோம்பல் ஏற்படும்" என்று நினைத்து இரவில்கூடச் சிறுபொழுதே தூங்கிவந்தார். நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று மணி நேரம் தூங்கினவர்கள் தாம் அரிய பெரிய செயல்கள் இயற்றியிருக்கிறார்கள். உதாரணமாக, மேல்நாட்டு வெல்லிங்டன், நெப்போலியன், கிளாட்ஸ்டன், எடிசன் இவர்களைக் குறிப்பிடலாம். ஆதலால், பீடும், பெருமையும் புகழும் புண்ணியமும் அடைய விரும்பும் ஒவ்வொருவரும் பகலுறக்கத்தை யறவே யொழித்து, இரவுத் துயிலைச் சுருக்கி, முன்னேரம் பிச்சைக்காரனாயிருந்தாலும் பின்னேரம் கப்பற்காரனாகலாம் என நினைத்துத் தாளாற்றுவாராக! தம்பி வரும் வரை தபால் வண்டி காத்திராது. ஆதலால், செய்யுங் காரியத்தைக் காலத்திற் செய்ய வேண்டும். அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையாதாதலால், இளமைப் பருவத்திலிருந்தே காலத்திற் காரியத்தைச் செய்யும் பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

10. பாரதியாரின் கடிதம்.

புதுச்சேரி,
19 ஜூலை, 1915.

எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையைப் பராசக்தி நன்கு காத்திடுக.

தம்பி—மாதத்திற்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக் கமலத்திலே பேரறிவாகிய உள்ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகு மென்றே கருதுகிறேன்.

நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுதற்கு வழியாகும். வேறு வழியில்லை.

ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரில் தெரிந்துகொள்ள முடியுமானால்—தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மை யுண்டாகும்! தமிழ், தமிழ், தமிழ்—என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம்—தமிழில் ஏறிக் கொண்டே போகவேண்டும்.

தம்பி, நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்த முண்டாகிறது. தமிழனை விட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது. தம்பி—உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற!— மேலே, மேலே, மேலே.

தம்பி—தமிழ் நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

* * * *

உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மை யில்லாமலிருந்தபடியால் உடனே "ஜவாப்" எழுத முடியவில்லை. குழந்தை புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாசத்திற்கு "நாட்டுப் பாட்டுகள்" அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞானபானுவிலும் பிரசுரம் செய்வித்திடுக. "புதுமைப் பெண்" என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி—உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உன தன்புள்ள,
பாரதி.

[11. தமிழுணர்ச்சி.

[யோகி சுத்தானந்த பாரதியார்.]

வள்ளுவர், இளங்கோ, கம்பர்—இம்மூவர்களும் நமது தமிழ்த்தாய் உலகிற் கீந்த மூன்று கவியரசர்கள் ஆவார்கள். இவர்கள் தமிழரசியின் செங்கோலும், அரியணையும், பொன்முடியும் போல்வார்கள். உலகுள்ள மட்டும் தமிழை வாழவைக்கும் உயிர் நாடிகள் போன்றவர்கள் இப்புலவர்கள் : வள்ளுவர், வையகத்தில் வாழ்வாங்கு வாழும் அறம் பொருளின்பவழிகளைத் துலக்கினார் ; இளங்கோ, அவ்வழிகளில் நடக்கும் ஆருயிர்வாழ்வின் இன்ப துன்பங்களைச் சொல்லோவியமாக விளக்கினார் ; கம்பர், வாழ்வுக்கலையில் ஒரு தெய்வ வொளியை வீசி, அரக்கத்தன்மையை நீருக்கும் தரும வீரக் கனலைத் தூண்டினார் வள்ளுவர், வாழ்வின் இலக்கணத்தைச் செய்தார் : மற்றிருவரும் வாழ்வின் இலக்கியத்தைச் செய்தனர். இளங்கோ பெண்ணின் பெருமையை விளக்கினார். கம்பர், பெண்ணின் பெருமையைக் காக்கும் வீறு பெற்ற ஆண்மையைத் துலக்கினார். இக்கவியரசர் மூவரும், நமக்கு வற்றாக் கலைச் செல்வத்தை வழங்கி யிருக்கின்றனர்.

இளங்கோ அடிகள் வழங்கிய செல்வம் நாகரிக வுலகில், தமிழரின் உரிமையைக் காக்கும் தனிப்பெருஞ் செல்வமாம் ; அதுவே ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு நாம் அடைந்திருந்த சீர்மையைத் துலக்கும் சிலப்பதிகாரச் செல்வம் ! இலக்கிய வுலகிற் சிறந்த வரலாற்றுக் காப்பியம் சிலப்பதிகாரமேயாம். ஷேக்ஸ்பியரின் நாடகப் புலமையும், காளிதாஸனது காவியப் புலமையும், ஹோமரின் வீரச்சுவையும், தாந்தேயின் (Dante) அருட்சுவையும், கெத்தேயின் (Goethe) சொல்லினிமையும், விர்ஜிலின் (Virgile) பொருட்செறிவும் ஒருங்கே யமைந்த உயர் நடைக்காப்பியம் இளங்கோவடிகளின சிலப்பதிகாரமாகும். குறளைப்போலவே சிலப்பதிகாரமும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளையும் தன்னகங் கொண்டது ; அதன் தொடர்ச்சியான மணிமேகலையில், நான்காவதாகிய வீடு பேறு விளக்கப்படுகிறது. சிலப்பதிகாரம், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழணிந்து உள்ளத்தை அள்ளும் காப்பிய மணி. இது, பழந்தமிழரின் ஒப்பற்ற அற வாழ்வையும், வீரத் திறனையும், அருங்கலைச் சிறப்பையும், தொழிலாற்றலையும், வாணிகப் பெருக்கத்தையும், அரசியல் மாண்பையும், சமரச உணர்வையும், தமிழ்ப் பெண்டிரின் மதிப் பொலிவையும், கற்புக்கனலையும் நேர் நின்று விளக்கும் வரலாற்றிலக்கியம். பழந்தமிழர் பெருமையை உலகம் அறிய, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமே போதும்.

சிலப்பதிகாரத்தைப் படிக்குங்கால், நிகழ்காலத்தை மறந்து, கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகிய கடைச் சங்க காலத்திற்குப் போய் விடுகிறோம். அங்கே நாம் காண்ப தென்னே ! அசோகன், அகுஸ்தன், ஸீஸர், நெப்போலியன போன்று பெருமை பெற்ற முத்தமிழ் வேந்தர், தனித் தமிழரசை ஆளுகின்றனர். சேரன், செங்குட்டுவன், திருமா வளவன், நெடுஞ்செழியன் ஆகிய வீர மணிக்குன்றனையார், நமது தமிழன்னையின் உரிமையைக் காத்து நிற்கின்றனர். நாம் முதலிற் குறித்த மூன்று கவியரசர் பெருமை போன்றே, இம்மூன்று புவியரசர் பெருமையும் உலகளாவி விளங்குகிறது ! இவர் வெற்றிக்

கொடி விண்ணளாவிப் பறக்கிறது. இமயமலையில் தமிழ் வேந்தரது விற்கொடியும், மீனக் கொடியும், புலிக் கொடியும் பொறிக்கப் பெற்றுள்ளன. ஆரிய வேந்தர், தமிழ் அரசரை நன்கு மதித்து வணங்குகின்றனர். ஐரோப்பாவினின்று கிரேக்கரும், உரோமரும் வந்து, நம் தமிழ் வேந்தருக்கு ஊழியஞ் செய்கின்றனர். குடிதழுவிக் கோலோச்சும் இத்தமிழ் வேந்தர், எச்சமயத்திலும், எவர்முறையீட்டையும் கேட்டு நீதி வழங்குகின்றனர். செங்கோல் கோடிய விடத்துத் தமது உயிரையும் விடத்துணியும் மன்னர் தமிழகத்தில் அரசு புரிகின்றனர். சேர சோழ பாண்டிய வீரர், தரைப்போரிலும், கடற்போரிலும் பகைவரை வென்று, வாகை சூடி, வெற்றி முரசடித்து அணியணியாக வருகின்றனர். நீதி மன்னரின் வீரப்புகழைக் கவி மன்னர் பாடுகின்றனர். பூம்புகார், மதுரை, வஞ்சி, உறையூர், காஞ்சி முதலிய நகரங்கள், தற்காலச் சிற்பிகளும் வியக்கும்படியான அழகு நிரம்பி விளங்குகின்றன. அவற்றிலுள்ள மாந்தர் வாழ்வெல்லாம் ஓர் அருங்கலைத் திருவிழாப்போற் பொலிகின்றது. ஆண்மையும், பெண்மையும், வாழ்க்கையின் இருதிற மின்சார சக்திகள் போல இணைந்து, மங்களமான மனையறங் காக்கின்றன. தேவரும் வணங்கத்தகும் கற்பரசிகள் நமது சமுதாயத்தை வளர்க்கின்றார்கள். சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய பல மதங்கள் ஒன்றையொன்று நன்கு மதித்துத் தம் கொள்கைகளைக் கடைப்பிடித்துச் சமரசமாக ஓங்குகின்றன. ஆண்களைப் போலவே பெண்களும் அறிவாற்றல்களில் முன்னேறி விளங்குகின்றனர். இளங்கோ, சாத்தனார், நக்கீரர், கபிலர், பரணர் போன்ற கவிகளுடன், ஔவை, ஆதிமந்தியார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார் போன்ற பெண்களும் சங்கம் வீற்றிருந்து இலக்கியத்தொண்டு செய்கின்றனர். எத்திசையும் முத்தமிழ் முழக்கம் ! எம்மருங்கும் செல்வச் செழிப்பு, கல்வி விளக்கம் ! உப்பு வாணிகர் முதல் கூல வாணிகர் ஈறாகவுள்ள எல்லா வாணிகரும் தம் தொழில்களை முறையுடன் நடத்துகின்றனர். கைத்தொழில்கள் பெருகி வளர்கின்றன. எல்லாரும் பெரும்பாலும் நாட்டுப் பண்டங்களையே கையாளுகின்றனர். தமிழர் உடுத்து மிஞ்சிய ஆடைகள் பிறநாடுகட்கு ஏற்றுமதியாகின்றன ! தமிழ்க் கப்பல்கள் மேற்கிலும், கிழக்கிலுஞ் சென்று ஏராளமான பொற்குவைகளுடன் திரும்பி வருகின்றன. திரைகடலோடுந் தமிழ் வணிகர் குபேரராக விளங்குகின்றனர். இல்லறச் செல்வர் செல் விருந்தோம்பி, வருவிருந்து பார்த்து நிற்கின்றனர். யாழும் குழலும், ஆடலும் பாடலும், கலையும் கவிதையும், அழகும் அணியும், அறமும் அன்பும் சமூக வாழ்வை இன்புறுத்துகின்றன . . . ஆ ! ஆ ! அத்தகைய வீறு பெற்ற இன்பத் தமிழகத்தை, உண்மைத் தமிழகத்தை, சுதந்திரத் தமிழகத்தை இனிக் காண்பேமோ ! அக்காலம் போன்றே இக்காலமும், நமது தமிழரசி, கலைச் செங்கோல் பிடித்து அறிவுலகையாளக் காண்பேமோ ! தமிழும் தமிழரும் தமிழகமும் மீண்டும் பழம் பெருமை பெற்று விளங்க வேண்டும். தமிழீர், உங்கள் நரம்புகளில் தமிழ் வீறு ஏறுக ! அந்த வீற்றையேற்றும் ஒரு சக்திக் கனல் சிலப்பதிகாரத்தில் உள்ளது. சிலம்புச் செல்வத்தை நுகர்மின் ; நீவிர் உலகின்முன் மாண்புறத் தலைநிமிர்ந்து நடக்கலாம்.

12. போப்பையர்.

[ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.]

போப்பையர் என்று தமிழ் நாட்டார் போற்றும் அறிஞர் பத்தொன்பதாம் வயதில் தமிழ் நாட்டில் கிருஸ்தவப்பணி செய்ய வந்தார்; அறுபதாண்டளவும் இங்கே யிருந்து அரும்பணி ஆற்றினார்; பின்பு சீமைக்குச் சென்று ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிக்கும் ஆசிரியராக அமர்ந்து, இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் தொண்டு செய்தார். சுருங்கச் சொல்லின், இவர் மேலை நாட்டார்க்குத் தமிழகத்தின் கலைச் செல்வத்தைக் காட்டினார்; நீதியின் நீர்மையை உணர்த்தினார்; ஞானச் செல்வத்தை வழங்கினார்; தமிழ்ப் பணியே தம் உயிர்ப்பணியாகக் கொண்டார் என்னலாம்.

இத்தகைய பெரியாரது தமிழ்த் தொண்டு நெல்லை நாட்டிலே தொடங்கிற்று. அந்நாட்டில் சாயர்புரம் என்னும் ஊர் ஒன்று உண்டு. அது கிருஸ்தவ நாடார்கள் நிறைந்த சிற்றூர். அங்கே கிருஸ்துமத போதகராகச் சென்றார் போப்பையர்; அவ்வூரில் உள்ள சிறுவர்களின் அறிவை வளர்ப்பதற்கு ஒரு கல்லூரி அமைத்தார்; சிறந்த ஆசிரியர்களைப் பாடம் சொல்ல நியமித்தார். எல்லாக் கலைகளும் அங்கே போதிக்கப்பட்டன. பள்ளிப்பிள்ளைகள் தினந்தோறும் படிக்க வேண்டிய பாடம்: தமிழ், லத்தீன், கிரீக்கு, ஈப்ரு; அதற்குமேல் கணிதம், தர்க்கம், தத்துவம். இவற்றைப்போதிப்பதற்குப் பகற் பொழுது போதாமையால் இரவிலும் நெடுநேரம் பாடம் நடைபெற்றது. சாயர்புரக் கல்லூரி ஒரு சர்வகலாசாலையாக விளங்குதல் வேண்டும் என்பது போப்பையரின் ஆசை. தன் இளங் குழந்தை இனிது வளர வேண்டும் என்ற ஆசையால் அளவுக்கு அதிகமாக உணவை யூட்டி வயிற்று நோயை வரவழைக்கும் தாய் போல் பள்ளிப் பிள்ளைகளின் அறிவை வளர்க்க கருதிய போப்பையர் பளுவான பாடங்களைச் சுமத்தி மலைப்பையும் திகைப்பையும் உண்டாக்கினார். மாணவர்கள் ஒருவர் பின்னே ஒருவராய் நழுவத் தொடங்கினர். ஐயரும் ஊக்கம் இழந்து, உடல் நலம் குன்றி ஆங்கில நாட்டுக்கு இளைப்பாறச் சென்றார்.

இரண்டு ஆண்டுகள் இளைப்பாறி மீண்டும் இவர் தமிழ் நாட்டுக்குப் பணி செய்ய வந்தார். தஞ்சாவூரிலும், நீலகிரியிலுள்ள உதகமண்டலத்திலும், மைசூர் தேசத்தில் உள்ள பங்களூரிலும் பல்லாண்டுகளாகச் சிறந்த தொண்டு புரிந்தார். நீலகிரியிலுள்ள "ஊட்டி" யில் போப்பையர் பத்தாண்டு பாடசாலை யொன்று நடத்தினார். அப்பொழுது அம்மலையில் வாழும் தோடர் என்ற சாதியாரோடு இவர் நெருங்கிப் பழக நேர்ந்தது. தோடர் பேசும் பாஷையில் பாட்டும் இல்லை; வசனமும் இல்லை. எருமை மாடு மேய்ப்பதே அவர்கள் தொழில். அன்னார் குடியிருக்கும் ஊருக்கு மந்து என்பது பெயர். கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுச் சென்னை அரசாங்கத்தாரும் செல்வரும் சென்றடைகின்ற 'ஒத்தக்கமந்து' என்ற ஊரின் பெயரில் அச்சொல்லைக் காணலாம். ஒத்தைக்கல் மந்து என்று தோடரால் இடப்பட்ட பெயரே ஒட்டக்கமண்டாயிற்று என்று சிலர் கருதுகின்றார்கள். நீலகிரித் தோடர் பேசும் பாஷையைப் போப்பையர் ஆராய்ந்து அதன் இலக்கணத்தை எழுதியுள்ளார்.

தமிழ் மொழிக்கு ஐயர் செய்த தொண்டுகள் பலவாகும். தமிழில் அமைந்த அருமையான நீதி நூல்களை இவர் படிப் படியாகக் கற்றார். பள்ளிச்சிறுவர் முதலாகப் பரிபக்குவமடைந்த பெரியோர் ஈறாக எல்லோர்க்கும் பயன்படத்தக்க முறையில், தமிழ் மொழியில், நீதி நூல்கள் அமைந்திருக்கக்கண்டு மனம் மகிழ்ந்தார். ஐந்து வயதில் பள்ளிக்குச் செல்லும் சிறுவர் "அறஞ்செய விரும்பு", "ஆறுவது சினம்" என்று பாடம் ஓதுகின்றார்கள். அறிவு வளரவளர நாலடியார், திருக்குறள் முதலியவற்றை நுணுகி நுணுகி ஆராய்கின்றார்கள். நீதி நூல்வகையில் தலை சிறந்த பெருமை தமிழ் நாட்டில் நாலடியாருக்கும் திருக்குறளுக்கும் உண்டு. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பது இந்நாட்டுப் பழமொழி. நாலு என்பது நான்கு அடிகளில் அமைந்த நாலடியார். இரண்டு என்பது ஈரடிகளில் அமைந்த திருக்குறள். இவ்விரண்டு நீதி நூல்களிலும் அடங்கிய அறிவுச் செல்வத்தை ஆராய்ந்தறிந்தார் போப்பையர்; அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க ஆசைப்பட்டார்.

போப்பையர் காலத்திற்கு முன்னமே திருக்குறள் சில பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. வீரமாமுனிவர், திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் லத்தீன் பாஷையில் மொழி பெயர்த்திருந்தார். ஜெர்மன் பாஷையில் கிரால் என்பவர் திருக்குறளை முற்றும் மொழி பெயர்த்திருந்தார். பிரெஞ்சு பாஷையில் எரியல் என்பவரால் திருக்குறளின் ஒரு பாகம் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. ஆங்கிலத்தில் அதனை மொழி பெயர்க்க முயன்றவர்கள் அரைகுறையாக விட்டுப்போயினர். எல்லீசர் என்னும் அறிஞர் பதின் மூன்று அதிகாரங்களின் சில பகுதிகளை மொழி பெயர்த்திருந்தார். துருவர் என்னும் ஆங்கிலப் பாதிரியார் அறுபத்து மூன்று அதிகாரங்களை மொழி பெயர்த்து விட்டு விட்டார். இந்த நிலையில் இருந்த திருக்குறளை முற்றும் ஆராய்ந்து, நன்றாக மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் வெளியிட்ட பெருமை போப்பையருக்கே உரியதாகும்.

அந்நூலை மொழி பெயர்க்கும் பொழுது கிருஸ்துநாதர் அருளிய சில கருத்துக்களும், திருவள்ளுவர் கருத்துக்களும் ஒற்றுமையுடையனவாக இருக்கக் கண்டு இவர் உள்ளம் பூரித்தார். இவ்வகையில் போப்பையர் மனத்தைக் கவர்ந்த குறள்களில் இரண்டொன்றைப் பார்ப்போம்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."

என்ற குறள் இவர் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. கிருஸ்து நாதரது வாழ்க்கையின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதுபோல் தோன்றிற்று இப்பாட்டு. தீயவர் பலர் கிருஸ்து நாதரைத் துன்புறுத்தினார்கள். கழியால் அடித்தார்கள்; அவர் மீது காறி உமிழ்ந்தார்கள். இவ்வாறு அவரை ஒறுத்த சிறியோர் ஒரு நாளை இன்பத்தையே பெற்றார்கள். ஆனால் அச்சிறுமையெல்லாம் பொறுத்திருந்த கிருஸ்து நாதரோ உலகமுள்ளளவும் அழியாப் புகழ் பெற்றார். இக்கருத்தைக் குறட் பாவிலே கண்டு வியப்புற்றார் போப்பையர். இன்னும் தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கொள்கை. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்துவிடல்" என்பது வள்ளுவர் வாக்கு. கிருஸ்து நாதரைப்

பகைவர்கள் சிலுவையில் அறைந்த பொழுது அவர் பேசிய வாசகத்தின் பொருளும், வள்ளுவர் குறளின் பொருளும் ஒன்றுபட்டிருக்கக் கண்டார் போப்பையர். கையிலும் காலிலும் இருப்பாணி அறைந்து பொறுக்க முடியாத துயரம் விளைத்த பகைவரைக் கிருஸ்து நாதர் வெறுத்தாரல்லர்; சபிக்க நினைத்தாரல்லர்; அவரிடம் இரக்கம் கொண்டார்; அவரை மன்னிக்கும்படி ஆண்டவனை வேண்டிக்கொண்டார். இது இன்னா செய்தார்க்கு நன்னயம் செய்தல் அன்றோ ?

இங்ஙனம் சிறந்த ஒற்றுமைகளைத் திருக்குறளிலும் கிருஸ்தவ நூல்களிலும் கண்ட போப்பையர் மனத்தில் ஒரு கருத்துத் தோன்றிற்று. திருமயிலாப்பூரில் வாழ்ந்த திருவள்ளுவர், அர்ச். தாமஸ் முதலிய கிருஸ்தவ சீலர்கள் அங்குச் செய்த போதனையை அறிந்து இவ்வுண்மைகளை வெளியிட்டிருக்கலாம் என்னும் பொருள்பட இவர் கூறியுள்ளார். இது அறிஞர் ஆராய்தற்குரியதாகும்.

இன்னும் போப்பையர் மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் என்னும் அருள் நூலையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழ் நாட்டில் திருவாசகத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. படிப்போர் மனத்தை உருக்கிப் பத்தியை விளைவிக்கும் பான்மையில் ஒப்பற்ற நூல் திருவாசகம். “ திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் ” என்பது இந்நாட்டில் நெடு மொழியாக வழங்குகின்றது. அந்நூலில் அடங்கிய அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்களையும் போப்பையர் ஆராய்ந்து கற்றார். ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் ஆசிரியராக இருந்தபோது இவர் அந்நூலை மொழி பெயர்க்கத் தொடங்கினார். அப்போது இவருக்கு வயது எழுபத்தேழு. எடுத்த வேலை முடியுமளவும் உயிர் இருக்குமோ என்ற ஐயம் உள்ளத்தில் எழுந்ததுண்டு.

ஒரு நாள் மாலைப்பொழுதில் பால் நிலா எங்கும் பரந்திருந்தது. பாலியல் கலாசாலைத் தலைவரும் போப்பையரும் முற்றத்தில் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப் பெரியாரிடம் திருவாசகத்தின் பெருமையை எடுத்துரைத்தார் போப்பையர். “ இப்படிப்பட்ட புத்தகத்தை அச்சிட்டு வெளியிடல் வேண்டும் ” என்று அழுத்தமாகக் கூறினார் பெரியவர். அவரது ஆர்வத்தை அறிந்த போப்பையர், “ ஐயனே, அவ் வேலை முடிவதற்கு நெடுங்காலம் செல்லுமே; நான் சாகா வரம் பெற்றவன் அல்லனே ” என்றார். அது கேட்ட பெரியவர் போப்பையர் தாளைப் பற்றிக்கொண்டு, “ அறிஞரே! ஒரு பெரிய வேலையைத் தொடங்கி நடத்துவதுதான் நெடுங்காலம் வாழ்வதற்குரிய வழி. அவ் வேலை முடியுமளவும் உயிர் இருந்தே தீரும் ” என்று உறுதியாகக்கூறினார். அவ்வாசகத்தைப் போப்பையர் தாரகமொழியாகப் போற்றினார்; தளர்வுற்ற பொழுதெல்லாம் அத்தாரக மந்திரத்தை நினைத்து ஊக்கமும் உறுதியும் பெற்றார்; எண்பதாவது பிறந்த நாளன்று திருவாசகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினார். அப்பெரும் பணியை நிறைவேற்றிய போது இவர் மனம் சிறந்த இன்பம் அடைந்தது. தோன்றாத் துணையாக நின்று உதவிய இறைவன் கருணையை ஐயர் வாயார வாழ்த்தினார்; நேர் முகமாக நின்று ஆசியுரை கூறி ஊக்கப்படுத்திய பாலியல் கலாசாலைப் பெரியார் அம்மகிழ்ச்சியிற் கலந்து கொள்ளாது மாண்டு போயினரே என்று மனம் வருந்தினார்.

போப்பையர் வெளியிட்ட திருவாசகத்தை அறிஞர் உலகம் ஏற்றுப் போற்றுவதாயிற்று. பாரிஸ் நகரத்தில் தேசியக் கலாசாலையில் பேராசியராக விளங்கிய சூலியன் வின்சன் என்பவர் ஒரு தமிழ்ப் பாட்டுப் பாடிப் போப்பையரைப் புகழ்ந்தார். “ இரு வினை கடந்த செல்வன் இசைத்த வாசகத்தை யெல்லாம், வருவிளையாட்டாற் போலும் மறுமொழியதனில் வைத்தீர் ” என்பது வின்சன் வாக்கு. தமிழ் நாட்டுப் புலவர்கள் ஐயர் திருவாசகத்தைப் பாட்டாலும் உரையாலும் பாராட்டினார்கள்.

இத்தகைய அரிய தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தும் வகையில் மிகுந்த கைப்பொருளைச் செலவிட்டார் போப்பையர். அவற்றை ஆங்கில நாட்டார் அதிகமாக வாங்கி ஆதரிக்கமாட்டார் என்பது இவருக்கு நன்கு தெரியும். ஆயினும் தம் கைப்பொருளைச் செலவு செய்தேனும் தமிழ் நாட்டாருடைய கலைச் செல்வத்தையும் ஞானத்தையும் மேலைநாட்டாருக்குக் காட்டுதல் வேண்டும் என்பதே இவர் கருத்து. “ தமிழ்ப் புலமையே வறுமைக்கு நேரான வழி ” என்று இவர் அடிக்கடி கூறுவதுண்டு. எனவே பயன் கருதாது தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்த பெருமக்களில் போப்பையரும் ஒருவர் என்று கூறுதல் ஒரு சிறிதும் மிகையாகாது.

பழுத்த புலவராகிய போப்பையர் எண்பத்தாறுவது வயதை எட்டினார். அப்பொழுது ஆங்கிலநாட்டுக் கலைஞர் சங்கம் அவரைப் பெருமைப்படுத்த முன் வந்தது. மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியாருடைய வயிர விழாவின் ஞாபகார்த்தமாக ஆங்கில நாட்டு ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டி என்ற சங்கத்தில் ஒரு தங்க மெடல் பரிசு ஏற்படுத்தியிருந்தார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அச்சங்கத்தார் தேர்ந்தெடுக்கும் அருங்கலைவாணர் ஒருவருக்கு அப்பரிசினை வழங்குவர். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறும் ஆண்டில் அப்பரிசு பெறுதற்கு உரியவராகப் போப்பையர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது இந்திய நாட்டு மந்திரியாக இருந்த சர் ஜான் மார்லி என்பவர் தலைமையில் ஒரு பாராட்டுச் சபை கூடிற்று. போப்பையர் தமிழுக்குச் செய்துள்ள அரிய சேவைகளைத் தலைவர் புகழ்ந்து பேசித் தங்கப் பதக்கத்தை அவருக்குப் பரிசாக அளித்தார். பல அறிஞர் ஐயரைப் பாராட்டி ஆசி கூறினார்கள்.

அதற்கு அடுத்த ஆண்டில் போப்பையர் இவ்வுலகத்தை விட்டகன்றார். தமது கல்லறையில் “ போப்பையர்—ஒரு தமிழ் மாணவர் ” என்ற வாசகம் எழுதப்படல் வேண்டும் என்று இவர் ஆசைப்பட்டார். இவரது தமிழ் ஆர்வத்திற்கு இவ்விருப்பம் ஒன்றே போதிய சான்றாகுமன்றோ ? எந்நாட்டிற் பிறந்தாலும், எந்நாட்டில் இறந்தாலும் போப்பையரைப் போன்றவர்கள் சிறந்த தமிழரே என்பதில் தடையும் உண்டோ ?

குறிப்புரை.

1. வாழ்த்துப் பகுதி.

கடவுள் வாழ்த்து.

இப்பாடலைப் பாடியவர் நாமக்கல் கவிஞர் என்று சிறப்பாக அழைக்கப்படும் தேசியக் கவி. வெ. இராமலிங்கம் பிள்ளையாகும். இவர் 1888-ம் ஆண்டில் பிறந்தவர். கவிபாடுவதிலும், ஓவியம் வரைவதிலும் மிகத்திறமையுள்ளவர். தேச சேவையில் ஈடுபட்டவர். தேச பக்தியையும் உயர்ந்த எண்ணங்களையும் ஊட்டும் பல பாடல்களை எளிய நடையில் பாடி இருக்கிறார். கவிகளாகவே நீண்ட கதைகளும் எழுதியுள்ளார். "என் கதை" என்ற அவர் சுயசரிதை மிகவும் இனிமைவாய்ந்தது. இவரது கவித்திறமையைப் போற்றித் தமிழ் மக்கள் சமீபத்தில் அவருக்கு ஒரு பண முடிப்பு அளித்தார்கள். இவர் இப்பொழுது நாமக்கல்லில் வாழ்ந்து வருகிறார்.

இங்கு வந்துள்ள பாடல்களில் பரம்பொருளை எந்தப் பெயரால் வணங்கினும் ஒன்றுதான் என்றும் அதனால் நமக்குள் பிளவுகள் கூடாது என்றும் கவிஞர் வற்புறுத்துகிறார். இது தமிழன் இதயம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

1. அரன், அரி—சிவன், திருமால.
2. வந்திப்போம்—போற்றித் தொழுவோம்.

II. அறவுரைப் பகுதி.

1. திருக்குறள்.

குறள் வெண்பாக்கள் 1330 கொண்டது திருக்குறள். பொதுவாக வெண்பா நான்கு அடிகளால் வரும். ஆனால் குறள் வெண்பாவோ இரண்டு அடிகளால் வரும். குறுகிய வெண்பா ஆகையால் இது குறள் வெண்பா எனப் பெயர் பெற்றது.

மிகச் சிறந்த குறள் வெண்பாக்களால் ஆனதால் இந்நூலுக்குத் திருக்குறள் என்றே பெயர் ஏற்பட்டது. திரு என்பது அதன் பெருமையை உணர்த்தும் அடைமொழி. இதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன. திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். அவர் 1800 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். மதுரையில் வசித்தார் என்றும், மயிலாப்பூரில் வசித்தார் என்றும் கூறுகின்றனர்.

திருக்குறள் இணையில்லாத சிறந்த நூல். உலகத்தோரெல்லாம் மதிக்கும்படியானது. அனைவருக்கும் பொதுவானது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. ஆங்கிலம் முதலிய வேற்று நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதனாலேயே, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் பாடியிருக்கின்றார். திருக்குறளை அனைவரும் போற்றிப் படிக்கவேண்டும்.

1. ஆற்றும்—செய்யும்; என்னோற்றான் கொல்—என்ன தவம் செய்தானோ.
2. நன்றி—நன்மை.
3. அல்ல மற்றுப் பிற—பிற அல்ல என்பது உரை நடை. மற்று என்பது அசை நிலை.
5. உள்ளுதல்—எண்ணுதல்; நீர்த்து—பெருமை உடையது.

2. நாலடியார்.

நான்கு அடிகளையுடைய வெண்பாக்களினால் ஆகிய இந்நூலுக்கு அதன் சிறப்பைக் கருதி நாலடியார் என்றே பெயர் வந்தது. [ஆர் என்பது சிறப்பைக் காட்டும் விகுதி] நாலடியாரில் உள்ள பாடல்களைச் சமண முனிவர்கள் பலர் இயற்றியதாகச் சொல்லுகிறார்கள். இந்நூலின் காலத்தைக் கடைச் சங்க காலம் என்று கூறுவர்.

நாலடியார் திருக்குறளோடு சேர்த்து எண்ணப்படும் பெருமையுடைய நீதி நூலாகும். "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்பது பழமொழி. இதில் 400 வெண்பாக்கள் உள்ளன. பதுமனார் என்பவர் இதற்கு அதிகாரம் வகுத்தார். இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

1. உறுவது—நம்மை அடையும் காரியங்கள். உலகு என்பது உயர்ந்தோரைக் குறிக்கும்.
2. யானை அனையவர்—யானை போலக் கபடத்தன்மை வாய்ந்தவர்; ஒரீஇ—விட்டு; செறீஇ—பொருந்தி; மெய்—உடல்; குழைக்கும்—ஆட்டும்.

3. பழமொழி.

இந்நூல் 400 வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு பாட்டிலும் அதன் கருத்தை விளக்க ஒரு பழமொழி கூறப்பட்டிருப்பதால் இதற்குப் பழமொழி என்றே பெயர் வந்தது. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு வரிசையில் சேர்ந்தது.

இந்நூலை இயற்றியவர் முன்றுறை அரையனார். இவர் சமண மதத்தினரென்றும் பாண்டிய நாட்டில் வாழ்ந்த சிற்றரசரென்றும், கடைச்சங்க காலத்தவர் என்றும் கூறுவார்கள்.

1. உரை முடிவு—உரைத்த வழக்கின் முடிவு; காணான் இளமையோன்—கண்டறிய முடியாத இளவயதினன்; நரைமுதுமக்கள்—நரைத்த கிழவர்கள்; நரை முடித்து—நரை மயிராலாகிய முடியைத் தலையில் தரித்து; சொல்லால்—வழக்குரைத்தவர் சொற்களைக் கொண்டே ஆராய்ந்தறிந்து; முறை செய்தான்—நீதி வழங்கினான். சோழன்—கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன்; குலவிச்சை—தத்தம் குலத்துக்குரிய வித்தை; கல்லாமல் பாகம் படும்—கற்பதற்கு முன்பே செம்பாகமாக அமையும்.

2. மாட்சி—பெருமை; பிறிதினால்—செல்வம், குலம் முதலானவற்றால்; எவன் ஆம்—என்ன ஆகும்? [இல்லை என்பது குறிப்பு] பொறியின்—பதிக்கப்பட்ட; மணிபொன்—இரத்தினம், பொன் இவற்றால் ஆன ஆபரணங்கள்; சாந்தமும்—சந்தனக் குழம்பும்; இன்ன—இவைபோன்ற; 'ஆடை இல்லாதவன் அரை மனிதன்'.

4. நான் மணிக்கடிகை.

இதுவும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. நான்கு நான்கு இரத்தினத் துண்டு (கடிகை - துண்டு) போன்ற நான்கு உயந்த பொருள்கள் ஒவ்வொரு பாட்டிலும் சொல்லப்பட்டிருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இது கடவுள் வாழ்த்து உட்பட 106 செய்யுட்களை உடையது. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார். இவரது காலம் கி.பி. 200-க்கு முற்பட்டதெனக் கருதுகிறார்கள்.

1. உள் நின்ற வேட்கை—நெஞ்சிலுள்ள விருப்பம்; அகல்நீர்ப் புலத்தியல்பு—நீரால் விளையும் அகன்ற நிலத்தின் தன்மை; புக்கான்—நிலத்துக்குரியவன்; நிலத்தியல்பு—நிறைந்து மக்களின் இயல்பு, நல்லோர் பொருட்டே மழை பெய்யுமாதலால் வானம் உரைத்துவிடும் எனப்பட்டது; முகன்—முகம்: போலி.

2. இழமை—நட்புரிமை; வசைமனம்—கெட்ட கருத்து; வீவு இலா—அழிவில்லாத; வீடு—மோட்சம்.

III. தொடர் நிலைச் செய்யுள்.

அரிச்சந்திர புராணம்.

அரிச்சந்திரன் சத்தியங் காத்துப் பெரும் புகழ் அடைந்த கதையை இப்புராணம் கூறுகின்றது. இது பத்துக் காண்டங்களை உடையது. எட்டாங்காண்டமாகிய மயான காண்டத்தினின்றும் இப்பகுதியிலுள்ள செய்யுட்கள் எடுக்கப்பட்டுள்ளன. அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர் நல்லூர் வீர கவிராயர். அவர் கி.பி. 1524-ம் ஆண்டில் இதனை அரங்கேற்றினார் என்று சொல்வார்கள்.

அரிச்சந்திரனுக்குக் கடைசிச் சோதனை வந்துவிட்டது. அவன் கையிலேயே அவன் மனைவியைக் கொடுத்து வாளால் வெட்டிவிடும்படி உத்திரவு பிறக்கின்றது. நாட்டை இழந்து, மனைவியையும் மகனையும் அடிமையாக்கிப் பிறகு தானும் அடிமையாகிய அரிச்சந்திரன் உறுதிகுலையாமல் சத்தியத்தைக் காத்து வருகின்றான். மகன் இறந்ததைக் கண்டும் அவன் உள்ளம் கலங்கவில்லை. இப்பொழுது மனைவியை வெட்டப் போகிறான். இந்த நிலையிலேயும் அவன் வாய்மையைப் புறக்கணிக்கிறானா ? விசுவாமித்திரர் சோதித்துப் பார்க்கிறார். ஆனால் முடிவு என்ன ? பாக்களைப் படித்துப் பாருங்கள்.

1. குழவி—குழந்தை ; துணித்தனள்—கொலை செய்தாள் ; திட்டியால்—கண்ணால் ; அரிவை—இங்கு சந்திரமதி.

2. மின்னை—மின் போன்ற சந்திரமதியை ; இறுகுற விசித்து—இறுக்கிச் கட்டி ; மன்னை—காசி வேந்தனை ; தன்வயின்—வீரபாகுவிடம்.

3. துன்னு—நெருங்கிய.

4. உம்பர்கோன்—தேவேந்திரன் ; கோதிலான்—குற்றமற்றவனாகிய அரிச்சந்திரன் ; அற்றை நாள்—அந்த நாள் ; ஊறு—இடையூறு ; இற்றை நாள்—இந்நாள்.

5. வார்சடை—நீண்ட சடை ; சாற்ற—சொல்ல ; வச்சிரபாணி—இந்திரன் ; அந்தரம்—ஆகாயம்.

6. கௌசிகன்—விசுவாமித்திரன் ; நோதகவு—துன்பம்.

7. கட்டுரை—வாய்மை ; மதி—அறிவு ; வாயிழந்து—பேச வகையின்றி.

8. வாசவன்—இந்திரன் ; கூய்—அழைத்து.

9. பாசம்—கயிறு.

10. பரவி—வணங்கி.

11. பசுபதி—சிவபெருமான் ; வாய்மை—சத்தியம்.

12. நிறை—கற்பு ; இறுதி—முடிவு.

IV. பல் சுவைப் பகுதி.

1. புறநானூறு.

புற நானூறு எட்டுத்தொகை என்னும் பிரிவினைச் சேர்ந்த கடைச் சங்க நூல்களுள் ஒன்றாகும். மிகச்சிறந்த பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்று இது. இதிலுள்ள பாடல்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே எழுதப்பட்டவை. அவற்றிலிருந்து பழந்தமிழரின் வீரம், பழக்க வழக்கம், முதலியவற்றை ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

பொன்முடியார் என்பவர் பெண்பாற் புலவர். அவர் இப்பாட்டில் தாய், தந்தை, அரசன், மகன் முதலியவர்களின் முக்கிய கடமைகளைப் பற்றிக் கூறுகிறார். இதிலிருந்து தமிழ் மகளின் கடமை உணர்ச்சியும் வீரமும் புலனாகும்.

புறந்தருதல்—பேணிப் பாதுகாத்தல் ; சான்றோன்—அறிவு நிரம்பியவன் ; நன்னடை—நல்ல ஒழுக்கம், உயர்வு ; ஒளிறு—பிரகாசிக்கின்ற ; சமம்—போர் ; முருக்கி—அழித்து ; களிறு எறிந்து—யானைகளைக் கொன்று ; காளை—இளமை பொருந்திய வீரன்.

2. சீட்டுக்கவி.

புலவர்கள் செய்யுளிலேயே கடிதம் எழுதித் தம் விருப்பத்தைப் பிறருக்குத் தெரிவித்தார்கள். அப்படி எழுதும் கடிதத்திற்குச் சீட்டுக்கவி என்று பெயர். சீட்டுக்கவியில் அதைப் பாடுவோரின் பெருமையும், அதைப் பெறுவோரின் பெருமையும், வேண்டப்படும் பொருளும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இச்சீட்டுக்கவியை எழுதியவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்பவர். இவர் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பூதூர் என்னும் சிற்றூரில் வடுகநாத முதலியாருக்குப் புத்திரராகப் பிறந்தார். இவர் பிறவிக் குருடர். எனினும் பல நூல்களையும் மனத்தாலேயே ஓதியுணர்ந்தவர். கவி பாடுவதில் வல்லவர். சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் காலம் 17-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும்.

செழியனிடம் ஒரு குதிரை பரிசில் பெற விரும்பி அந்தகக் கவி வீரராகவ முதலியார் விடுத்த சீட்டுக்கவி இது.

விரகன்—திறமை வாய்ந்தவன் ; இமசேதுபரியந்தம்—இமயமலை முதல் சேது வரையில் ; சிரமசைத்திடும்—மெச்சிச் சிரக்கம்பம் செய்திடும் ; இணை எதிர்—ஒப்பு ; சேடாதிபன்—ஆதிசேஷன் ; திரிபதகை—கங்கை ; திரிபதகை குலசேகரன்—கங்கை குலத்தவருள் சிறந்தவன் ; தென்பாலை—தெற்குத் திக்கில் உள்ள ; புரந்து—காத்து ; கந்தருவம்—பண், குதிரை ; கந்துகம்—பந்து, குதிரை ; கோணம்—வளைந்தவாள், குதிரை ; கொக்கு—ஒரு பறவை, குதிரை ; பாடலம்—பாதிரிப்பூ, குதிரை ; மா—மா மரம், குதிரை ; சடிலம்—ஜடை, குதிரை ; கிள்ளை—கிளி, குதிரை ; அடை மொழியால் குதிரையையே இச் சொற்கள் உணர்த்துகின்றன.

3. சீதக்காதியின் கொடைத்திறம்.

சீதக்காதி என்பவர் ஒரு முஸ்லீம் வள்ளல். அவரது இயற் பெயர் ஷெய்கு அப்துல் காதர் என்பது. அவர் பாண்டிய நாட்டின் துறை முகமாகிய கீழக்கரையில் சற்றேறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். தமிழ்ப் புலவர்களை அவர் மிக அன்போடு ஆதரித்தார். அதனால் புலவர்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர். "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்பதால் அவர் கொடைத் திறமை நன்கு விளங்கும்.

அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களில் படிக்காசுப் புலவரும் ஒருவர். அப் புலவர் தொண்டைநாட்டிலுள்ள பொன் விளைந்த களத்தூரில் தோன்றியவர். இவர் செங்குந்த மரபைச் சேர்ந்தவர். இவர் தில்லைக்குச் சென்று கவி பாடிய போது, சிவகாமி அம்மை அருளால் பஞ்சாக்கரப் படிமீது பொற்காசுதோன்றிற்றென்றும், அவற்றைப் பெற்றதால் இவருக்குப் படிக்காசுப்புலவர் எனப் பெயர் வந்ததென்றும் கூறுவர்.

இவரது பாடல்கள் மிக இனிமை வாய்ந்தவை.

1. கார்தட்டிய—மழையில்லாது போன ; காரியப்பேர்—காரியஸ்தர்கள் ; தட்டினும்—தடுத்தாலும் ; தட்டுவாராமல்—முட்டுப்பாடு நிகழாமல்.

2. புல்லர்—அற்பர்.

4. கண்ணன் என் தோழன்.

சி. சுப்பிரமணிய பாரதியார் தமிழுக்குப் புதிய சுவையும், தமிழருக்குப் புதிய உணர்ச்சியையும் ஊட்டிய புதுமைக் கவி. பாரதியார் என்ருலேயே இவரையே குறிக்கும்படியான பெருமை பெற்றவர். வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் உயர்ந்த தேசீய கீதங்களையும், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய அழகிய கவிதைகளையும், புதிய நடையிலே வசன நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

பாரதியார் எட்டையபுரத்திலே 1882-ம் ஆண்டில் பிறந்தவர். தந்தையார் சின்னச்சாமி அய்யர்; தாயார் இலட்சுமி அம்மாள். இவர் 1921-ல் விண்ணுலகடைந்தார்.

தமிழுக்காக இவர் செய்துள்ள சேவையைப் போற்றி எட்டைய புரத்திலே ஒரு ஞாபகார்த்தக் கட்டிடம் கட்டுகிருர்கள். தமிழர்கள் மகிழ்வுடன் அதற்குப் பொருளுதவி செய்திருக்கிருர்கள். தமிழர்கள் அனைவரும் பாரதியாருடைய நூல்களைப் படிக்கவேண்டும்.

கண்ணன் பாட்டு மிக அழகிய கவிதை. இதில் பாரதியார் இறைவனைத் தாய், தந்தை, குழந்தை, சேவகன் என்றிப்படிப் பல வடிவுகளில் வைத்துப் போற்றுகிருர். இங்கு வந்துள்ளபகுதி தோழனுக வைத்துப் பாடிய பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

5. ஒரு பறவையின் சிந்தனை.

இப்பாடல் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் "மலரும் மாலையும்; என்ற கவிதைத் தொகுதியினின்றும் எடுக்கப்பட்டது. அவர் 1876-ம் ஆண்டில் திருவாங்கூரைச் சேர்ந்த சுசீந்திரத்திற்கு அருகிலுள்ள தேரூரிற் பிறந்தவர். இவர் பல கலாசாலைகளில் ஆசிரியராக இருந்து 1931 முதல் வேலையினின்று நீங்கி ஓய்வு பெற்றிருக்கிருர்.

இவரது பாடல்கள் எளிமையும் இனிமையும் பொருந்தியன. உயர்ந்த எண்ணங்களை எழுப்புவன. ஒவ்வொரு மாணவனும் அவசியம் படிக்கவேண்டியவை. இன்றும் அவருடைய புதிய பாடல்களைப் பல பத்திரிகைகளில் காணலாம்.

ஒரு பறவையின் சிந்தனை என்ற இப்பாடலில் பறவையின் எண்ணம் எங்ஙனம் விரிவடைகிறதென்பதைக் கவிஞர் கற்பனை செய்கிருர். இது ஒரு ஆங்கிலப் பாடலைத்தழுவி எழுதப்பட்டதாகும்.

2. ஈடறு—ஈடில்லாத; வையகம்—வைக்கோல் விடு.

AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS

IN INDIA

BANWARI LAL JAIN, 1719, Motikarta, Agra.
CHANDRAKANT CHIMANLAL VARA, Booksellers, Ahmedabad.
M. G. BAKSHI, Akola.
KITABISTAN, Publishers, Allahabad.
NEW BOOK COMPANY, Booksellers, etc., "Kitab Mahal," 188-90, Hornby Road, Bombay.
D. B. TARAPOREVALA SONS & CO., Bombay.
THACKER & CO. (LTD.), Bombay.
N. S. WAGLE, Circulating Agent and Bookseller, 6, Tribhuvan Road, Girgaon, Bombay.
THE BOOK COMPANY, Calcutta.
BUTTERWORTH & CO. (LTD.), 6, Hastings Street, Calcutta.
R. CAMBRAY & CO., Calcutta.
LAW BOOK SOCIETY, Publishers and Printers, 65/3, Harrison Road, Calcutta.
THACKER, SPINK & CO., 3, Esplanade East, Calcutta.
K. KRISHNA AYYAR BROTHERS, Booksellers, Publishers, etc., The Round, Trichur (Cochin State).
The Manager, THE HYDERABAD BOOK DEPOT, Hyderabad (Deccan).
The Secretary, OSMANIA UNIVERSITY STUDENTS' CO-OPERATIVE BOOK DEPOT, Lallaguda P.O., Hyderabad (Deccan).
SOUTHERN INDIAN AGRICULTURAL STORES, Jullundur.
The Director, "THE FRENCH INDIA GAZETTE," Karaikal.
M. R. APPADURAI, Bookseller, 57-A, Anderson Street, Esplanade, Madras.
THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA, Post Box No. 501, Park Town Madras.
CITY BOOK COMPANY, Post Box No. 283, Madras.
C. COOMARASWAMI NAYUDU AND SONS, 27 and 35, Chinnathambi Street, Madras.
HIGGINBOTHAMS (LTD.), Mount Road, Madras.
THE SWADESAMITRAN, LTD., Mount Road, Madras.
MACMILLAN & CO., LTD., Mount Road, Madras.
G. A. NATESAN & CO., Madras.
V. RAMASWAMI SASTRULU & SONS, 292, Esplanade, Madras.
P. VARADACHARI & CO., Booksellers, 8, Lingha Chetti Street, Madras.
Agent, THE SOUTH INDIA SAIVA-SIDDHANTA WORKS PUBLISHING SOCIETITY, LTD., 6, Coral Merchant Street, Madras.
VENKATRAMA & CO., Educational Publishers and Booksellers, Esplanade, George-town, Madras.
THE LITTLE FLOWER COMPANY, Educational Publishers and Booksellers, 56, Thambu Chetti Street, Georgetown, Madras, E.
V. PERUMAL CHETTI & SONS, 5, Stringers Street, Georgetown, Madras.
MOHAMED ALI HUSAIN, Educational Publisher and Proprietor, "Madina Press," Triplicane P.O., Madras.
T. KANAKAYYA, Retired Police Officer and Press Correspondent, Buckinghampet, Bezwada (Madras).
THE DECCAN PUBLISHING HOUSE, Huzur Road, Calicut (Madras).
The NATIONAL BOOKSTALL, Cannanore (Madras).
THE EDUCATIONAL SUPPLIES CO., 142-A, Ponnurangam Street, R.S. Puram, Coimbatore (Madras).
Secretary, RAJAJI STATIONERY DEPOT, Devakottai (Madras).
SRINIVAS & CO., Town High School Road, Kumbakonam, Madras.
E. M. GOPALAKRISHNA KONE, Pudumantapam, Madura (Madras).
K. BHOJA RAO & CO., Booksellers, Kodialbail, Mangalore (Madras).
M. SESHACHALAM & CO., Proprietors, The Hindu Press, Masulipatam (Madras).
B. VENKATARAMAN, Correspondent, Permanent Fund Buildings, Neela South Street, Negapatam (Madras).
D. SRI KRISHNAMURTI, Editor of "Grama Paripalana," Ongole (Madras).
THE HINDUSTAN PUBLISHING CO., LTD., Rajahmundry (Madras).
THE MODERN STORES, Salem (Madras).
The Proprietor, THE HOUSE OF KNOWLEDGE, Booksellers and Publishers, Palli-agraharam P.O., Tanjore (Madras).
SIVAGAMI PUBLISHING HOUSE, Booksellers and Publishers, Srivaikuntam, Tinnevelly (Madras).
S. KRISHNASWAMI & CO., Teppakulam Post, Trichinopoly Fort (Madras).
L. VAIDYANATHA AYYAR, Law Bookseller, Teppakulam P.O., Trichinopoly (Madras).
A. VENKATASUBBAN, Law Bookseller, Vellore (Madras).
BHAWNANI & SONS, Booksellers, etc., Connaught Place, New Delhi.
The Manager, THE INTERNATIONAL BOOK SERVICE, Booksellers, Publishers, News Agents and Stationers, Poona 4.
P. N. SWAMINATHA SIVAN & CO., Commission Agents, Booksellers, etc., Pudukkottai State. (Branches also at Karaikudi, Devakottai and Trichinopoly.)
The Proprietor, THE PUNJAB SANSKRIT BOOK DEPOT, Saidmitha Street, Lahore (Punjab).
MOHANLAL DOSSABHAI SHAH, Books Agent, etc., Rajkut.
B. S. MATHUR & CO., Chattur Vilas, Paota Civil Lines, Jodhpur (Rajputana).
THE BOOKLOVERS' RESORT, Booksellers and News Agents, Taikad, Trivandrum.

NOTICE.

Official publications may be obtained in the United Kingdom either direct from the office of the High Commissioner for India, India House, Aldwych, London, W.C. 2, or through any bookseller.

---

(38)

Secretary, E.& P.H.

Please see herewith a copy of the Tamil Text-Book f[...] Standard Public Examination 1948. The Higher Elementary [...] supposed to read this book. They will hate Tamil as [...] if these are the sort of text books that we print. [...] who is responsible for choosing this kind of paper, si[...] This is just like a report of Government, and books like [...] suitable for children. I do not see any reason why we sh[...] Government Press ~~to undertake~~ this work, if they are not a[...] the work in a proper manner. The Superintendent of the Gov[...] Press may be asked to explain why the book was printed in such a [...] paper in such a small printing as to make it difficult for children to read. From next year, I think we may allow the D.P.I. to print these boo[ks] elsewhere as he pleases. ~~The matter may be gone into and put up.~~ The matter may be examined & put up.

TSA
6-12-47

H.M.Education.

96559

A

SECRETARY TO GOVERNMENT, EDN. AND PUBLIC HEALTH DEPT.

SECRETARY, EDN. AND P. H. DEPT.
07 DEC 1947
GOVERNMENT OF MADRAS

E.P.H (93)

Please see the minutes of H.M.(Edn.) above. The remarks of the D.P.I. & the S.G.P. may be obtained with reference to 'A' above. ~~After the receipt of S.G.P.'s remarks the file may be put up.~~ ~~circulated to H.M.(E.)~~ A draft memo is put up for approval.

2. The eighth standard ex[amination] text books are printed, stock[ed and] supplied by the Govt. Press. The G[ovt.] sanction every year temporary sta[ff] for this purpose. No instructions a[s to] manner of printing the text books, get-up of the books etc are trace[able;] apparently there are none.

3. It should certainly be p[ossible] for the Govt. Press to print the b[ooks] in a more attractive form, using bl[...] paper and bold type, leaving more [...]

Through Special Section
@ 10.12.47.
10/12/47

pl. see
[illegible]
11.2.48.

(Y)

2

[b]etween the lines and
[arra]nging the ~~[illegible]~~ ~~portions of the~~
[the] matter in such a way that
[there] is sufficient space between
[lines] and between the pieces
[com]prised in each part. The S.G.P
[ma]y be asked whether he can-
[n]ot do this.

It is not known whether
proper instructions for printing
the books were given by the
educational authorities. If not,
a portion of the blame will
rest ~~on~~ on these authorities —.
The D.P.I. may also be asked
to offer remarks on this point —

[initials] 17/12/47 AST [initials] 17.12.47 [initials] 17/12/47 AS II AST

(Issued as memo. 96559.G3.47-1.Edn.2/17.12.47) p.1 cf.

From the S.G.P. MR/D8. dated 23.1.48. p.3 cf.
From the D.P.I. Re.NO. 29/T/48.2/16.2.48. p.9 cf.

Please see the remarks of
the S.G.P. and the D.P.I. at pp. 3 & 9 cf.
The S.G.P. states that (as) at the time p.3 cf.
of printing, bleached paper was not
available and as he was being

(36)

pressed for copies, unbleached pap[er]
was used and that as a mea[sure of]
economy, the spacing between lines [has]
been suspended since paper economy
came into force. He also states that
the form of the book is in conformity
with all other Text books such as boo[ks]
prescribed ~~by~~ for S.S.L.C., T.S.L.C. etc. [and] where
selections from different books are compi[led]
to form a text. and that the ~~ty~~[pe] [other]
than that used in the Text book in [the] ol[d]
are not available in the present [...]
& He states that he has no objection
to print the Text books at private
presses if the Govt. desire; but [the]
price of the book will be high(er).
p.9 cf. The D.P.I. states that the S.G.P. wa[s]
requested by the Secy. to the C.G.E.
to use better type, good white paper
and to leave sufficient space betw[een]
the lines printing only 35 lines [on]
each page of book. The D.P.I. al[so]
states that as regards the ~~type~~ get up of the
book it is (the) same from 1942. [He]
pp.5-7 cf. ~~suggests~~ states that the quality of the sample pages se[nt]
by the S.G.P. may be accepted
but remarks at the same time that [the]
type used therein is small and ~~He~~ fe[els]
that the type should be larger and
the No. of lines per page may be
restricted to 30 so that ~~the~~ more
space between the lines may be
provided. He also suggests that if
the types are not changed as repor[ted]
by the S.G.P. the question of printing
the books ~~at~~ in private presses
may be taken for consideration
~~The suggestions of the D.P.I.~~

37

~~and 'B' seem acceptable. The file may be circulated H.M. (Edn) for orders.~~

The type used in the sample pages at pages 5-7 c.f. is slightly better than that used [in] the Tamil Text-Book kept below but it cannot be called satisfactory. The reading of such type will still cause strain to the eyes. The S.G.P. however states that no better type with the Indian languages is available at present with the Press. He states that he is considering the question of changing these types and will send shortly a report to Govt. [on] the matter. The ~~so~~ promised report has not yet been received. It is for consideration whether the S.G.P.'s proposals for ~~the~~ changing the types may be awaited or whether the Text-Books may even now be ordered to be printed in private presses.

The case may be circulated to H.M. (Edn) with reference to his minutes on page 1 ante.

~~Through~~

Thro. [illegible]
Sd/
26.2.48

The suggestion of the D.P.I at 'A' on page 9 c.f. may be accepted. According to the D.P.I the types should be larger; such types are not available [in] the Govt. press. The book will have therefore to be printed [at] private presses. The S.G.P. has reported that the [price] per book will be higher if they are printed at [private] presses. What this price will be should be known before proceeding further. Ask the S.G.P. to report what the [price] of the text book will be after carrying out the suggestions of the D.P.I at 'A' above (1) if the books are printed at the Govt. Press and (2) if they are printed [at] private presses. In respect of (1) information may [be] called for the printing of the books with the available small types and large types as proposed.

Sd/
27.2.48

A draft memo. is submitted for approval.

Sd/
3.3.48

Sd/ [illegible]
3.3.48

Printing at Govt. Press may be continued but the paper used for printing should be well bleached.

Sd/
22.4.48

Even now the types [illegible]

Thro. [illegible]
Sd/ 22.4.48

(Issued as Memo. No. 96559 [illegible] from the S.G.P. No. Comp./Mis. 2/7 [illegible]

With reference to the memo. [illegible] above, the S.G.P. has submitted his [illegible] in which he states that, as regards the [illegible] price of the publication, an uniform [illegible] is generally fixed based on the total No. [of] copies printed in all the five languages Tamil, Telugu, Urdu, Kannada and Mal[ayalam] and so the question of fixing the price [taking] into consideration the Tamil Edition alone does not arise.

The S.G.P. has also forwarded specimen proof ~~4 copies~~ set up in 10 [illegible] type restricting 30 lines to a page in [illegible] 8vo. size with more space between the [illegible]. The proof seems to be acceptable.

The case may be circulated to H.M. (Edn) for orders as to whether the specimen set at pp. 15-18 c.f. may be accepted and the bo[oks] continued to be printed at the Govt. Press or whether the bo[oks] may hereafter be printed at private presses the arr[angements] for which may be left to the D.P.I. [illegible]

Sd/
19/4/48

22.4.48

Sd/
22.4.48

Even now the type cannot be said to be very satisfactory. I think D.P.I. may be asked to arrange for the printing at a private press.

Sd/
As. (Ch.)

Not only is the print not quite good, but it will be a strain for the children to go through such types as this. Besides, the size must be of the usual book size whereas this is of the ordinary Government

Thirdly, the paper also must be better. If the Government [illegible] come up to the mark, the books can be given to Private [illegible]esses. [illegible] may be noted that the books must be published in time before the [ne]xt school year begins.

TSA
30-4-48

[P]lease see the minutes of H.M.(Edn) at pp. 5-6 above.

~~[Ord]ers whether the S.G.P.I. may be asked to improve the [typ]e, the size of the book and paper as on the lines of H.M.(Edn)'s minutes. Subject to orders a draft Memo is submitted for approval.~~

draft Memo to the D.P.I. is submitted for approval. Finance may see before issue.

SECRETARY, EDN. AND P.H. DEPT.
30 APR 1948
GOVERNMENT OF MADRAS

E.P.H. No. 96559.B3.47.4
4.5.48
(with a book)

3.5.48

ASST. SECRETARY TO GOVERNMENT
4 MAY 1948
34730
FINANCE DEPARTMENT

Finance (Accts B)

The draft memo below may be perused [and] the case returned to E.P.H.

It is presumed that if the copies are to be printed at private [pres]ses, the sale price will be so fixed that [the] transaction will not result in any loss to [Government]. 'A'

Fin. No 34730 AB-1
E.P.H. 4.5.48
(with a book)

4-5-48

4.5.48

E.P.H.(B3)

The presumption of Finance at 'A' above is [corre]ct. This has also been made clear in [the] draft memo below. The draft may issue as amplified.

ASST. SECRETARY TO GOVERNMENT
4 MAY 1948
EDUCATION AND PUBLIC HEALTH DEPT.

4.5.48

5.5.48

pp. 15-16

33003

(Issued as Memo. No. 96559.B3.47.5 Edn. d/5.5.48)

The papers may now be recorded for future reference.

5.5.48

6.5.48

G.O. No. 1138 Edn. d/6.5.48

Abstract:- Text books - Tamil Text book (for detailed study) for the VIII Std. Public Examn. - printing [illegible]

6.5.48